REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மே 5 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்
89 (1932 - 2021)

வரு. 89 இல. 105 | May 05, Wednesday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## தொடர்பாடல்கள்
### நீதியமைச்சின் விசேட அறிவித்தல்

நீதியமைச்சு சம்பந்தமான செய்திகளை நீதியமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரே ஊடகங்களுக்கு வழங்க முடியும் என்றும் அதுவே உத்தியோகபூர்வமானது எனவும் நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டால் நீதியமைச்சர் அல்லது நீதியமைச்சின் செயலாளரினால் 06

## காஸ் விலையில் அதிகரிப்பு இல்லை
-அமைச்சர் உதயகம்மம்பில

**ஷம்ஸ் பாஹிம்**



சமையல் எரிவாயு விலையில் மாற்றம் தொடர்பாக எந்தவொரு யோசனையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று இணை அமைச்சரவை பேச்சாளரும் எரிசக்தி அமைச்சருமான உதய கம்மம்பில தெரிவித்தார்.

எரிவாயு விலைகள் அதிகரிக்கப்படுமா என்று நேற்று அரசு தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் 06

## நாட்டின் பொருளாதாரத்தை கவனத்திற்கொள்வது அவசியம்
# நாட்டை முடக்க முடியாது நாளாந்தம் 25,000 PCR
### அவசியம் தேவையான அனைத்து தடுப்பூசி, உபகரணங்களுக்கு அரசு ஏற்பாடு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கருத்திற் கொண்டு முழு நாட்டையும் முடக்க முடியாது. தற்போதுள்ள நிலையில் நாளொன்றுக்கு 25 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக நாளொன்றுக்கு 440 இலட்சம் ரூபா செல



வாகின்றன. கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி வழங்குவதே ஒரே தீர்வாகும். அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்குவதன் மூலமாக முழுமையாக வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியுமென சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார்.

கொவிட்19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் 06



படை வீரர்கள் நினைவு மாதத்தை பிரகடனப்படுத்தி தேசிய படை வீரர்கள் கொடி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று (04) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அணிவிக்கப்பட்டது. ரணவிரு சேவா அதிகார சபையின் பதில் தலைவர் திருமதி சோனியா கோட்டேகொடவினால் படை வீரர்கள் கொடி ஜனாதிபதிக்கு அணிவிக்கப்பட்டது. பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரட்னவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

# கொவிட் பரவலை கட்டுப்படுத்த அரசு வலுவான நடவடிக்கை



- படுக்கைகளின் எண்ணிக்கை 5000 ஆக அதிகரிப்பு
- தடுப்பூசி தட்டுப்பாட்டிற்கு மாற்று வழி
- PCR பரிசோதனை அதிகரிப்பு

**ஷம்ஸ் பாஹிம்**

கொவிட் பரவலை கட்டுப்படுத்த சுகாதாரத் துறையும், ஜனாதிபதி செயலணியும் மிகவும் திட்டமிட்ட மற்றும் வலுவான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மருத்துவமனை படுக்கைகளின் எண்ணிக்கையை 4,000, 5,000 ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பதிரண தெரிவித்தார்.

தடுப்பூசி தட்டுப்பாடு குறித்து உலக சுகாதார அமைப்பு (WHO) கவனம் செலுத்தி வருவதாகவும், எதிர்காலத்தில் இந்த பிரச்சினை தீர்க்கப்படும் என்று நம்புவதாகவும் தெரிவித்த அவர் PCR பரிசோதனையை மேற்கொள்வதற்குத் 06

## சனியன்று சகல ஆலயங்களிலும்
# மஹா மிருத்யுஞ்சய ஹோம பூஜை வழிபாடு
### பஞ்ச ஈஸ்வரங்களில் விசேட ஏற்பாடு



எதிர்வரும் சனிக்கிழமை மாலை 5.46 மணியளவில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எண்ணக்கருவிற்கு அமைய இலங்கை நாட்டிலுள்ள 06

## பல்கலைக்கழகம் செல்லும் காலத்தை குறைப்பதற்காக
# சாதாரண தரப் பரீட்சை ஆகஸ்டில் உயர்தரப் பரீட்சை டிசம்பரில்



**ஷம்ஸ் பாஹிம்**

க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையை ஆகஸ்ட் மாதத்திலும், க.பொ.த (உயர் தரப்) பரீட்சையை டிசம்பர் மாதத்திலும் நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். 06



எந்த இடத்திலும் ஒரு தடவையேனும்
**பொய் சொல்லாதவன் எனும் நற்பெயரை எடுத்தவன் நான்** 03



இலங்கை கடற்பகுதிக்குள் நுழைந்த
**11 இந்திய படகுகளை தடுத்து நிறுத்திய கடற்படை** 03

**முப்பது நாட்களில் 1,959 விபத்துக்கள்**
205 பேர் பலி; 1254 காயம் 03

## TNA – SLMC இணைவு;
# அரசியல் ரீதியாக விவேகமானதல்ல
### சித்தார்த்தன் அதிரடி கருத்து



TNA - SLMC இரு கட்சிகளும் இணையப் போவதாகக் கூறுவது அரசியல் ரீதியாக விவேகமானதல்ல என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைக்கான அடுத்த 06


## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 04– 08 |
| --- | --- |
| சஹர் | 04–22 |
| சுபஹ் | 04–37 |
| சூ.உதயம் | 05–57 |
| லுஹர் | 12–09 |
| அஸர் | 03–27 |
| மஃரிப் | 06–19 |
| இஷா | 07–32 |

Halo
Complete Family Protection
Hotline: 077 4648855


# ரஷ்ய ஸ்புட்னிக்-வி- தடுப்பூசிகள் முதற்தொகுதி நாட்டை வந்தடைந்தன
### அமைச்சர் சன்ன ஜயசுமன விமான நிலையத்தில் பொறுப்பேற்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையின் கொரோனா தொற்றுக்கெதிரான போராட்டத்துக்கு உதவும் நோக்கில் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட 15,000 ஸ்புட்னிக்-வி தடுப்பூசி டோஸ்கள் நேற்று அதிகாலை நாட்டை 06

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியீடு
### 1,94,297 பேர் பல்கலைகளுக்கு தகைமை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று பிற்பகல் வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க பரீட்சார்த்திகள் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் தமது பெறுபேறுகளை பார்வையிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்தார். 06

## விக்கல் வீராச்சாமி



கமல் ஐயா தோத்தது சனத்துக்கு சந்தோசம் போல கிடக்குது, யாரும் கவலைப்பட்ட மாதிரி தெரியல....

தோக்க வச்சதே சனம்தானே, எப்படி கவலைப்படும், வெண்டு வந்தா அரசியலிலும் நடிச்சு விருதுகள் வாங்கிடுவார் எண்டு சனம் பயந்து போச்சுது போல கிடக்கு...!!!

## கல்முனை விவகாரம்;
# எமது முயற்சி தொடரும் சமலுடனும் பேச்சுவார்த்தை



கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தலின் எமது பணி முயற்சி தொடரும் எனவும் இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் 06

## கொரோனா தொற்றுக்கான சிகிச்சைகள்;
# எத்தகைய நெருக்கடிகளையும் எதிர்கொள்ள தயார் நிலையில்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுகாதாரத்துறை அதிகாரிகளும் பாதுகாப்புத் துறையினரும் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நிலையில் எத்தகைய நெருக்கடி நிலையையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 06




# சர்வதேச செய்திகள்

## மெக்சிகோ மெட்ரோ மேம்பாலம் உடைந்து விழுந்ததில் 23 பேர் பலி



மெக்சிகோ தலைநகரில் ரயில் சென்றுகொண்டிருக்கும்போது மெட்ரோ மேம்பாலம் உடைந்து விழுந்ததில் 23 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

இதன்போது பல ரயில் பெட்டிகள் பரபரப்பான வீதியில் விழுந்ததில் ஒரு கார் வண்டி நொறுங்கியுள்ளது. இடிபாடுகளில் மேலும் பல வாகனங்கள் சிக்கி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தை அடுத்து உயிர் தப்பியவர்களை மீட்கும் முயற்சியில் மீட்புப் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 70 பேர் வரை காயமடைந்திருப்பதாக கூறப்படுகிறது. பலரும் இடிபாடுகளில் சிக்கியிருக்கும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக அஞ்சப்படுகிறது.

'இடி முழக்கம் போன்ற சத்தத்தை கேட்டோம். அனைத்தும் உடைந்து விழுந்தன' என்று இந்த விபத்தில் உயிர் தப்பிய 26 வயதான மரியானா என்பவர் எல் யுனிவர்ஸ் என்ற செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கர பூகம்பத்தை அடுத்து இந்த மேம்பாலத்தில் வெடிப்பு ஏற்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனினும் அது பற்றி தெரிந்ததும் நிர்வாகம் அதனை சரி செய்ததாக அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

மெக்சியோ சிட்டியின் மெட்ரோ ரயில் போக்குவரத்து உலகின் மிகப் பெரிய விரைவு போக்குவரத்து அமைப்புகளில் ஒன்றாக உள்ளது. இதன் மூலம் ஆண்டுக்கு 1.6 பில்லியன் பயணிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதில் விபத்துக்குள்ளாகி இருக்கும் லைன் 12 பாதை தலைநகரின் மெட்ரோ அமைப்பிற்கு மேலதிகமாக சேர்க்கப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது.

## தடுப்பூசி பற்றாக்குறையை நீக்க உலக சுகாதார அமைப்பு முயற்சி




கொவெக்ஸ் தடுப்பூசிப் பகிர்வுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நீக்கும் முயற்சியில் உலக சுகாதார அமைப்பு ஈடுபட்டுள்ளது.

இந்தியாவின் சீரம் நிறுவனம், தடுப்பூசிகளை வழங்க முதலில் ஒப்புக்கொண்டதை நிறைவேற்ற முடியாமல் போகலாம்.

இந்நிலையில், அந்த அமைப்பு உலக அளவில் நோய்ப்பரவல் மீட்சிக்கான முயற்சிகளை அதிகரிக்க ஜி7 தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் உச்சநிலை மாநாட்டில் அது தொடர்பில் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு அது கேட்டுக்கொண்டது.ஜி7 நாடுகளின் உதவியின்றி இந்த சுகாதார நெருக்கடியைத் தீர்க்க முடியாது என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்தது.

தடுப்பூசிகள், பரிசோதனைகள், சிகிச்சைகள் ஆகிய வளங்கலுக்கான நிதியை அந்நாடுகள் கொண்டிருப்பதாக, அமைப்பின் தலைமைச் செயலாளர் டொக்டர் டெட்ரோஸ் கெப்ரியேஸஸ் கூறினார்.

அவருடைய கூற்றை ஆதரித்த, பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் கோர்டன் பிரவுன் நோய்ப்பரவல் இன்னும் மோசமாகிவருவதாக எச்சரித்தார்.

## கொரோனா பரவலுக்கு மத்தியில் பாகிஸ்தானில் சமய ஒன்றுகூடல்



பாகிஸ்தானில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்திருக்கும் நிலையில் நாட்டின் கிழக்கு நகரான லாஹோரில் ஆயிரக்கணக்கான ஷியா முஸ்லிம் வழிபாட்டாளர்கள் தமது மதச் சடங்கிற்காக முகக்கசவங்களும் இன்றி ஒன்று திரண்டுள்ளனர்.

அண்டை நாடான இந்தியாவிலும் சமய ஒன்று கூடலை அடுத்தே நோய்த் தொற்று தீவிரம் அடைந்த நிலையில் பாகிஸ்தானிலும் அவ்வாறான நெருக்க ஒன்று ஏற்பட்டுள்ளது. பெரும் ஒன்றுகூடல்களுக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்தபோதும், முஹமது நபியின் தோழரும் அவரது மருமகனுமான இமாம் அலியின் மரணத்தை நினைவுகூரும் நிகழ்வை தடுப்பதில் மதத் தலைவர்கள் தோல்வி அடைந்துள்ளனர்.

இந்தியாவில் அண்மையில் கும்பமேளா உட்பட மதச் சடங்குகளில் மில்லியன் கணக்கான யாத்திரிகர்கள் பங்கேற்ற நிகழ்வே அங்கு நோய்த்தொற்று தீவிரம் அடைய காரணம் என்று குற்றம்சாட்டப்படுகிறது. இந்தியாவின் நிலை குறித்து பாகிஸ்தான் உன்னிப்பாக அவதானித்து வருவதாக பாக். அரசு அண்மையில் அறிவித்திருந்தது.

இந்நிலையில் லாஹூரில் நடைபெறும் ஷியா முஸ்லிம்களின் மதச் சடங்கில் எட்டு முதல் பத்தாயிரம் வழிபாட்டாளர்கள் பங்கேற்பதாக கணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் வேறு நகரங்களிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மூன்றாவது அலை கொரோனா பாதிப்பை கட்டுப்படுத்த பாகிஸ்தான் போராடி வருகிறது. அங்கு 800,000 நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 18,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

## மியன்மாரில் பொட்டலத்தில் இருந்த குண்டு வெடித்ததில் ஐவர் உயிரிழப்பு


மியன்மாரில் பொட்டலத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

பொறுப்பில் இருந்து நீக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இராணுவ எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்த பொலிஸ் அதிகாரிகள் மூவரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர்.

மேற்கு பாகோவின் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் வெடிப்பு நேர்ந்தது.

கடந்த திங்கட்கிழமை இரவு மேலும் இரண்டு நகரங்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் இருவர், மேக்வே வட்டாரத்தில், மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

மியன்மார் இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.



அது தொடர்பில் சர்வதேச வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாக மியன்மார் தேசிய ஒருமைப்பாட்டு அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

## 06 இலட்சம் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஆறு இலட்சம் கொரோனா தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதனை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அரசாங்கத்தின் தவறால் அது இடம்பெற்றதொன்றல்ல எனஆரம்பசுகாதாரசேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கொவிட்19 சவால்களுக்கு மத்தியில் நாட்டில் காணப்படும் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்று கடந்த சில வாரங்களாக அதிகரித்திருக்கின்றது. இந்த தொற்று நிலை அடிக்கடி மாற்றமடையும் தன்மை கொண்டது. அதனால் திடீரென தொற்றாளர்கள் அதிகரிக்கலாம். மரணங்கள் அதிகரிக்கலாம். அதனால் அதற்கு ஏற்றவகையில் நாங்கள் முகம்கொடுத்து இதனை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்க்கட்சி கூறுவது போல் இது அரசின் தவறால் ஏற்பட்டதல்ல.

மேலும் பி.சி.ஆர். பரிசோதனைகளை அரசு திட்டமிட்டு குறைக்கவில்லை. கடந்த சில மாதங்களாக கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படும் வீதம் குறைவாக இருந்தது. அதனால் பி.சி.ஆர் பரிசோதனைகளும் குறைவடைந்தன. இது சாதாரணமாக இடம்பெறுவதாகும். ஆனால் தற்போது கடந்த மாதம் 12ஆம் திகதிக்கு பின்னர் பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரித்திருக்கின்றோம். வெறுமனே பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு மாத்திரம் இதனை கட்டுப்படுத்த முடியாது. அதனால் மக்கள் தேவையற்ற நடமாட்டங்களை தவிர்ந்து கொண்டு, கொரோனா தொடர்பான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பின்பற்றி செயற்பட்டால் இதனை கட்டுப்படுத்த முடியும்.



இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட எஸ்ட்ரா செனெகா தடுப்பூசி முதலாம் கட்டம் ஏற்றியவர்களுக்கு அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏற்றுவதற்கு மேலும் 6 இலட்சம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. 6 இலட்சம் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதனை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அரசாங்கத்தின் தவறால் அது இடம்பெற்றதொன்றல்ல. எதிர்பாராத வகையில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையால், எமக்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.எனவே எஸ்ட்ரா செனெகா முதலாவது கட்ட தடுப்பூசி ஏற்றிக் கொண்டவர்களுக்கு அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏனைய தடுப்பூசியுடன் கலந்து வழங்க முடியுமா? என்ற பரிசோதனை நடைபெற்று வருகின்றது என்றார்.

## ரிஷாத்தை ஏன் பாராளுமன்றுக்கு அழைத்து வரவில்லை

### முஜிபுர் ரஹ்மான் சபையில் கேள்வி

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீன் எம்.பி. கோரிக்கை விடுத்தும் அவரை ஏன் பாராளுமன்றம் அழைத்துவர முடியவில்லையென ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. முஜிபுர் ரஹ்மான் சபாநாயகரிடம் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்தால் அவரை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாந்து, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் ஆலோசனைக்கமைய இது அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ரிஷாத் பதியுதீன் நேற்று சபைக்கு அழைத்து வரப்படவில்லை. இது தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் எம்.பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கேள்வி எழுப்பினார். அது தொடர்பில் ஆராய்வதாக சபாநாயகர் கூறினார்.

அதன் பின்னரும் ரிஷாத் பதியுதீன் சபைக்கு அழைத்து வரப்படவில்லை. இந்நிலையில் எழுந்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யான முஜிபுர் ரஹ்மான் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதில் அவர்,

இது தொடர்பில் காலையில் கேட்கப்பட்டபோது சபாநாயகரின் அனுமதி கிடைக்கவில்லையென குற்றப்புலனாய்வு பிரிவினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சபாநாயகர் அனுமதி கொடுத்ததாக கூறப்பட்ட பின்னர் இப்போது குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரி ஒருவருக்கு கொரோனா ஏற்பட்டுள்ளதால் ரிஷாத் பதியுதீன் எம்.பி. யை பாராளுமன்றம் அழைத்துவர முடியவில்லையென கூறப்படுகின்றது. இது தொடர்பில் ஆராய வேண்டும் என்றார்.



மனோ கணேசன் M.Pயின் நெறிப்படுத்தலில் அவரது தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி நிர்வாக செயலாளரும், ஜனநாயக இளைஞர் இணைய செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான ஜி.விஷ்ணுகாந்தினால் 6 ஆம் கட்டமாக கொழும்பு மாநரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடன் நவீன தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டபோது...

## காணி அபிவிருத்தி திருத்த சட்டம் அரசியலமைப்புக்கு முரணல்ல

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) என்னும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்லவென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பின்னர் இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின் போதே இதனை சபைக்கு அறிவித்த அவர் மேலும் கூறுகையில், அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) என்னும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்கு கிடைத்துள்ளது.

இச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை ஒன்றின் மூலம் நிறைவேற்றப்படலாமெனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதென்றார்.

## மேற்குவங்க முதல்வராகும் மம்தா பானர்ஜிக்கு செந்தில் தொண்டமான் வாழ்த்து



மேற்குவங்கத்தில் மூன்றாவது முறையாகவும் ஆட்சியை கைப்பற்றியுள்ள மம்தா பானர்ஜி தலைமையிலான திரினாமுல் காங்கிரஸுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

திரினாமுல் காங்கிரஸின் தேசியப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான டிராக் ஓப்ரேனுடன் தொலைபேசியில் உரையாடும் போதே அவருக்கும் முதல்வராக பதவியேற்கவுள்ள மம்தா பானர்ஜிக்கும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

திரினாமுல் காங்கிரஸ் மீது மேற்கு வங்க மக்கள் கொண்டுள்ள அபரீத நம்பிக்கை மற்றும் அதன் கொள்கைகள், இலக்குகள் மீதான ஈர்ப்பின் பிரகாரமே மூன்றாவது முறையாகவும் மம்தாவின் ஆட்சிக்கு மக்கள் ஜனநாயக அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். உங்கள் தலைமையில் மேற்குவங்கம் பல சாதனைகளை படைக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்றும் செந்தில் தொண்டமான் வாழ்த்தியுள்ளார்.

2021 மே 5 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්



**தொழுகை நேரம்**

04 முதல் 08 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.37 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.27 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 20

ராகுகாலம் : பகல் : 12.00 - 01.30வரை
சுபநேரம் : காலை : 09.00 - 10.30வரை

யோகம்: மரணசித்த யோகம்

திதி: நவமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)




## இரத்த உறவை பேணலின் முக்கியத்துவம்

ரமழான் நோன்பின் பிரதான எதிர்பார்ப்பு மனித உள்ளங்களில் இறை நினைவு, இறை பயத்தை ஏற்படுத்துவதாகும். அதற்கு ஏற்ப ஈருலகிற்கும் பொறுத்தமான வகையில் வாழ்வை சீரமைத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் தான் அல் குர்ஆன் இரத்த உறவுகளை பேணி நடப்பதை இறை நினைவுடன் இணைத்து குறிப்பிட்டிருக்கின்றது.

'இன்னும் (அல்லாஹ்வுக்கு பயந்து) இரத்த கலப்பு உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களை கவனித்தவனாகவே இருக்கின்றான்' (04 01) என்று அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கின்றது.

இதேவேளை நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டதாக அபுஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்து முடிந்த போது உறவானது எழுந்து அல்லாஹ்வின் அரியாசனத்தின் கால்களைப் பற்றிக் கொண்டு 'உறவுகளைத் துண்டிப்பதிலிருந்து உன்னிடம் பாதுகாப்பு கோரி இவ்வாறு நிற்கின்றேன்' என்றது. அப்போது அல்லாஹ் 'ஆம் உன்னைப் பேணி நடந்து கொள்பவனுடன் நானும் நல்ல முறையில் நடந்து கொள்வேன்' என்பதும் 'உன்னைத் துண்டித்து விடுபவனை நானும் துண்டித்து விடுவேன்' என்பதும் உனக்கு திருப்தி அளிக்கவில்லையா' எனக் கேட்டான். அதற்கு உறவு 'ஆம் இறைவா' என்றது. 'அல்லாஹ் இது உனக்காக நடக்கும்' என்றான். (ஆதாரம்: புகாரி)

அத்தோடு ஹுஸைன் (ரலி) அவர்கள் இரத்த உறவைத் துண்டித்து வாழ்பவன் குர்ஆனில் மூன்று தடவைகள் சபிக்கப்பட்டிருப்பதை நான் பார்த்துள்ளேன்' எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே இரத்த உறவுகளை பேணிக் கொள்வது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது தெளிவாகின்றது. அதனால் அல்லாஹ்வின் துண்டிப்புக்கு உள்ளாகி விடாமல் இரத்த உறவுகளைப் பேணிக் கொள்வதில் அதிக கவனம் செலுத்துவோம். அதற்கு ரமழான் நோன்பின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ள இறையச்சத்தை எடுகோளாகக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# 13 மாவட்டங்களில் 86 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகள் முடக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு, கம்பஹா, களுத்துறை,நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களின் மேலும் சில பிரதேசங்கள் நேற்று முதல் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை நாட்டில் 13 மாவட்டங்களைச் சேர்ந்த 86 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப் படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளளதாக கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய மத்திய நிலையம் தெரிவித்தது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே மேற்படி பிரதேசங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு மாவட்டத்தில் மொரட்டுமுள்ள பொலிஸ் நிர்வாகப் பிரிவில் வில்லோரவத்த கிராம சேவை அதிகாரி பிரிவு, களுத்துறை மாவட்டத்தில் பொம்முவல கிராம சேவை அதிகாரி பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் எல்லதெனிய மற்றும் இராணுவ வீரர் தர்மசிறி மாவத்தை, இரத்தினபுரி மாவட்டத்தில் கங்குல் விட்டிய கிராம சேவை அதிகாரி பிரிவு, பொத்து பிடிய வடக்கு, ஹப்புகொட கிராம சேவை அதிகாரி பிரிவுகளும் நுவரெலியா மாவட்டத்தில் நோவூட் பொலிஸ் பிரிவில் இன்ஜஸ்ட்ரீ

06

# முப்பது நாட்களில் 1,959 விபத்துக்கள்

### 205 பேர் பலி;1254 காயம்

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் பதிவான வீதி விபத்துக்கள் காரணமாக 205 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் உறுதிபடுத்தியுள்ளனர்.

அதேநேரம் குறித்த காலக் கட்டத்தில் 1,959 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 1,254 ஆக பதிவாகியுள்ளது.

இவ் ஆண்டில் அதிகளவான விபத்துக்கள் ஏப்ரல் மாத்திலேயே இடம்பெற்றுள்ளதுடன், அவற்றில் பெரும்பாலான விபத்துக்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் 768 விபத்துக்களும், வடமேல் மாகாணத்தில் 238 விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

ஒட்டுமொத்தமாக கடந்த ஏப்ரல் மாதத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளே அதிகளவில் விபத்தில் சிக்குண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## ஜனாதிபதியிடம் மன்னிப்பு கேட்கும் ஆவணங்களில் ரஞ்சன் கையெழுத்திட்டார்

சிறை தண்டனை அனுபவித்துவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க ஜனாதிபதி பொது மன்னிப்புக்கான ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார். இந்த தகவல் ரஞ்சன் ராமநாயக்கவின் பேஸ்புக் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது. ரஞ்சன் ராமநாயக்கவினால் கையெழுத்திடப்பட்ட பொது மன்னிப்புக்கான ஆவணங்கள், சட்டத்தரணி அசான் பெர்னான்டோவினால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீதித்துறை அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க தண்டனையை அனுபவித்து வருகிறார்.

### எந்த இடத்திலும் ஒரு தடவையேனும்

# பொய் சொல்லாதவன் எனும் நற்பெயரை எடுத்தவன் நான்

### எனது சட்டத்தரணி தொழிலும் அவ்வாறுதான்



எந்த இடத்திலும் எந்த பொய்யையும் ஒரு தடவை கூட நான் சொன்னது கிடையாது. மக்களுக்கு உண்மையான நிலைமையை கூறுவது என்பதால் பலருக்கு என்னை பிடிக்காமல் இருக்கின்றது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் விசேட செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தனது கருத்தில், சட்டத்தரணி தொழிலிலேயே பொய் சொல்லாதவன் என்ற பெயர் எடுத்தவன் நான். ஆகவே அரசியலில் பொய் சொல்ல வேண்டிய எந்தத் தேவையும் எனக்கு கிடையாது. குறிப்பாக எதிரணியினர் இவ்வாறு கூறி திரிகின்றார்கள். ஜெனிவா தொடர்பாக பல இடங்களில் பல

06

# இலங்கை கடற்பகுதிக்குள் நுழைந்த 11 இந்திய படகுகளை தடுத்து நிறுத்திய கடற்படை

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்ட 11 இந்திய மீன்பிடி படகுகளை கடற்படை தடுத்ததாக கடற்படை அறிவித்துள்ளது.

சட்டவிரோதமாக குடியேற்றவாசிகள் இலங்கை கடற் பிரதேசத்திற்குள் நுழைவதைத் தடுப்பதற்காக கடற்படையினர் விசேட ரோந்துப் பணிகள் மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் , 86 நபர்களுடன் 11 இந்திய மீன்பிடிப் படகுகளை தடுக்க கடற்படைக்கு முடிந்தது.

கடல் வழியாக சட்டவிரோதமாக நபர்கள் வருவதால் நாட்டில் கொவிட் தொற்றுநோய் பரவும் ஆபத்து இருப்பதால் 24 மணி நேர ரோந்துப் பணிகளை கடற்படை அதிகரித்துள்ளது. மன்னாருக்கு தெற்கே கடல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது நாட்டின் கடற்பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்ற இந்த 11 இந்திய மீன்பிடிப் படகுகளையும் கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இந்திய கடலோர காவல்படைக்கு இது குறித்து தகவல் அளிக்கப்பட்டது. 11 இந்திய மீன்பிடிப் படகுகளையும் 86 நபர்களையும் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதற்கிடையில், சட்டவிரோத குடியேற்ற வாசிகள் கடல் வழியாக நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்க கடற்படை தொடர்ந்து வடமேற்கு மற்றும் வடக்கு கடற்பகுதியில் கண்காணிப்பை அதிகரித்து வருவதாகவும் கடற்படை அறிவித்துள்ளது.(பா)

## நாடளாவிய 32 தபால் நிலையங்கள் மறு அறிவித்தல் வரை பூட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு நாடளாவிய ரீதியில் உள்ள 32 தபால் நிலையங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக தபால் மாஅதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

மறு அறிவித்தல் வரை மேற்படி தபால் நிலையங்கள் மூடப்படுவதாக தெரிவித்துள்ள அவர், அவற்றுள் நான்கு பிரதான தபால் நிலையங்களும் 28 உப தபால் நிலையங்களும் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு தபால் நிலையங்களிலும் 50க்கும் மேற்பட்ட தபால் ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.தற்போதைய சூழ்நிலையில் தபால் சேவை நடவடிக்கைகளில் சிறு தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம்; விவாதம் ஒத்திவைப்பு

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூல விவாதத்தை இன்று (05) முன்னெடுக்காதிருப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (04) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குப் பதிலாக இன்றையதினம் ஆரம்பிக்கப்பட்ட 'நாட்டில் நிலவும் சூழ்நிலை' குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்று (05) முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இதுவரை சபாநாயகருக்குக் கிடைக்காத காரணத்தால் இன்று (05) இந்த சட்டமூல விவாதத்தை நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்த பின்னர் அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் இச் சட்டமூலத்தை

06

# பாராளுமன்றத்தில் சுகாதார விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்றவும்

### சபாநாயகர் கோரிக்கை

நாட்டில் எழுந்துள்ள கொவிட் 19 தொற்று சூழலின் மத்தியில் சுகாதார அதிகாரிகளால் முன்வைக்கப்பட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை பாராளுமன்றத்தில் கடுமையாகப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சகல பாராளுமன்ற உறுப்பினரிகளிடமும் நேற்று (04) சபையில் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்துக்கு வெளியே செயற்படும்போதும் இந்த நடைமுறையை பின்பற்றுமாறும் சபாநாயகர் சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் நேற்று (04) சபாநாயகர் விடுத்த அறிவிப்பு வருமாறு,

“கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள கொவிட் 19 சூழல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதற்கமைய, பாராளுமன்றத்துக்கு வருகை தரும்போதும், இங்கிருக்கும் நேரத்திலும் முகக்கவசத்தை அணிந்திருப்பது, கைகளைச் சுத்தப்படுத்துவது, சமூக இடைவெளியைப் பேணுவது உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளின் விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும், பாராளுமன்றத்துக்கு வெளியே செயற்படும்போதும் இந்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.



பாணந்துறை சிறுவர் பயிற்சி மற்றும் ஆலோசனை தேசிய சேவை நிலையத்தை நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சை வழங்கக்கூடிய கொரோனா தடுப்பு சிகிச்சை நிலையமாக பயன்படுத்துவதற்காக பாணந்துறை பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த இதனை கையளிப்பதை படத்தில் காணலாம்.

### பிளாஸ்டிக், பொலித்தீன் உற்பத்தி;

# அரசின் விதிமுறைகளை மீறும் நிறுவனங்களின் அனுமதி பத்திரம் இரத்துச் செய்யப்படும்

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பிளாஸ்டிக் உற்பத்தித் தொடர்பில் அரசாங்கத்தின் விதிமுறைகளை மீறும் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படுமென சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு தனது அமைச்சின் அறிவிப்பை விடுக்கும் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கட்டடங்களை அமைக்கும் போது சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அமைக்க வேண்டுமென்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக், பொலித்தீன்களை மட்டுப்படுத்த வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதோடு, நாட்டில் தற்போது 05 வகையானப் பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் 31ஆம் திகதியுடன் இப் பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தாலும், சில நிறுவனங்கள் அரசாங்கத்தின் காதைத் திருகி வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கிறது.

எனினும் இந்த நிறுவனங்களுக்கு தான் ஒருபோதும் அடிப்பணியப் போவதில்லையெனவும், அரசாங்கம் விதித்துள்ளக் கட்டுப்பாடுகளை மீறி பிளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும்.

## கோப் குழுவுக்கு கலாநிதி ஹர்ஷ டி.சில்வா பரிந்துரை

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் (கோப் குழு) பணியாற்றுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி.சில்வாவின் பெயர் பரிந்துரைக்கப் பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (04) சபையில் அறிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரன்ஜன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகியதன் காரணமாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

### வெளிவிவகார அமைச்சின்

## கொன்சியூலர் பிரிவு சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

தற்போதுள்ள கோவிட் 19 நிலைமையின் காரணமாக சுகாதார அதிகாரிகள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, வெளிநாட்டமைச்சின் கொன்சியூலர் விவகாரப் பிரிவு அதன் செயற்பாட்டு நேரத்தை தினமும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை மட்டுப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் வாரங்களில், கொன்சியூலர் விவகாரப் பிரிவினால் வழங்கப்படும் சேவைகள், அவசரமான / உண்மையான

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 150.81 | 155.20 |
| கனடியன் டொலர் | 158.46 | 163.05 |
| யூரோ | 234.22 | 241.01 |
| ஜப்பான் யென் | 1.7768 | 1.8293 |
| சிங்கப்பூர் டொலர் | 146.05 | 150.22 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 269.67 | 277.53 |
| சுவிஸ் பிராங்க் | 212.51 | 219.30 |
| அமெரிக்க டொலர் | 195.18 | 199.93 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 529.68 | கட்டார் ரியால் | 54.84 |
| குவைத் டினார் | 662.59 | சவூதி ரியால் | 53.23 |
| ஓமான் ரியால் | 518.69 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.36 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 22ம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

பிறரால் தனக்குச் செய்யப்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்வது, துன்பம் செய்தவர்க்கும் துன்பம் செய்யாதிருப்பது என்னும் இவ்வளவுதான், தவம் என்பதன் இலக்கணம்.

# சிறுவர்களும் கர்ப்பிணிகளும் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்!

தற்போது நாட்டில் பிரித்தானியாவில் திரிபடைந்த கொவிட் 19 தொற்று பரவிக் கொண்டிருக்கின்றது. இது மருத்துவ ரீதியிலான ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இத்தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையில் முன்பை விடவும் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

'நாட்டில் ஏற்கனவே பரவிய தொற்றை விடவும் வேகமாகப் பரவக் கூடியதாகவும் அதிக தாக்கம் மிக்கதாகவும் தற்போதைய தொற்று விளங்கிக் கொண்டிருக்கின்றது' என்று மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போதைய தொற்றுக்கு அதிகளவில் சிறு குழந்தைகளும் கர்ப்பிணிப் பெண்களும் உள்ளாவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தொற்று சிறுவர்களுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமையலாம்.

எனினும் தற்போது நாட்டில் சுமார் 70 கர்ப்பிணி பெண்கள் இத்தொற்றுக்கு உள்ளாகி வெவ்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். அவர்களில் 22 கர்ப்பிணி பெண்கள் முல்லேரியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் டொக்டர் தர்ஷிக்கா ரணசிங்க குறிப்பிட்டிருக்கின்றார்.

இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ள கர்ப்பிணிப் பெண்களில் மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அத்தோடு கர்ப்பிணிப் பெண்ணொருவருக்கு இத்தொற்றின் நிமோனியா நிலைமை ஏற்பட்டுள்ளதால் அவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு எக்மோ இயந்திரத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற வரும் குழந்தைகள் மத்தியில் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளான குழந்தைகள் இருப்பதை மருத்துவர்கள் அடையாளம் காண்கின்ற அதேநேரம், தொற்று நோயியல் வைத்தியசாலையில் இத்தொற்றுக்கு உள்ளான சிறுவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் வார்ட்டுகளின் கட்டில்கள் யாவும் நிரம்பி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் டொக்டர் சித்ரமாலி டி சில்வா, 'தற்போது நாட்டில் பரவும் பிரித்தானியாவில் திரிபடைந்த கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்வதில் கர்ப்பிணிப் பெண்களும் சிறுவர்களும் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார். அத்தோடு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளக் கூடிய உணவு வகைகளை உண்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளத் தவறக் கூடாது' எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் கொவிட் 19 தவிர்ப்புக்காக வழங்கப்படும் தடுப்பூசியை சிறுவர்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் வழங்கவும் முடியாது. அதற்கான மருத்துவ சிபாரிசுகள் இன்னும் வெளியாகவில்லை.

அதன் காரணத்தினால் கர்ப்பிணிப் பெண்களதும், சிறுவர்களதும் நலன்கள் குறித்து தற்போதைய சூழலில் ஒவ்வொருவரும் விஷேட கவனம் செலுத்த வேண்டும். அது குடும்பத்தினதும் சமூகத்தினதும் பொறுப்பாகக் கருதப்படுவது அவசியம். இதன் நிமித்தம் கர்ப்பிணிப் பெண்களும், சிறுவர்களும் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அயலவர்களும் மிகுந்த பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும். தம் குடும்பத்தில், தம் இல்லத்தில் கர்ப்பிணிப் பெண் அல்லது சிறுவர் இருப்பதை எந்நேரமும் மனதில் கொண்டவர்களாக செயற்படத் தவறக் கூடாது.

அதேநேரம் கர்ப்பிணிப் பெண்கள் பயணங்களைத் தவிர்த்துக் கொள்வதோடு வீடுகளில் இருப்பதிலேயே அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போதைய சூழலில் மக்கள் கூட்டமாகக் காணப்படும் இடங்களுக்கு செல்வது எவ்விதத்திலும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. அத்தோடு சுவாசத் தொகுதி நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு அருகில் செல்வதையும் அவர்களுடன் நெருங்கி செயற்படுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.


வீட்டில் சமைத்த உணவு வகைகளை உண்பதில் கூடிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். குளிரூட்டிகளில் வைக்கப்பட்டுள்ள மீன், இறைச்சி என்பவற்றை சமையலின் நிமித்தம் கையாளுபவர்கள் கைகளை நன்கு கழுவிக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் தொடர்பிலான இவ்வாறான ஆலோசனைகள் குறித்து அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் அவசியத் தேவையாக விளங்குகின்றது.

ஆகவே தற்போதைய சூழலில் இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் ஒழுங்குமுறையாக உச்சளவில் பின்பற்ற வேண்டும். அது சமூகத்திற்கும் நாட்டுக்கும் அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக மாத்திரமல்லாமல் சிறுவர்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் அளிக்கப்படும் சிறந்த சேவையாகவும் அமையும். அதனால் மிகுந்த அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்வதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# பௌத்த மதத்தையும், கலாசாரத்தையும் பாதுகாக்கும் பணியில் மகாசங்கத்தினர்



## மிஹிந்தலை தூபிக்கு வெள்ளை வர்ணம் பூசும் புனித நிகழ்வில் பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர்

இந்நாட்டு கலாசாரம் மற்றும் பௌத்த மதத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் அரசு அல்லாத அமைப்புகள் உள்ளதாகவும், இந்த அமைப்புகள் மூலம் ஏற்படுத்தப்படும் பாதிப்பை தடுப்பதில் மகாசங்கத்தினர் தலையிட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம் திரிபீடக பாதுகாப்பு சட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றுப் பெருமை மிக்க மிஹிந்தலை தூபிக்கு வெள்ளை வர்ணம் பூசும் புனித நிகழ்வு அண்மையில் மகாசங்கத்தினரின் ஆசிர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அவ்வேளையிலேயே பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர் மேற்குறிப்பிட்ட கருத்தைத் தெரிவித்தார்.

வணக்கத்துக்குரிய மஹிந்த தேரரை நினைவு கூரும் முகமாக மிகிந்தலைக்கு லேக்ஹவுஸ் நிறுவனம் ஒளியூட்டும் (ஆலோக பூஜாவ) நிகழ்வுக்கு இணைந்ததாக வருடந்தோறும் மேற்படி புண்ணிய நிகழ்வு நடைபெறுகிறது.

இம்முறை இந்த நிகழ்வுக்கு அரலிய வர்த்தக நிறுவனத்தின் தலைவரான பிரபல தொழிலதிபர் டட்லி சிறிசேன நிதியுதவி வழங்கியிருந்தார். எதிர்காலத்திலும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகவும், இந்நிகழ்வின் மூலம் இன்று எமது நாட்டு மக்கள் முகம்கொடுத்துள்ள வைரஸ் தாக்கத்திலிருந்து விடுபட பிரார்த்திப்பதாகவும் பிரபல தொழிலதிபர் ட்டலி சிறிசேன தெரிவித்தார்.

மிஹிந்தலை ரஜமகா விகாரையின் விகாராதிபதி வண. வளஹாஹெங்குனவெவே தம்மரதன தேரர், பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ, வண. கெமான்னே குணானந்த தேரர் உள்ளிட்ட தேரர்களின் தலைமையிலும் ஆசிர்வாதத்துடனும் மிஹிந்தலை தூபிக்கு வெள்ளை வர்ணம் பூசும் நிகழ்வும், பிரித் ஓதும் நிகழ்வும் இடம்பெற்றன.



இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் விமானப்படை, கடற்படை, இராணுவம், சிவில் பாதுகாப்புப் படையணி உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரின் பங்களிப்புடன் இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையின் சிங்கள அரசர்களின் காலத்துக்குப் பின்னர் மகாசங்கத்தினரின் ஆலோசனை சபையொன்றின் சந்திப்பை மாதந்தோறும் நடத்தி வருகின்றார். அவர்கள் குறைகளை ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டுகின்றனர். தலாதா மாளிகை, ஸ்ரீமகாபோதி போன்ற அனைத்துக்குமே மஹிந்த தேரரின் வருகைதான் காரணமாக அமைந்தது. இந்த இடத்தில்தான் பஞ்சசீல கொள்கை அறிமுகம் செய்யப்பட்டது என மிஹிந்தலை ரஜமகாவிரையின் விகாராதிபதி கலாநிதி வலஹாஹெங்குனவெவே தம்மரத்ன தேரர் இந்நிகழ்வில் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஆர். எம். வன்னிநாயக்க, லேக்ஹவுஸ் நிறுவன நடவடிக்கை கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் சட்டத்தரணி கனிஷ்க விதாரண, பிரதி நிறைவேற்று கண்காணிப்பாளர் (நிறுவன நடவடிக்கைகள்) சந்தன பண்டார, செயற்பாட்டு முகாமையாளர் கயான் பண்டார, பொதுவசதிகள் முகாமையாளர் அர்ஜுண சிறிவங்ச, சமூகநல முகாமையாளர் சமிந்த விஜேதுங்க ஆகியோருடன் முப்படையினர், பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம்களின் உள்ளத்தை வென்றவர் பிரிகேட் கொமாண்டர் பிரதீப் கமகே



## பிரியாவிடை நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் புகழாரம்

தேசிய ரீதியில் முஸ்லிம் சமூகத்தின் உள்ளங்களை வென்றவர் பிரிகேட் கொமாண்டர் பிரதீப் கமகே என கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எம்.நௌபர் புகழாரம் சூட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட்19 தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்டு வந்த மட்டக்களப்பு மாவட்ட 231வது படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் பிரதீப் கமகே இடமாற்றம் பெற்றுச் செல்கின்ற நிலையில், அவரைக் கௌரவித்து வழியனுப்பும் நிகழ்வு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற போது, உரையாற்றிய தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கொவிட்19 இனால் மரணமடையும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு பொருத்தமான இடம் அடையாளப்படுத்தப்படுகின்ற போது, அதற்கான அனுமதியினை வழங்க முடியுமென அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலையில், இந்நாட்டின் பல பாகங்களிலும் இதற்குப் பொருத்தமான இடம் தேடப்பட்ட போதிலும், எந்தவொரு இடத்தையும் கொவிட்19 ஜனாஸா நல்லடக்கத்திற்கான இடமாக அடையாளப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலையேற்பட்டது.

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் மஜ்மா நகர், சூடுபத்தினசேனை கிராமத்தில் பொதுமையவாடிக்காக ஒதுக்கப்பட்டு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த காணியை பொது மக்களுடைய அங்கீகாரத்துடன் கொவிட்19 ஜனாஸா நல்லடக்கத்திற்காக வழங்குவதென அரசாங்கத்திற்கு பிரதேச சபையினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில், மட்டக்களப்பு மாவட்ட கொவிட்19 நடவடிக்கைக்குப் பொறுப்பான 231வது படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி பிரதீப் கமகே, பொதுமையவாடிக்காக பிரதேச சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட இடத்தினை களப் பரிசோதனை செய்து பல்வேறு சவால்களுக்கு மத்தியில் முறையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இரு தினங்களுக்குள் கொவிட்19 ஜனாஸா நல்லடக்க மயானமாக மாற்றித் தந்தார். அத்துடன் இன்று வரை ஜனாஸா நல்லடக்க விடயங்களை பிரதேச சபை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினரது ஒத்துழைப்புக்களை இரவு பகல் பாராது வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அது தவிர, தேசிய ரீதியில் கொவிட்19 தாக்கத்தினால் உயிர் நீத்த அனைத்தின, மத உறவுகளுடைய உடல்களும் நல்லடக்கம் செய்யப்படுகின்ற இந்த மயானம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில், இந்தப் பிரதேசத்தில் இம்மையவாடி அமைவதற்கு மிகப் பெரும் உதவியாக இருந்த பிரிகேட் கொமாண்டர் கமகே அவர்களை இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களும், ஏனைய சமூகத்தினரும் பாராட்டுகின்றனர்" எனவும் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மேலும் தெரிவித்தார்.

யு.எல்.எம்.ஹரீஸ்...
(வாழைச்சேனை விசேட நிருபர்)

# படைப்பாளிகளுக்கு ஊக்கம் அளித்து களம் அமைத்து கொடுத்த அன்புமணி

இராசையா நாகலிங்கம், 'அன்புமணி' எனும் புனைபெயரிலே அறிமுகமானவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்தவர். ஆரையம்பதி இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியையும், இடைநிலை, உயர்தரக் கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் பெற்றார்.

இவரின் முதல் ஆக்கம் 'கிராம்போன் காதல்' எனும் தலைப்பில் 'கல்கி' இதழில் 1954 இல் பிரசுரமானது. அன்றிலிருந்து 500க்கும் மேற்பட்ட சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நாடகங்கள் ஆகியவற்றை இவர் எழுதியுள்ளார். இவரின் ஆக்கங்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளிவரும் தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகளிலும் மற்றும் வானொலியிலும் வெளிவந்துள்ளன.

அன்புமணி, அருள்மணி, தமிழ்மணி ஆகிய பெயர்களிலும் அவர் எழுதியுள்ளார். இவர் களுவாஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர், மட்/கச்சேரி உதவி அரசாங்க அதிபர், வடக்கு, கிழக்கு மாகாண சபை உள்துறை உதவிச் செயலாளர் முதலிய பதவிகளை வகித்து, ஆளுநர் செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி க.தங்கேஸ்வரியின் செயலாளராகவும் பணியாற்றினார்.

இவரின் ஏழு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இல்லத்தரசி (சிறுகதை) 1980 உதயம் பிரசுரம், மட்டக்களப்பு

வரலாற்றுச் சுவடுகள் (சிறுகதை) 1992 உதயம் பிரசுரம், மட்டக்களப்பு

ஒரு தந்தையின் கதை (நாவல்) 1989 உதயம் பிரசுரம், மட்டக்களப்பு

ஒரு மகளின் கதை (குறுநாவல்) 1995 அன்பு வெளியீடு

தமிழ் இலக்கிய ஆய்வு 2007 சென்னை, மணிமேகலை பிரசுரம்

எட்டுத் தொகை பத்துப் பாட்டு நூல்கள் 2007 சென்னை, மணிமேகலை பிரசுரம், பதினெண் கீழ்கணக்கு நூல்கள் 2007 சென்னை, மணிமேகலை பிரசுரம் அன்புமணி தனது இலக்கியப் பணியில் தன்னுடைய நூல்களை மாத்திரம் வெளியிடுவதில் கரிசனைக் காட்டாது பிற எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதிலும், வெளியீட்டுக்கும் உதவியுள்ளார். இவரின் 'அன்பு வெளியீட்டகம்' மூலம் வெளியிடப்பட்டுள்ள சில நூல்கள்:

மகோன் வரலாறு – தங்கேஸ்வரி,குளகோபடன் தரிசனம் தங்கேஸ்வரி,நூறு வருட மட்டு நகர் அனுபவங்கள் ஆசிரியர் திலகம் எஸ். பிரான்ஸிஸ்,மட்டக்களப்பில் ஒரு மாமனிதர் ஜோசெப்வாஸ் ஆசிரியர் திலகம் எஸ். பிரான்ஸிஸ்,வாழ்க்கைச் சுவடுகள் (சுயசரிதம்) ஆசிரியர் திலகம் எஸ். பிரான்ஸிஸ்,நீருபூத்த நெருப்பு (நாடகங்கள்) ஆரையூர் இலவர், ஆகியன.



கனடாவிலுள்ள 'ரிப்னெக்ஸ்' பதிப்பகத்தின் மூலமாக இலங்கையில் வரலாற்றுப் புகழ்

## இலக்கிய உலகில் அழியாத நாமம்

பெற்ற பல முக்கிய நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுவதிலும் இவரின் பங்களிப்பு காணப்படுகின்றது.

இந்த அடிப்படையில் கனடாவில் பதிப்பித்துள்ள சில நூல்களின் விபரம் வருமாறு:

சீ. மந்தினி புராணம் வித்துவான் ச. பூபாலலிங்கம்,மாமங்கேஸ்வர பதிகம் வித்துவான் அ. சரவணமுத்தன்,சனிபுராணம் வித்துவான் அ.சரவணமுத்தன்.

இவர் 'மலர்' என்ற இலக்கிய இதழை 1970ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை வெளியிட்டார். ஈழத்து இதழியல் வரலாற்றில், 'மலர்' கிழக்கு மாகாணத்தில் மாத்திரமன்றி நாடளாவிய ரீதியில் பல இளம் எழுத்தாளர்களுக்கு களமமைத்துக் கொடுத்து அவர்களை வளர்த்து விட்டிருக்கின்றது.

பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே பல நாடகங்களில் முக்கிய வேடங்களில் இவர் நடித்துள்ளார். அதே போல பாடசாலைக் காலத்தில் நாடகங்களிலும் இவர் நடித்துப் புகழ் பெற்றார். ஆரையம்பதியில் 1952ஆம் ஆண்டில் 'மனோகரா' எனும் பொது மேடை நாடகத்தின் முலம் ஒரு நடிகராகவும், தயாரிப்பாளராகவும் அறிமுகமானார். 'அமரவாழ்வு', 'ஏமாற்றம்', 'பிடியுங்கள் கலப்பையை' போன்ற நாடகங்கள் இவரால் தயாரித்து, நடித்து, மேடையேற்றப்பட்ட நாடகங்களாகும்.

1962ஆம் ஆண்டு இவரால் எழுதப்பட்ட 'தரைகடல் தீபம்'எனும் நாடகப் பிரதியாக்கத்திற்கு 'சாகித்திய மண்டலப்' பரிசு கிடைத்தது. பின்பு இந்நாடகம் பல இடங்களில் மேடையேற்றப்பட்டது. அதே போல இவரின் 'சூழ்ச்சி வலை' எனும் மேடை நாடகமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. இவருக்கு பல விருதுகள் கிடைத்துள்ளன.

'தமிழ்மணி வடக்கு, கிழக்கு ஆளுனர் விருது', கலாபூசணம், பல்கலை வித்தகர்,போன்றவை குறிப்பிடத்தக்கவை.

இவை தவிர பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் பல்வேறுபட்ட இலக்கியச் சங்கங்கள் இவருக்குப் பொன்னாடை போர்த்தியும், கௌரவப் பட்டங்கள் வழங்கியும் கௌரவித்துள்ளன. அன்புமணி மறைந்து பல வருடங்களானாலும் அவரின் புகழ் மறையாது.



வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# இரசாயன உரம், கிருமிநாசினி இல்லாத விவசாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

**இயற்கை பசளைப் பாவனையை ஊக்குவிப்பதற்காக நேரடி மற்றும் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்வோம் என வடிகாலமைப்பு அமைச்சரும் அரச பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டிலுள்ள அனைத்து வீடுகளிலும் செய்கை பண்ணுவதற்காக தலா ஐந்து மஞ்சள் செடி கன்றுகள் வழங்கும் தேசிய திட்டத்திற்கு அமைவாக, ஹம்பாந்தோட்டை மாவட்டத்துக்கான நிகழ்வு மெதமுலனவில் நடைபெற்றது. அந்நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் சமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

"எவ்வித தடங்கல்கள் வந்தாலும் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் அற்ற விவசாயச் செய்கையை நாட்டினுள் ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக அரசாங்கம் நேரடி மற்றும் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

இன்று ஏற்றுமதி விவசாய அமைச்சின் கீழ் சிறு ஏற்றுமதி பயிர்களை எமது நாட்டினுள் பிரசித்தப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இந்தப் பயிர்களை இறக்குமதி செய்ததனூடாக பாரியளவு அந்நிய செலாவணி நாட்டை விட்டு வெளியே சென்றது. இன்று இந்தத் தொகை எமது நாட்டு மக்களுக்கு கிடைத்து வருகிறது.

தற்பொழுது எமது நாட்டில் பயன்படுத்தப்பட்டு வரும் இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் தொடர்பாக கடுமையான தீர்மானம் ஒன்றினை ஜனாதிபதி எடுத்துள்ளார். 60 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நாம் வெளிநாட்டு உர வகைகளுக்கு பழக்கப்பட்டோம். இதற்கு முன்பு எமது விவசாயிகள் உள்ளூர் உர வகைகள் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். கடந்த நாற்பது வருடங்களாக நாம் வெளிநாட்டு உர வகைகளையே முழுமையாக நம்பியுள்ளோம். இதன் விளைவாக மிகவும் கூடுதலான தொகை அந்நிய செலாவணி எமது நாட்டிற்கு கிடைக்காமல் போயுள்ளது. நாட்டு மக்களின் ஆரோக்கியம் சீர்கெட்டு விட்டது. இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்த ஜனாதிபதி, இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள் என்பனவற்றின் இறக்குமதியை தடை செய்வதற்கு நேரடி தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார். இதனை ஆரம்பிக்கும் போது பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். இருந்தாலும் இதனை ஓரிரண்டு வருடங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் போது சாதாரண நிலை ஏற்படும்.

## எத்தகைய தடங்கல் வந்தாலும் அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளும் என்கிறார் அமைச்சர் சமல் ராஜபக்ஷ

தற்பொழுது கொவிட் தொற்று பரவிச் செல்வதில் அதிகரிப்பு காணப்படுகிறது. இதற்கு மக்களின் கவனயீனமே அதிகமாக செல்வாக்கு செலுத்தியது. புத்தாண்டு காலத்தில் நடமாட்டங்களை மட்டுப்படுத்துமாறு அரசாங்கம் வெளியிட்ட வழிகாட்டல்களை எமது நாட்டில் பலர் கவனத்தில் கொள்ளவில்லை. கொழும்பிலிருந்து உறவினர்களை பார்ப்பதற்கு கிராமங்களுக்கு வருகை தந்தோர் புத்தாண்டு பரிசாக தங்களது உறவினர்களுக்கு கொவிட் தொற்றினை வழங்கி விட்டுச் சென்றனர்.

இந்த தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக கொவிட் தடுப்பு குழுவினர் நாளாந்தம் ஜனாதிபதி தலைமையில் கூடி தீர்மானங்களை மேற்கொள்கிறார்கள். இதற்கு ஒத்ததுழைப்பினை வழங்கி மக்கள் தங்களது போக்குவரத்தை இரண்டு மூன்று வாரங்களுக்கு கட்டுப்படுத்தி வீட்டில் தங்கி இருப்பதே சிறந்த வழியாகும்".

இவ்வாறு அமைச்சர் சமல் ராஜபக்ஷ இந்நிகழ்வில் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தார்.





**எம்.இர்பான் ஸகரியா...**
(ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

# கலைஞர் புதல்வன் கடந்து வந்துள்ள கரடுமுரடான பாதை!

**தமிழக சட்டமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி 159 ஆசனங்களைக் கைப்பற்றி பெருவெற்றியை ஈட்டியதையடுத்து தி.மு.க தலைவரான ஸ்டாலின் நாளைமறுதினம் 7ஆம் திகதி தமிழகத்தின் புதிய முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.**



தந்தையின் ஆசிர்வாதம்

தி.மு.க தலைவர் ஸ்டாலினுக்கு உலகெங்கிலுமிருந்து வாழ்த்துகள் வந்தபடி இருக்கின்றன. கடந்த 2016 தேர்தலிலேயே தமிழக வழக்கப்படி ஆட்சி மாற்றம் நடந்து தி.மு.க ஆட்சியை பிடிக்கும் என்றே நம்பப்பட்டது. ஸ்டாலின், தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பிரசாரம் செய்தார். ஆனால், மீண்டும் அ.தி.மு.க ஆட்சி அமைத்தது. கட்சிக்குள்ளும் ஸ்டாலினுக்கு செயல் தலைவர் பதவி கிடைத்தது. சுமார் 50 ஆண்டு பொதுவாழ்க்கைக்குப் பிறகுதான், கலைஞர் மறைந்த பின்னர் தி.மு.கவின் தலைவரானார் ஸ்டாலின்.

ஸ்டாலினின் அரசியல் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம் அவர் தி.மு.கவின் இளைஞரணி தலைவராக இருந்த காலகட்டம் ஆகும். அவருக்கு இளைஞரணி செயலாளர் பதவி அவ்வளவு எளிதாகக் கிடைத்து விடவில்லை. அதற்குப் பின்னர் 20 ஆண்டு கால உழைப்பு இருந்தது. சிறு வயதிலிருந்தே ஸ்டாலின் அரசியல் பணிகளை மேற்கொண்டு வந்தார். அவற்றில் முக்கியமானது அவர் இளைஞர் தி.மு.க என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியது.

ஸ்டாலின் பத்தாம் வகுப்பு படிக்கும் போது, அதாவது 196768 இல் இளைஞர் தி.மு.க என்ற அமைப்பை கோபாலபுரத்திலுள்ள ஒரு முடிதிருத்தும் கடையில், தெரு நண்பர்களுடன் தொடங்கினார். பாடசாலையிலிருக்கும் நேரத்தை தவிர்த்து மற்ற நேரங்களில் கட்சிப் பணிகளில் ஈடுபட்டார். பெரியார், அண்ணா பிறந்த நாளின்போது கொடியேற்றுவது, இனிப்புகள் வழங்குவது, கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்வது, கட்சிக்கு நிதி திரட்டுவது போன்ற பணிகளை தொடக்க காலத்தில் செய்து வந்தார். 1973 இல் தி.மு.கவின் பொதுக்குழு உறுப்பினரானார்.



மகன் உதயநிதி குழந்தையாக இருக்கையில், தந்தை கருணாநிதியுடன்

அப்போது நடந்த சென்னை மாநகராட்சி தேர்தலின் போது, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க என்ற பெயரில் நண்பர்களுடன் தெருத்தெருவாக பிரச்சாரம் மேற்கொண்டார். அடுத்தது அவர் கையிலெடுத்தது நாடகம் என்ற ஊடகத்தை ஆகும். அதற்கு சிறப்பு விருந்தினர்களாக பிரபலங்களை அழைத்தார். அது அவரது நாடகம் மக்கள் மத்தியில் சென்று சேர உதவி செய்தது.

'முரசே முழங்கு' என்பதுதான் அவரின் முதல் நாடகம். அதற்கு தலைமையேற்றவர் எம்.ஜி.ஆர். அவரின் நாடகங்களில் முக்கியமானவை திண்டுக்கல் தீர்ப்பு, நாளை நமதே, தேவன் மயங்குகிறான் உள்ளிட்டவை.

1975ம் ஆண்டு இந்திராகாந்தி அவசரநிலை பிரகடனத்தை அறிவித்தார். தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1976 பெப்ரவரி 1 அன்று, ஸ்டாலினை மிசா சட்டத்தின்கீழ் கைது செய்தனர் பொலிசார். சிறைக்குள் அடைக்கப்பட்ட ஸ்டாலினுக்கு சிறைத்துறை கொடுத்த அறை தொழுநோயாளிகள் அடைக்கப்படும் 9ம் எண் சிறை. அவருடன் சிட்டிபாபு, ஆற்காடு வீராசாமி, நீலநாராயணன், வி.எஸ். கோவிந்தராஜன் ஆகியோர் அடைக்கப்பட்டனர்.

## நாளைமறுதினம் முதல்வராகிறார்

வெறும் சிறைவாசமாக அது நின்று விடவில்லை. அரசியல் ரீதியாக கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் அடித்து துவைத்தனர். ஸ்டாலினும் அதற்கு விதிவிலக்காகவில்லை. பூட்ஸ் கால்களால் எட்டி உதைக்கப்பட்டது, கன்னத்தில் ஓங்கி அறைந்தது போன்ற சம்பவங்களும் நடந்தன. இதனால் ஸ்டாலின் மயங்கி விழுந்திருக்கிறார். ஸ்டாலின் மீது அடிபடக் கூடாது என தடுத்தார் சிட்டிபாபு. அந்த அடிகள் அனைத்தும் அவர் மீது விழுந்தன. சிட்டிபாபு சில நாட்கள் கழித்து காலமானார். இப்படியாக பல கொடுமைகளை ஸ்டாலின் சந்தித்தார்.

அதன் பிறகு ஜனவரி 23, 1977 அன்று அவர் விடுதலையானார். பின்னர் கட்சிப் பணிகளிலும், அரசியலிலும் மிகத் தீவிரமாக செயல்பட்டார். கலைஞர் ஒரு இடத்தில், 'ஸ்டாலினை நான் உருவாக்கியதாக கூறுகிறார்கள், அது தவறு. ஸ்டாலினை உருவாக்கியது இந்திரா காந்திதான்' என்று குறிப்பிட்டார். மிசாவிற்குப் பிறகு அவர் அவ்வளவு தீவிரமாக இயங்கினார்.

## பத்தாம் வகுப்பு படிக்கும் போது கோபாலபுரத்திலுள்ள முடிதிருத்தும் கடையொன்றில் இளைஞர் தி.மு.க என்ற அமைப்பை தொடங்கிய ஸ்டாலின், இந்திரா காந்தி ஆட்சியின் போது சிறையில் அடைக்கப்பட்டு, மயங்கி சரிந்து விழும் வரை அடி, உதை வாங்கியவர்.



திருமணமான புதிதில் மனைவியுடன்...

பிறகு 1980ஆம் ஆண்டு மதுரை, ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க இளைஞரணி தொடங்கப்பட்டது. அதன் பிறகு அதன் இரண்டாம் ஆண்டு விழாவில் அதாவது 1982 இல், திருச்சியில் நடந்த விழாவில் 7 பேர் கொண்ட ஒரு தலைமைக் குழு அமைக்கப்பட்டது. அதில் ஒருவராக ஸ்டாலின் இருந்தார். தி.மு.க மூத்த தலைவர் ஆலோசனை வழங்கினர்.

இதன் கீழ் பல விழாக்களும், கூட்டங்களும் நடத்தப்பட்டன. அவை தவிர்த்து பெருநகரங்கள் முதல் கிராமங்கள் வரை தி.மு.க இளைஞரணி குழுக்களை உருவாக்கினர். இதனால் இளைஞரணி அமைப்பு ரீதியாக வலுப்பெற்றது. இவைகளுக்கு பிறகுதான் ஸ்டாலின் 1984ம் ஆண்டு தி.மு.க இளைஞரணி செயலாளராக நியமிக்கப்பட்டார். 1967 முதல் தொடங்கிய பயணத்திற்கு 1984ம் ஆண்டு ஒரு அங்கீகாரம் கிடைத்தது.

இப்படி இளைஞர் அணி தலைவராக வருவதற்கு ஸ்டாலின் கடந்த தூரம் போல, முதல்வராக வருவதற்கும் நெடுந்தூரம் கடந்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இந்த வெற்றியை அடைவது அவருக்கு எளிதாக இல்லை. அடைந்திருக்கும் இந்த நேரமும் கூட சவாலானதுதான்.

நாடே கொரானாவின் கோரத்தாண்டவத்தில் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறது. தமிழ்நாடும் விதிவிலக்கல்ல. கொரோனா பரவலை கட்டுப்படுத்த வேண்டும், ஒக்சிஜன் பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் பற்றாக்குறை உள்ளிட்டவற்றை சரி செய்ய வேண்டும். பொருளாதார சூழலும் சீர் செய்யப்பட வேண்டியிருக்கிறது. இப்படி வெற்றி கிடைத்ததும் எளிதாக இல்லை, வெற்றிக்குப் பிறகு ஆட்சியும் எளிதாக இருக்கப் போவதில்லை.



சட்டசபையில் சட்டை கிழிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட போது...



மனைவி மற்றும் மகனுடன்

## எமது முயற்சி தொடரும்;...

தெரிவித்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டிய நியாயத்தை எடுத்து கூறியுள்ளதுடன், தேவையான ஆவணங்களையும் எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளேன். கடந்த காலம் முதல் பல முன்னெடுப்புக்களை பல விமர்சனங்களை தாண்டி நாம் முன்னெடுத்து வந்துள்ளோம். முதன் முதலில் மட்டக்களப்பில் பல ஜன நாயக மயப்படுத்தப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்தவர்கள் நாம். பாராளுமன்றத்தில் உள்ளேயும் , வெளியேயும் பல முயற்சிகளை மேற்கொண்டோம். அதன் படி தொடர்ந்தும் அமைச்சர் சமல்ராஜபக்ஸ, மற்றும் முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளருமான பசில் ராஜபக்ஸ மூலமும் முன்னேடுப்புக்களை தொடருகின்றோம். பல விமர்சனங்களையும் தாண்டி கல்முனை வாழ் தமிழ் மக்களின் நியாயமான நீதியான ஏற்றுக்கொள்ளக் கூடிய கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும். அது நிச்சயமாக தற்போதைய அரசாங்கத்தினால் முடியும்.

## நீதியமைச்சின் விசேட அறிவித்தல்...

ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதிமன்றங்கள் மற்றும் நீதியமைச்சின் செயற்பாடுகள் சம்பந்தமாக வேறு தரப்பினர் மூலம் வெளியிடப்படும் செய்திகள் மற்றும் தகவல்கள் உத்தியோகபூர்வமற்றவை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான பொறுப்பை நீதியமைச்சு ஏற்காது எனவும் அது தொடர்பில் ஊடக நிறுவனங்கள் கவனம் செலுத்துவது முக்கியம் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதிமன்ற நிர்வாகம் தொடர்பில் முழுமையான பொறுப்பு நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கே உள்ளது. அவற்றில் நீதியமைச்சு தலையிடுவதில்லை. அதற்கிணங்க நீதிமன்றம் தொடர்பான செய்திகள் நீதிச்சேவை ஆணைக்குழு ஊடாகவே ஊடகங்களுக்கு வழங்கப்படும். அவ்வாறில்லாவிட்டால் நீதிச்சேவை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் நீதி அமைச்சு அதனை ஊடகங்களுக்கு வழங்கும். அதனைத் தவிர நீதிமன்றம் சம்பந்தமாகவோ அல்லது நீதி அமைச்சு சம்பந்தமாகவும் வேறு தரப்பினர் மூலம் வெளியிடப்படும் செய்திகள் உத்தியோகபூர்வமற்றவை என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ)

## காஸ் விலையில்...

சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்து வருவது உண்மைதான். ஆனால் இதுவரை எரிவாயு விலையை மாற்றுவதற்கு எந்த அமைச்சரவை முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். எரிவாயு விலைகளை அதிகரிக்குமாறு எரிவாயு கம்பனிகள் அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது தெரிந்ததே.(பா)

## ரஷ்ய ஸ்புட்னிக்வி தடுப்பூசிகள்...

வந்தடைந்துள்ளதாக அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

கட்டார் ஏயர்வேஸுக்கு சொந்தமான கியூ. ஆர் 1668 என்ற சரக்கு விமானத்தில் இவை நேற்று அதிகாலை 1.15 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டது.இந்த தடுப்பூசி தொகையினை மருந்து உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குபடுத்துகை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன விமான நிலையத்தில் வைத்து பொறுப்பேற்றார்.

தடுப்பூசிகளின் தொகை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பல வாகனங்களில் சிறப்பு குளிர்சாதன வசதிகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சேமிப்பு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டன.

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.மொத்தம் 13 மில்லியன் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி டோஸ்களை ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்ய இலங்கை தீர்மானித்துள்ளது.

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை...

பரீட்சார்த்திகள் கையடக்கத் தொலைபேசி ஊடாக Exam என டைப் செய்து சுட்டி இலக்கத்தைக் குறிப்பிட்டு 7777 என்ற இலக்கத்துக்கு அனுப்புவதன் மூலமும் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிட முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துள்ள நிலையில் அதனடிப்படையில் இம்முறை 64.39 வீதமான மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர். அதற்கிணங்க 194,297 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர். புதிய பரிந்துரைக்கமைய பரீட்சைக்கு தோற்றிய 178,337 மாணவர்களும் பழைய பரிந்துரைக்கமைய பரீட்சைக்கு தோற்றிய 15,960 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியை பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

அத்துடன் இம்முறை பரீட்சைக்கு தோற்றிய 86 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது. நாடளாவிய ரீதியில் 2648 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சைகள் இடம்பெற்றன.2020 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 362,824 பரீட்சார்த்திகள் தகைமை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## 13 மாவட்டங்களில் 86 ... 03ஆம் பக்க தொடர்...

கிராம சேவை அதிகாரி பிரிவு,ஹற்றன் பொலிஸ் நிர்வாகப் பிரிவில் போர்டயஸ் கிராம சேவை அதிகாரிகள் பிரிவு ஆகியவையே நேற்றுக் காலை நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி நிலையம் தெரிவித்தது.

அதற்கிணங்க நேற்றுவரை கொழும்பு மாவட்டத்தில் 13 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும், மொனராகலை மாவட்டத்தில் ஆறு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் அம்பாறை மாவட்டத்தில் மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் மாத்தளை மாவட்டத்தில் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் காலி மாவட்டத்தில் 4 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் பொலன்னறுவை மாவட்டத்தில் இரண்டு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் கம்பகா மாவட்டத்தில் ஏழு கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் களுத்துறை மாவட்டத்தில் 26 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் திருகோணமலை மாவட்டத்தில் ஒன்பது கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு களும் குருநாகல் மாவட்டத்தில் 4 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் நுவரெலியா மாவட்டத்தில் 4 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு கிராம சேவை அதிகாரி பிரிவும் இதுவரை தனிமைப்படுத்த லுக்காக முடக்கப்பட்டுள்ளதாக மேற்படி மத்திய நிலையம் தெரிவித்தது.(ஸ)

## பொய் சொல்லாதவன் எனும்... 03ஆம் பக்க தொடர்...

விளக்கங்களை கொடுத்திருக்கின்றேன். அதில் கேட்ட கேள்வி அனைத்திற்கும் பதில் கூறியுள்ளேன். ஆகவே எந்த இடத்திலும் எந்த பொய்யையும் ஒரு தடவை கூட நான் சொன்னது கிடையாது.

மக்களுக்கு உண்மையான நிலைமையை கூறுவது என்பதால் பலருக்கு என்னை பிடிக்காமல் இருக்கின்றது. ஏனென்றால் சந்திரனை கொண்டு வருவோம், சூரியனை கொண்டு வருவோம் என மக்களுக்கு அவர்கள் தெரிவித்து வருகின்றனர். ஆனால் நான் அவ்வாறு இல்லை. இப்படி தான் என தெளிவுபடுத்துகின்றேன். இவ்விடயம் தான் அவர்களுக்கு கசக்கின்றது என குறிப்பிட்டார்.

## துறைமுக நகர பொருளாதார... 03ஆம் பக்க தொடர்...

விவாதத்துக்கு எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.அதேநேரம், சபை ஒத்திவைப்பு விவாதத்தை மதிய போசன இடைவேளைக்காக இடைநிறுத்தாமல் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் இணங்கம் காணப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## கொன்சியூலர் பிரிவு... 03ஆம் பக்க தொடர்...

தேவைகளையுடையவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் மரணங்கள் சார்ந்த விடயங்கள், ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சான்றிதழ்களுக்கு சான்றளித்தல் ஆகியன தவிர்ந்த கொன்சியூலர் சேவைகள் கட்டாயமான முன் நியமனத்தின் அடிப்படையில் மாத்திரம் வழங்கப்படும்.

முன் நியமனங்களை மேற்கொள்வதற்காக 0112335942, 0112338836 மற்றும் 0112338812 ஆகிய தொலைபேசி இலக்கங்களில் அல்லது consular@mfa.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளாம் என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# யார் விமர்சித்தாலும் எனது பணி தொடரும்

## கல்முனை விவகாரத்தில் ஹரீஸ் MP

கல்முனை உப பிரதேச செயலகம் விவகாரம் தொடர்பில் யார் என்ன விமர்சனம் செய்தாலும் சமூகம் சார்ந்த நேர்மையான பணி தொடர்ந்து இடம்பெறும் என பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர்,

கல்முனை உப பிரதேச செயலகம் சம்பந்தமாக சில நாட்களாக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் சகோதர தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் சிலரும் அரசியல் ரீதியாக உப பிரதேச செயலக விவகாரத்தில் முஸ்லிம் சமூகம் தங்களுக்கு அநீதி இழைத்துள்ளதாக கருத்துக்களை கூறி வருகின்றனர்.

அவர்கள் தொடர்ச்சியாக கல்முனை விடயத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது பழிபோடுவது போன்று தங்களுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக சூழ்ச்சிசெய்துகொண்டு உதட்டளவில் இனநல்லிணக்கம் பேசுகின்றவர்கள் களத்தில் நின்றுகொண்டு முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக செயற்படும் போது குறைந்தது வார்த்தைகளினால் அல்லது எழுத்துக்களினால் கூட கண்டிக்க முடியாதவர்களாக இன்றைய முஸ்லிம் சமூகத்தின் அவலநிலை காணப்படுகிறது. எனவே இது சம்பந்தமாக மக்கள் கடந்த காலங்களில் நிராகரித்து ஒதுக்கியவர்களும், அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும் என்னை கடுமையாக விமர்சித்து, தாறுமாறாக ஏசினாலும் சரி நானும், என்னுடைய சக பாராளுமன்ற நண்பர்களும் அதற்கு பயந்து நடுங்கி ஒதுங்கிப்போக மாட்டோம். எங்கள் சமூகம் சார்ந்த நேர்மையான பணி தொடர்ந்து இடம்பெறும்.

## இவ் வருட இறுதிக்குள்

# புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும்

இவ் வருட இறுதிக்குள் டிசம்பர் மாதத்திற்குள் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்படும்.உத்தேச புதிய அரசியலமைப்பிற்கான வரைபினை அரசியலமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவினர் எதிர்வரும் ஜூன் மாதம் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார்கள்.தேர்தல் முறைமை புதிய அரசியலமைப்பின் பிரதான அம்சமாக கருதப்படும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

அரசியலமைப்பு குறித்து தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய இரு பிரதான வாக்குறுதியில் ஒன்றை நிறைவேற்றியுள்ளோம். அரச நிர்வாகத்திற்கு தடையாக இருந்து அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்கி அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றியுள்ளோம்.

உத்தேச புதிய அரசியலமைப்பு தொடர்பில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற நிபுணர் குழுவின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.நிபுணர் குழுவினர் அரசியல் கட்சிகளிடமும், சிவில் அமைப்பினரிடமும் மற்றும் பொது மக்களிடமிருந்தும் அரசியலமைப்பு தொடர்பில் யோசனைகளை கோரியுள்ளார்கள்.

புதிய அரசியலமைப்பு தொடர்பிலான முழு வரைபினை நிபுணர் குழுவினர் எதிர்வரும் ஜூன் மாதம் அரசாங்கத்திடம் கையளிப்பார்கள். இவ்வருட இறுதிக்குள் புதிய அரசியலமைப்பினை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளோம். எக்காரணிகளுக்காகவும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தடைப்படாது என்பதை உறுதியாகக் கூறுகின்றோம் என்றார்.

## நாட்டை முடக்க முடியாது...

தற்போதைய நிலைமைகள் குறித்த நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை முடக்கி எவ்வாறு வருமானத்தை பெற்றுக்கொள்வது என்ற கேள்வியை நாம் எதிர்க்கட்சி தலைவரிடம் கேட்க வேண்டியுள்ளது. கொவிட் 19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி வழங்குவதே எமது பிரதான வேலைத்திட்டமாகும். தடுப்பூசிகளை ஏற்றுவதன் மூலமாக முழுமையாக வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியுமெனவும் அதேபோல் மக்களை சுகாதார வழிமுறைகளுக்குள் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கின்றோம். இதனால் இறப்பு வீதங்களை குறைக்க முடியும்.

09 இலட்சத்து 25 ஆயிரத்து 240 நபர்களுக்கு கொவிசீல்ட் தடுப்பூசிகள் முதலாம் தடுப்பூசியாக ஏற்றப்பட்டுள்ளன. இரண்டாம் தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றது. ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியையும் இலங்கையில் பயன்படுத்த ஔடத கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது. 13 மில்லியன் தடுப்பூசிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படும். அதேபோல் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் 8.4 மில்லியன் அஸ்ரா செனெகா தடுப்பூசிகளும், அமெரிக்காவின் உற்பத்தியான பைசர் தடுப்பூசிகள் 5 மில்லியனும், சீன உற்பத்தியான சைனோபார்ம் தடுப்பூசிகளும் ஆறு இலட்சமளவில் தற்போது கைவசம் உள்ளது.

சீனாவின் தடுப்பூசிக்கு அனுமதி கிடைத்தவுடன் மேலதிகமாக சைனோபார்ம் தடுப்பூசிகளை வழங்கவும் சீன அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே இந்த ஆண்டு இறுதிக்குள் 63 வீதமான மக்களுக்கு முழுமையாக தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே தடுப்பூசி நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை செய்துள்ளோம். ஆகவே உலகில் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு நிகராக நாமும் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்றார்.

## கொவிட் பரவலை கட்டுப்படுத்த...

தேவையான பரிசோதனை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை துரிதமாகக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், முதலாவது தடுப்பூசி எமது நாட்டுக்கு கிடைத்த போது தடுப்பூசி உற்பத்தி செய்த இந்திய கம்பனி மற்றும் இந்திய நிலைமை இன்றைய நிலையை விட மாற்றமாக இருந்தது. இரண்டாவது தடுப்பூசிகளை நம் நாட்டிற்கு வழங்குவதாக அவர்கள் உறுதியளித்தனர். மேலும் தற்போது நாட்டில் 345,000 தடுப்பூசிகள் உள்ளன என்றும் அவர் கூறினார். கூடுதலாக, கோவிஷீல்ட் தடுப்பூசி வழங்கிய சில நாடுகளில் அவை மேலதிகமாக இருப்பதாகவும், அந்த நாடுகளுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் மேலதிக தடுப்பூசியை உடனடி கொள்முதலாக வாங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி தட்டுப்பாடு குறித்து உலக சுகாதார அமைப்பு அவதானம் செலுத்தி வருவதாகவும், முதல் டோஸை ஒரு வகையிலும் இரண்டாவது டோஸை மற்றொரு வகையிலும் கொடுக்க முடியுமா என்று ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.தற்போதைய சூழ்நிலையுடன், இந்த பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படலாம் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதே வேளை PCR பரிசோதனையை மேற்கொள்வதற்குத் தேவையான பரிசோதனை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை துரிதமாகக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

கொவிட் புதிய திரிபு கண்டறிப்பட்ட பின்னர் அரச ஆய்வு கூடங்களில் கொவிட் PCR பரிசோதனைக்கான கேள்வி நாளொன்றுக்கு 20,000 ஆக அதிகரித்துள்ளது. மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களும் உண்டு. அதனால் குறித்த தேவைக்கான PCR பரிசோதனையை மேற்கொள்வதற்குத் தேவையான பரிசோதனை உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை துரிதமாகக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். அடுத்த சில நாட்களில் தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறைகளிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பை போன்று பொதுமக்களின் ஆதரவும் தேவை என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (பா)

## மஹா மிருத்யுஞ்சய...

சகல மதத் தலங்களிலும் வழிபாட்டு பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்து ஆலயங்கள் அனைத்திலும் சனிக்கிழமை மாலை 5.46 மணியளவில் மிருத்யுஞ்சய ஹோமம் சகல ஆலயங்களிலும் குறிப்பாக பஞ்ச ஈஸ்வர தலங்களிலும் நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகளும் ஆயத்தமாகி வருகின்றன. கொரோனா அச்சுறுத்தலால் அன்று அந்த பூஜை வேளையில் நீங்கள் வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனை செய்து, தீபம் ஏற்றி வழிபடுவது சிறந்தது. கொரோனா இலங்கையை விட்டு நீங்க வேண்டும். முழு உலகத்தை விட்டும் நீங்க வேண்டும். கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் சுகமடைய வேண்டும். எல்லோரும் வளமான வாழ்க்கையை பெற வேண்டும் என்று இறைவனை மனதார நாம் அனைவரும் ஒருமித்து பிரார்த்திப்போம். இந்த பிரார்த்தனை மூலம் நாங்கள் இந்த கோரோனாவிலிருந்து விடுபட வேண்டும் எல்லோரும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையாக இது அமைய வேண்டும்.

சகல ஆலயங்களிலும் மாலை 5.46 மணியளவில் செய்வது மிகவும் சிறந்த நேரம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அனைவரும் இந்நேரத்தில் தீபமேற்றி பிரார்த்தித்து, இந்த மிருத்யுஞ்சய ஹோமம் நடைபெறும் போது பக்தி பூர்வமாக பிரார்த்தனை செய்யவும். இதற்கான அறிவுறுத்தலை இந்து கலாசார திணைக்களம் அறிவிக்கும் என புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான பிரதமரின், இந்த மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ சிறி இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

## எத்தகைய நெருக்கடிகளையும்...

கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மிக மோசமானதொரு காலகட்டத்தில் நாம் பயணிக்கிறோம். சுகாதார ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பெரும் அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே அனைத்து செயற்பாடுகளும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சுகாதாரத்துறையில் அவ்வப்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியான வழிகாட்டல்களையும் தேவையான பணிப்புரைகளையும் அன்றாடம் வழங்கி வருகிறார். அனைத்து நடவடிக்கைகளையும் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதோடு வைரஸ் தொற்றிலிருந்து மக்களை மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவர் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார்.

சுகாதாரத்துறை, சிகிச்சை செயற்பாடுகள் மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தினமும் பாரிய செலவுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் பெரும்பாலும் இலவசமாகவே மேற்கொள்ளப்படுவதுடன் தினமும் மில்லியன் கணக்கான நிதி அதற்காக செலவிடப்பட்டு வருகிறது.

இக்காலங்களில் தினமும் சுமார் 27 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஊடகமொன்றுக்கு சிறப்பு பேட்டி வழங்கிய இராணுவத்தளபதி அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது நாட்டில் நிலவும் கொரோனா சூழ்நிலை இதற்கு முன்பு இருந்த சூழ்நிலையோடு ஒப்பிடக்கூடியதல்ல. திரிபுபடுத்தப்பட்ட வைரஸ் மிக வேகமாக பரவும் நிலையை காண முடிகிறது. விரைவாக வைரஸ் தொற்று நோயாளர்கள் அதிகரிக்கும் நிலையே காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் சுகாதாரத் துறையினர் பெரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாலேயே நிலைமையை கட்டுப்படுத்த முடிகிறது. அதே போன்று பாதுகாப்பு படையினர், பொலிசார் உள்ளிட்டவர்களும் தம்மையும் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொண்டு நாட்டு மக்களையும் பாதுகாப்பதில் 24 மணித்தியாலங்களும் கடும் உழைப்பை மேற்கொள்கின்றனர். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

நாட்டு மக்கள் புதுவருடம் கொண்டாடியபோது சுகாதாரத் துறையினரும் பாதுகாப்புப் படையினரும் சீருடையோடு கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் அர்ப்பணிப்பை நாம் எளிதாக கருத முடியாது.

திருமண நிகழ்வுகளை தடை செய்துள்ள நிலையில் சிலர் வீடுகளில் விருந்து விருந்துபசாரங்களை நடத்துவதற்கு முயற்சிக்கின்றனர். இந்தக் காலம் அதற்கு பொருத்தமான காலம் அல்ல. மக்கள் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும். அவ்வாறான நிகழ்வுகளுக்கு இடமளிக்க முடியாது.

சுகாதாரத்துறையினர் வெளியிட்டுள்ள வழிகாட்டல்கள் முறையாக பின்பற்றப்படுகிறதா என்பது தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இனியும் மக்கள் அலட்சியமாக செயற்பட இடமளிக்க முடியாது.

நாட்டில் யுத்தம் நடைபெற்ற போது மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கியது போன்று இக்கட்டான இந்த காலகட்டங்களில் எதையும் உதாசீனம் செய்யாது கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

## TNA SLMC இணைவு; அரசியல் ரீதியாக...

தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்தாலும் கூட, சின்னம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.எனவே, இரு கட்சிகளும் இணையப்போவதாகக் கூறுவது அரசியல் ரீதியாக விவேகமானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, அடுத்த வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை களமிறக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் தமிழரசுக் கட்சியில் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் குறித்து கூட்டமைப்பாக சரியான முடிவு எடுக்கப்படும் என்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

## சாதாரண தரப் பரீட்சை ஆகஸ்டில்...

இதற்கமைவாக தற்போது கல்வி பொது தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரப் பரீட்சைகள் நடத்தப்படும் காலப்பகுதியில் திருத்தத்தை மேற்கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கு முன்னர் உயர்தரப் பரீட்சை ஆகஸ்டிலும் சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் மாதத்திலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இது தவிர 10 மற்றும் 11ஆம் தரங்களுக்கான பாடத்திட்டத்தை ஒரு வருடமும் 09 மாதங்களுக்கு மட்டுப்படுத்தி மறுசீரமைக்க கல்வி அமைச்சர் முன்மொழிந்த யோசனைக்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு எடுக்கும் காலத்தை குறைப்பதன் மூலம் குறுகிய காலத்தில் மாணவர்கள் முதல் பட்டப்படிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடல் மற்றும் க.பொ.த (உயர் தரப்) வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கும் இடையே எடுக்கும் காலப்பகுதி மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்காக மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக எடுக்கும் காலம் அதிகரிப்பதால் மாணவர்கள் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்வதிலும், பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்வதிலும் அதிக காலம் எடுக்கிறது. முறையே அவர்களுடைய வயது 19,20 மற்றும் 25,26 வயதாகின்றது என்பது தெரியவந்துள்ளது.

இப்பரீட்சை முறையில் இருக்கின்ற கட்டமைப்பு ரீதியான பொருத்தமற்ற தன்மை, நடைமுறையிலுள்ள தொழில்நுட்ப விதிமுறைகள் தொடர்பாக நிர்வாக ரீதியான காலதாமதங்களால் உயர் கல்வியை துரிதமாகப் பூர்த்தி செய்து தொழில் சந்தைக்குப் பிரவேசிப்பதற்கு இளைஞர் யுவதிகளுக்கு தேவையற்ற விதத்தில் காலத்தை செலவிட நேரிட்டுள்ளது. இந்நிலைமை அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியாகவும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் தீமை பயக்குகின்றதென்பது கண்டறியப்பட்டுள்ளது. அதனால், எதிர்வரும் காலங்களில் இந்நிலைமையை தடுப்பதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# களுபோவில வைத்தியசாலையின் மில்லனியம் விடுதி, வெளிநோயாளர் பிரிவுகள் விரைவில் பூர்த்தி



மர்லின் மரிக்கார்

கொவிட் 19 தொற்று பரவுதலின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு, கொழும்பு தெற்கு களுபோவில போதனா வை த்தியசாலையின் மில்லனியம் விடுதி வளாகம் மற்றும் வெளிநோயாளர் பிரிவின் நிர்மாணப் பணிகள் அடுத்துவரும் சில நாட்களுக்குள் நிறைவு செய்யப்படும் என்று கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

களுபோவில போதனா வைத்தியசாலையின் மில்லனியம் விடுதி வளாகம் மற்றும் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றின் கட்டட நிர்மாணங்களைப் பார்வையிட விஜயம் செய்த இராஜாங்க அமைச்சரே மேற்கண்டவாற தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், கொவிட் 19 தொற்றின் தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு வைத்தியசாலை கட்டமைப்புக்களை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏற்பட்டுள்ளது. அதற்கு ஏற்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்புலத்தில் சுகாதார அறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்றி பொருத்தமான செயல்பாட்டு முறைமையின் கீழ், களுபோவில வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் களுபோவில போதனா வைத்தியசாலையின் மில்லனியம் விடுதி வளாகம் மற்றும் வெளிநோயாளர் பிரிவின் நிர்மாணப் பணிகள் விரைவாக நிறைவு செய்யப்பட்டு சுகாதார அமைச்சிடம் கையளிப்படும்



சுகாதார அமைச்சின் ரூ. 743 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்படும் இக்கட்டடம் 10 தளங்களைக் கொண்டுள்ளது.

அவற்றில் ஐந்து ஆய்வுகூடங்களும் இரண்டு வெளிநோயாளர் பிரிவுகளும் உள்ளடங்கியுள்ளன.

இதன் நிர்மாணப் பணிகளை கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழுள்ள அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இச்சமயம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரத்னசிறி கலுபஹன, உப தலைவர் பாக்ய ஜயதிலக உட்பட அரச அதிகாரிகள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# துருக்கி தூதுவர் ஹசன் தலைமையில் ரமழான் உதவிப் பொதி அன்பளிப்பு



துருக்கி நாட்டுக்கான இலங்கையின் தூதர் எம்.ஆர். ஹசன் மற்றும் தூதரக ஊழியர்களின் பங்களிப்புடன் துருக்கி அங்காரா யைலபாக் கிராம பகுதியில் உள்ள மக்களுக்கு மளிகைப் பொருட்கள், பேரிச்சம் பழம் பரிசு வவுச்சர்கள் மற்றும் இலங்கை சிற்றுண்டிகள் உள்ளிட்ட ரமழான் உதவிப் பொதிகள் அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இவை கிராமத்தின் தலைவரான முஸ்தபா செட்டினிடம் பொதுமக்கள் முன்னிலையில் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு துருக்கி தூதரகம் இப்தார் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்யவிருந்தது, இருப்பினும் கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக, இந்த நிகழ்வை ரத்து செய்து உதவி தேவைப்படும் மக்களிடையே ரமழான் உதவி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புனித ரமழான் மாதத்தில் இலங்கை மற்றும் துருக்கி மக்களிடையே ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

அங்காராவின் கோல்பாஸினுக்கு அருகில் இந்த நகரம் அமைந்துள்ளது. இப்பகுதி மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பினை பிரதான ஜீவனோபாயமாக மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது .(பா)

# கொரோனா நோயாளி சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையின் கொவிட் 19 கொரோனா சிகிச்சைப் பிரிவில்,சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர், உயிரிழந்துள்ளதாக திஸ்ஸமகாராமை சுகாதார வைத்திய அதிகாரி பிரபாத் லியணாரச்சி (02) தெரிவித்தார்.

இவரின் உடல் திஸ்ஸமகாராமை தகனச்சாலையில் தகனம் செய்யப்பட்டுள்ளது. மாத்தறை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 75 வயதுடைய இந்நபர், கொவிட் 19 கொரோனா தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக ஹம்பாந்தோட்டை மாவட்ட பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பெற்றுகொண்டிருந்த போதே, இவர் உயிரிழந்தார்.

## போராட்டம் கை விடப்பட்டது

ஹபாந்தோட்டைகுறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை உத்தேச யானைகள் காட்டுப் பிரதேசத்தை வர்த்தமானி அறிவித்தலாகவெளியிடுமாறுகோரிசூரியவெளவல்ஸபுகளை பிரதேசத்தில் 105 நாட்களாக தொடர்ந்து நடைபெற்றுவந்த தொடர் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ,விவசாயிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலையடுத்து இப்போராட்டம் கைவிடப்பட்டது. சுமார் 105 நாட்களாக மக்கள் இந்தப் போராட்டத்தை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.


திகதி 03.05.2021 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4470
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,673,560.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 6 3 1 2 0 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,391,638.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2765
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,985,660.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 02 03 06 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,012,323.60

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 827
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,757,720.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 131,873,164.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து M சுப்பர் இலக்கம் 06 வெற்றி இலக்கங்கள் 21 59 60 69

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 507
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,885,780.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 10 42 49 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,043,272.40

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1678
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,594,300.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 18 28 89 94
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,116,477.10

03.05.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 603,822
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 24,897,020.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 01 ரூ. 1,000,000.00 பரிசு 02 ரூ. 100,000.00 பரிசுகள் 24

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஆரம்ப வேலைகளின் தெரிவிற்கான அழைப்பு**
(வடிவமைத்தல் மற்றும் கட்டுமான ஒப்பந்தம்)
திட்டவட்டமான பெறுகை அறிவித்தல்
ஆரம்ப தெரிவிற்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**
இலங்கையின் தென்மேற்கில் நகர்களுக்கான சுத்திகரிப்பு மற்றும் சுகாதார முன்னெடுப்பு (SHIFT-1)
AFD CREDIT FACILITIES AGREEMENT No:CLK 1013 01K
பொதி 2 : நீர்கொழும்பு மாநகர சபை பிரதேசத்திற்கான பொறித்தொகுதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி மற்றும் கழிவு அகற்றல்
ஒப்பந்த இல: NWSDB/AFD/SHIFT-1/DB/PACKAGE-2/2019-02

**2021.03.17ஆம் திகதியிடப்பட்ட விளம்பரம் தொடர்பானது**

இக்கேள்வியின் முடும் திகதி 2021 மே 17ஆம் திகதி பி.ப. 2 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென தயவுசெய்து கவனிக்கவும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை.**





## வளமான விவசாய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணிப்பதற்காக விலைமனு கோரல்

### வடமேல் மாகாண விவசாயத் திணைக்களம் - குருநாகல்

வடமேல் மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு பின்வரும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து வடமேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் 2021-05-28ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இயைபுடைய விலைமனுக்களை 2021-05-28ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தலைவர், பெறுகைக் குழு, மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், தம்புல்லை வீதி, குருநாகல்'' எனும் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து 3ஆம் மாடியிலுள்ள பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். சகல விலைமனுக்களையும் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விவசாய உபகரணங்களுக்காக விலைமனு கோரல் 2021'' எனவும் மற்றும் இயைபுடைய அலுவலக உபகரணத்தின் பெயர் மற்றும் தொடரிலக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

| தொ. இல. | வகை | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறித் தொகை |
|---|---|---|---|
| 1 | 20mx10m பாதுகாப்பு இல்லங்களை நிர்மாணித்தல் | 10 | 150,000.00 |
| 2 | பெரஷுட் தட்டு | 300,000 | 120,000.00 |
| 3 | Inter Cultivator | 171 | 73,000.00 |
| 4 | விதைகள் விதைக்கும் இயந்திரம் | 181 | 23,000.00 |
| 5 | விலங்குகளைத் தடுக்கும் வேலி (பெரியவை) | 239 | 60,000.00 |
| | சின்ன வெங்காயச் செய்கைக்கான விசுறும் நீர் வழங்கல் முறைமை | | |
| 6 | 1/4 ஏக்கர் | 40 | 28,000.00 |
| 7 | 1/2 ஏக்கர் | 35 | 35,000.00 |
| 8 | 1 ஏக்கர் | 10 | 12,500.00 |
| 9 | 1/4 ஏக்கர் (கல்பிட்டி) | 30 | 22,500.00 |
| 10 | 1/2 ஏக்கர் (கல்பிட்டி) | 30 | 36,000.00 |
| 11 | 1 ஏக்கர் (கல்பிட்டி) | 150 | 255,000.00 |
| | மிளகாய்ச் செய்கைக்கான விசுறும் நீர் வழங்கல் முறைமை | | |
| 12 | 1/4 ஏக்கர் | 100 | 85,000.00 |
| 13 | 1/2 ஏக்கர் | 140 | 196,000.00 |
| 14 | 1 ஏக்கர் | 10 | 20,000.00 |
| 15 | 1/2 ஏக்கர் (கல்பிட்டி) | 50 | 50,000.00 |
| 16 | 1 ஏக்கர் (கல்பிட்டி) | 50 | 75,000.00 |
| | நீர் பம்பிகள் | | |
| 17 | மின் நீர் பம்பிகள் (உயர்ந்த குணநலன்களுடன்) | 55 | 45,000.00 |
| 18 | எரிபொருள் நீர்ப் பம்பி (உயர்ந்த குணநலன்களுடன்) | 90 | 81,000.00 |
| 19 | மின் நீர் பம்பி (சாதாரணம்) | 435 | 200,000.00 |
| 20 | எரிபொருள் நீர் பம்பி (சாதாரணம்) | 180 | 90,000.00 |
| 21 | சொட்டு நீர் வழங்கல் முறைமை | 50 | 175,000.00 |
| 22 | சூரிய வெப்ப உலர்த்தும் இயந்திரம் | 100 | 150,000.00 |

1) ஒவ்வொரு உருப்படிக்காகவும் விலைமனுக்களை வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் ஒரு உருப்படிக்காக மட்டுமே விலைமனுவைச் சமர்ப்பிக்கலாம். ஒரு உருப்படிக்கான விலைமனு மாதிரிப் படிவக் கட்டணம் 1,000.00 ரூபாவாகும் என்பதுடன் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு உருப்படிக்காக ஒன்றுக்கும் மேற்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதானால் அதற்காக வேறான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்தின் பல உருப்படிகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பித்தால் அந்த விலைமனு நிராகரிக்கப்படும்.

2) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறான வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியை ரொக்கப் பணமாக அல்லது இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் அல்லது காப்புறுதி முகவர் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 2021-08-28ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வங்கிப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். 2021-05-06ஆம் திகதி முதல் 2021-05-27ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் மாதிரிப் படிவங்களை வடமேல் மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

3) விலைக்கோரல் மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைய விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4) இதன் பொருட்டான மேலதிக தகவல்கள் தேவையாயின் 037-2222325/ 037-2221235 எனும் தொலைபேசி இலக்கங்களில் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

5) இந்த விலைக்கோரல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**மாகாண விவசாயப் பணிப்பாளர்,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண விவசாயத் திணைக்களம் (வடமேல்),**
**தம்புல்லை வீதி,**
**குருநாகல்.**

# கேள்வி கோரல் அழைப்பு

**வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக காணி, மின்சக்தி மற்றும் எரிசக்தி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கலாசார மற்றும் கலைவிடயங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு**

**வடமேல் மாகாண சபை**

## ஆசிய வலு மின்சாரத் தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

### NWP/MOCD/ACC/04/80/04/04

01. புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவிற்கு உரித்தான பள்ளியவத்த கிராம அதிகாரப் பிரிவில் பத்தலனதுன்டுவ தீவில் அமைந்துள்ள 10 வீடுகளைக் கொண்ட வீட்டுத் தொகுதிகள் 10 இற்கு சூரியவலு மின் வசதிகளை வழங்குவதற்காக சூரியவலு மின் தொகுதிகளை வழங்குதல், நிறுவுவதற்காக தகைமை கொண்ட, திறன்உடைய, நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. விபரம் கீழ்க்காணுமாறு அமையும்.

| தொடர் இல | விபரம் | எதிர்பார்க்கும் அளவு |
|---|---|---|
| 01. | 10 வீடுகளைக் கொண்ட 10 வீடமைப்புத் தொகுதிகளுக்காக சூரிய வலு தொகுதிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல். (100 வீடுகள்) | 10 வீடுகளைக் கொண்ட 10 தொகுதிகளுக்காக (100 வீடுகள்) |

03. மேலே குறிப்பிடப்படும் முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ரூ. 3500.00 மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை அமைச்சிற்கு காசாகச் செலுத்தி அமைச்சின் கணக்காளரிடம் கேள்வி ஆவணங்களை 2021.05.05 முதல் 2021.06.02 பி.ப. 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை விநியோகித்தல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் கட்டணங்கள் இன்றியே பரீட்சித்தல் கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் இடத்தில் மேற்கொள்ளலாம்.
04. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2021.08.19 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
05. இக் கேள்விப் பத்திரத்துடன் 2021.09.17 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் ரூ. 300,000.00 கேள்விப் பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
06. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகல் பிரதியுடன் 2021.06.03 ந.ப. 12.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு, தலைவர் அமைச்சு பெறுகைக் குழு, வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, காணி, மின்சக்தி மற்றும் எரிசக்தி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, கலாசார மற்றும் கலைவிடயங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு, இரண்டாம் மாடி, மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அமைச்சு அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் ஏற்றல் முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் இக்கேள்விகள் திறக்கப்படும்.
07. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்கம் குறித்த செயற்றிட்டத்தை இணங்கானும் இலக்கம் மற்றும் ‘விலைமனுக்கள் சூரியவலு மின்சார தொகுதிகள் வழங்குதல்-2021’ என்று குறிப்பிடப்படுவதுடன், கேள்விகள் சமர்ப்பித்தல் சார்பாக ஏற்படும் எந்த விதமான செலவுகள் பற்றியும் செயற்குழுவினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது அத்துடன் சகல செலவுகளும் கேள்விதாரரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
08. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2021.05.24 பி.ப. 2.00 இற்கு இவ் அமைச்சின் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.
09. மேலதிக விபரங்களை அமைச்சின் கணக்காளரிடம் தொலைபேசி இல. 037-2227960 மூலம் பெற்றுக்கொள்ளலாம்
10. இப்பெறுகையை முழுமையாக ஏற்றுக்கொள்ளல் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது முழுமையாக நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**

**திகதி: 2021.05.05**

# NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் தூய பசும்பாலை விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரல் அறிவித்தல்

2021 ஜூலை 01 முதல் செப்டெம்பர் 30 வரையான காலத்திற்கு நாளாந்த அடிப்படையில் கீழே விபரிக்கப்படும் NLDB மலைநாடு, உவர்வலயம் மற்றும் தென்னை முக்கோண பண்ணைகளினால் தயாரிக்கப்படும் தூய பசும்பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவாளர்கள் கம்பனிகளிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு -05, நாரஹேன்பிட்ட, நாவல வீதி, இல.40, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை தலைவர் கோருகின்றார்.

| பண்ணை | முகவரி | ஒரு நாளைக்கான அதிகூடிய சராசரி எண்ணிக்கை |
|---|---|---|
| போபத்தலாவ | போபத்தலாவ பண்ணை, போபத்தலாவ | 3000 |
| மெனிக்பாலம் | மெனிக்பாலம் பண்ணை, போபத்தலாவ | 4000 |
| டயகம | டயகம பண்ணை, டயகம | 3500 |
| ரிதியகம | ரிதியகம பண்ணை, அம்பலந்தொட்ட | 15000 |
| ரோசித்த | ரோசித்த பண்ணை, கொட்டகல | 250 |
| மரன்டவில | மரன்டவில பண்ணை, பிங்கிரிய | 200 |
| ஆண்டிகம | ஆண்டிகம பண்ணை, உடுபத்தாவ | 600 |

| பண்ணை | முகவரி | ஒரு நாளைக்கான அதிகூடிய சராசரி எண்ணிக்கை |
|---|---|---|
| கல்பொக்குன | கல்பொக்குன பண்ணை, உடுபத்தாவ | 200 |
| கொவுல்வெவ | கொவுல்வெவ பண்ணை, நாரம்மல | 500 |
| ருக்அத்தன | ருக்அத்தன பண்ணை, பிங்கிரிய | 300 |
| நாரங்கல்ல | நாரங்கல்ல பண்ணை, கித்தலாவ | 200 |
| சிரிங்கபத்த | சிரிங்கபத்த பண்ணை, படல்கம | 200 |
| மெல்சிரிபுர | மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 350 |
| நிக்கவெரட்டிய | நிக்கவெரட்டிய பண்ண, நிக்கவெரட்டிய | 150 |
| ஓயமடுவ | ஓயமடுவ பண்ணை, ஆலயபட்டுவ | 100 |

கீழ்க்காணும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அவர்களது விலைமனு ஆவணங்களை கொள்வனவாளர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் மேற்படி பெறுகைக்காக, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையுடன் ஓர் சட்டரீதியான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்படும் கொள்வனவாளர்/கொள்வனவாளர்கள் இணங்குதல் வேண்டும். அத்துடன் 02 வாரங்கள் பால் கொள்வனவு செய்வதற்கான காசு முற்பணம்/வங்கிப்பிணையை வழங்குதல் வேண்டும்.

உத்தேச கொள்வனவாளர்களால் உத்தேச பண்ணைகளில் இருந்து பாலை போக்குவரத்து செய்தல் வேண்டும்.

திகதி:
தலைவர்,
தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை
இல-40, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு - 05

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிலிருந்து தூய பசும்பாலினை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள்**

கொள்வனவாளர்/கம்பனியின் பெயர் : ..............................
கொள்வனவாளரின் உத்தியோகபூர்வ முகவரி :..............................

கிழே குறிப்பிடப்படும் விலைகளில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையிலிருந்து கீழ்க்காணும் அளவில் தூய பாலினை கொள்வனவு செய்ய நாம் இணங்குகிறோம்.

| | பண்ணை | தூய பால் ஒரு லீற்றருக்கு எதிர்ப்பார்க்கப்படும் விலை | ஒரு நாளில் கொள்வனவு செய்வதற்கு இணங்கும் அளவு | Fat% | SNF% |
|---|---|---|---|---|---|
| 01 | .............................. | | | | |

ஏனைய விலைகள் :..............................

..............................
**திகதி**

..............................
**கையொப்பம் மற்றும் கொள்வனவாளர்/கம்பனியின் உத்தியோகபூர்வ முத்திரை**

கொழும்பு 05, நாரஹேன்பிட்ட, நாவல வீதி, இல.40, த.பெ-1748, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை (NLDB) தலைவரை அடையுமாறு பொறியிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது 2021.05.25 பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் இவ் அலுவலகத்தில் காணப்படும் விலைமனுப்பெட்டியிற் வைப்பிலிடல் வேண்டும். தயவுசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயரை குறிப்பிடுங்கள் தே.ப.வி.அ.சபையின் தீர்மானம் இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

விலைமனுக்கள் அதே தினம் பி.ப.2.30 மணிக்கு திறக்கப்படும் அத்துடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற முகவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதன் பேரில் விலைமனு திறத்தல் வேளையில் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இல-40, நாவல வீதி, கொழும்பு - 05**
**தொ.பே - 011-2501701/2, 0773782127.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாவட்டச் செயலகம் — காலி

மாவட்டச் செயலக பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் பின்வரும் பிரதேச செயலாளர் அலுவலகங்களின் கட்டிடங்களுக்கு மின்னுயர்த்திகளை வழங்கி பொருத்துவதற்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து 2021-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விதாரர்கள் பின்வரும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையை மாவட்டச் செயலகத்தின் இரண்டாம் மாடியில் உள்ள சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2021-05-05ஆம் திகதி முதல் 2021-05-28ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களுடனான விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தரங்களுக்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) Elevators, Escalators & Travellators துறையின் கீழ் அரச வேலைகளுக்காக பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களைக் கையளிக்கப்பெறுவதற்காக தகைமையைப் பெறுவர்.

கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பொதுவான கடமை நேரங்களில் காலி மாவட்டச் செயலகத்தின் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 091-4944806.

கேள்விப் பிணை முறியின் பொருட்டு ‘மாவட்டச் செயலாளர் - காலி’ எனும் பெயரில் கேள்விப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் செல்லுபடியாகும் பிணை முறியொன்றை கேள்விப் படிவங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | வேலை | CIDA பதிவு | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை ரூபா | கேள்விப் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|
| 1. | பத்தேகம பிரதேச செயலகத்திற்கு மின்னுயர்த்தியை வழங்கி பொருத்துதல் | EM3 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 75,000.00 |
| 2. | கொனாபினுவல பிரதேச செயலகத்திற்கு மின்னுயர்த்தியை வழங்கி பொருத்துதல் | EM3 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 75,000.00 |
| 3. | ஹபராதுவ பிரதேச செயலகத்திற்கு மின்னுயர்த்தியை வழங்கி பொருத்துதல் | EM3 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 75,000.00 |
| 4. | ஹிக்கடுவ பிரதேச செயலகத்திற்கு மின்னுயர்த்தியை வழங்கி பொருத்துதல் | EM3 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 75,000.00 |
| 5. | நியாகம பிரதேச செயலகத்திற்கு மின்னுயர்த்தியை வழங்கி பொருத்துதல் | EM3 அல்லது அதற்கு மேல் | 2,000.00 | 75,000.00 |

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை 2021-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் குறித்த கேள்விப் படிவங்களை மாவட்டச் செயலகத்தின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தின் கணக்கியல் பிரிவில் பிரதான கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். கேள்விப் படிவங்கள் இரு நகல்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) அவைகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். 2021-05-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். பூரணமற்ற கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் பிணைத் தொகை அரசுரிமையாக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மாவட்டச் செயலாளர்,**
**காலி நிர்வாக மாவட்டம்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மாவட்டச் செயலகம், திருகோணமலை

01. கீழ் குறிப்பிடப்பட்ட தரத்திற்காக CIDA பதிவை பெற்ற தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக திருகோணமலை மாவட்ட செயலகம் சார்பில் மாவட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
03. திருகோணமலை மாவட்டத்தின், மாவட்ட செயலக, கணக்கு பிரிவின் அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி திருகோணமலை, மாவட்ட செயலக, கணக்கு பிரிவு அலுவலகத்தில் வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை 2021 மே 05 அன்று தொடக்கம் 2021 மே 24 அன்று வரை எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
04. பெறுகை முறையானது தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் நடத்தப்படும். எவ்வாறாயினும், கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் திருகோணமலை, மாவட்ட செயலக, கணக்கு பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விரும்பினால், பெறுவதற்கு முன்னதாக கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி இலக்கம்: 026-2222233, தொலைநகல் - 026-2228310)
06. கீழ் குறிப்பிடப்பட்ட தொகைக்காக மாவட்ட செயலாளரின் பெயருக்கு வரையப்பட்ட விலைமனு பிணை ஒன்றுடன் அசல் மற்றும் நகல் என குறிப்பிடப்பட்டு அனைத்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களும் 2021.05.25 அன்று பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகை குழு, மாவட்ட செயலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு சமர்ப்பிக்கவோ அல்லது திருகோணமலை, மாவட்ட செயலகத்தில் கணக்கு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கோ இடலாம் என்பதோடு 2021.05.25 அன்று பி.ப. 3.00க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்க முடியும்.
    a. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகை குழுவின் முடிவு இறுதியானது.
    b. விலைமனு பிணையானது ரொக்கப்பணமாக அல்லது அரச வங்கி பிணைமுறியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மூலம் அல்லது CGF பிணைமுறிகள் மூலம் இருத்தல் வேண்டும்.

| வரிசை இல. | பணியின் பெயர் | CIDA/ ICTAD தரம் | மதிப்பிடப்பட்ட செலவு (மில்.) VAT தவிர்த்து) | ஒப்பந்தக் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை (ரூபா) | செல்லுபடி (திறக்கப்படும் திகதியில் இருந்து) |
| 1 | வெருகலில் அமைந்துள்ள இலங்கைத்துறை முகத்துவாரத்தில் அணைச் சுவர் மற்றும் மதகு நிர்மாணம் (GAT/FIN/PU09/WALL. VER/2021) | C8 மற்றும் C7 மாத்திரம் (சிவில்) | 3.55 | 04 மாதங்கள் | 2,500.00 | 63 நாட்கள் | 71,000.00 | 94 நாட்கள் 2021.08.23 |
| 2 | கந்தளாயில் அமைந்துள்ள சூரியபுற வெள்ளநீர் காப்பு அணைக்கட்டின் மேம்பாடு (6+100 தொடக்கம் 7+200 வரை) (GAT/FIN/PU09/BUND. KAN(S)/2021) | C6 மற்றும் C5 மாத்திரம் (நீர்ப்பாசனம்) | 9.15 | 05 மாதங்கள் | 5,000.00 | 77 நாட்கள் | 200,000.00 | 105 நாட்கள் 2021.09.06 |
| 3 | ஜனரஞ்சனா திட்டத்தின் வெள்ளநீர் காப்பு அணைக்கட்டின் மேம்பாடு (5150 மீ. தொடக்கம் 5525மீ. வரை) (GAT/FIN/PU09/BUND. KAN(J)/2021) | C8 மற்றும் C7 மாத்திரம் (நீர்ப்பாசனம்) | 3.0 | 04 மாதங்கள் | 2,500.00 | 63 நாட்கள் | 60,000.00 | 94 நாட்கள் 2021.08.23 |

**தலைவர்,**
**மாவட்ட பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**திருகோணமலை**
**திகதி 2021.05.04**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

# கே.வி.ஆனந்த் என்னும் கலைப்பொக்கிஷம்



வெற்றி துஷ்யந்தன்

தமிழகத்திரைத்துறை அண்மிய நாட்களாய் பல திடீர் இழப்புக்களை சந்தித்து வருகின்றது. கொரோனா தொற்று நோய்க்கிருமியின் வீரியம் உலகத்தை மீள ஆட்டிப்படைக்கும் இரண்டாம் காலத்தில் உலகளாவிய ரீதியில் பல உயிர்களை மனித இனம் இழந்து வருகின்றது. சின்னக்கலைவாணர் நடிகர் விவேக்கின் பிரிவுத் துயர் ஆறி அடங்க முன்பதாக இன்னுமொரு மாபெரும் இழப்பாக அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கின்றது. கே.வி.ஆனந்த்தின் திடீர் மறைவு.

தமிழக திரைத்துறைச் சூழலில் தன்னை ஒரு கனதிமிகு திரைக் கலைஞனாய் நேரியதொரு பாதையில் சரியான வழிநோக்கி கட்டமைத்துக் கொண்டவர் இவராவார். பிரபல்யமான ஒளிப்பதிவாளராக குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவராக திகழ்ந்தவரும் இவரே. ஒளிப்பதிவாளராக தனது திரைப்பயணத்தை ஆரம்பித்த இவர் 1994ம் ஆண்டு தென்மாவின் கொம்பத்து என்ற மலையாளத் திரைப்படத்தின் வாயிலாக தமிழ்த்திரைப்பட வெளிக்குள் உட்புகுந்தார்.

**கே.வி. ஆனந்தை பொறுத்தவரை ஒளிப்பதிவாளர், இயக்குனர் என்ற ஒரு தள நகர்விலும் மிகவும் வல்லமையான படைப்பாளி என்பதையும் தாண்டி தமிழ் திரைத்துறையின் அடுத்த கட்டபரிமாண வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருக்கக்கூடிய பலரில் இவரும் ஒருவராக பிரதானமாக இருப்பார் என அவரது திறமைசார்ந்த எதிர் பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது.**

**ஒரு நாள் முதல்வராக பணி யேற்கும் அர்ஜுனின் ஒருநாள் பணிகளை பல கோணங்களால் காட்சிப்படுத்திய விதமும், நாயகி மனீஷா கொய்ராலாவை பச்சைப்பசேல் என்ற கிராமியப்பின்னணியில் துல்லியமாக காட்டியதான பலவிடங்கள் ரசிக்கவைத்தன. ஒளிப்பதிவாளராக இப்படி பல பாடல்களில் இவரை தரிசித்த ரசிகர்களை இயக்குனர் அவதாரம் எடுத்து அதனூடாகவும் கவர்ந்திழுக்கத் தொடங்கினார் கே.வி.ஆனந்த்.**

உண்மையில் காதல்தேசம் திரைப்படத்தின் அநேக இடங்கள் இவரது அற்புதமான உயிரோட்டமான காட்சிப் பதிவுகள் வாயிலாக சிறப்பாக தோற்றம் பெற்றன. அந்த சிறப்பை காதல் தேசம் திரைப்படத்தின் பாடல்கள் வாயில்களாகவும் தரிசிக்க முடிந்தது.

குறிப்பாக 'என்னை காணவில்லையே நேற்றோடு' என்ற பாடலில் ஆரம்பத்தில் அந்த அழகிய கடற்கரையாகட்டும், சூரிய அஸ்தமனம், பாடலின் ஆரம்பத்தில் அழகிய பல புறாக்கள் மேல் எள அதற்குள்ளால் நாயகி தபுவை காட்டுகின்ற தத்ரூபமான காட்சிப் பதிவுகள் அவருடைய திறனை பறைசாற்றி நின்றன.

ஒளிப்பதிவாளராக இவருக்கு நல்வரவேற்பினை பெற்றுக்கொடுத்த திரைப்படம் இயக்குனர் சங்கரின் முதல்வன் திரைப்படம். ஒவ்வொருகாட்சிகளும் கே.வி. ஆனந்த் அவர்களை என்றைக்கும் கொண்டடக்கூடியனவாய் அமையக்கூடியதாக அவை அமைந்திருக்கும். ஒரு நாள் முதல்வராக பணியேற்கும் அர்ஜுனின் ஒருநாள் பணிகளை பல கோணங்களால் காட்சிப்படுத்திய விதமும், நாயகி மனீஷா கொய்ராலாவை பச்சைப் பசேல் என்ற கிராமியப்பின்னணியில் துல்லியமாக காட்டியதான பலவிடங்கள் ரசிக்கவைத்தன.

ஒளிப்பதிவாளராக இப்படி பல பாடல்களில் இவரை தரிசித்த ரசிகர்களை இயக்குனர் அவதாரம் எடுத்து அதனூடாகவும் கவர்ந்திழுக்கத் தொடங்கினார் கே.வி. ஆனந்த். 2005 இல் கனாகண்டேன் என்ற திரைப்படத்தின் வாயிலாக அறிமுகமான இவர் 2009 இல் நடிகர் சூர்யாவை வைத்து இயக்கிய 'அயன்' திரைப்படம் வாயிலாக தன்னை காத்திரம் மிக்க இயக்குனராக நிலைநிறுத்தினார். உண்மையில் இந்த திரைப்படத்தின் வேகமும், கதை அமைப்பும், விவேகமுறு காட்சி அமைப்பும் இவரை தனித்துத் தெரிய வைத்தது. விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளை ஏமாற்றி, வித்தைகாட்டி மாறு வழி மூலம் வைரம் உள்ளிட்ட பலவற்றை கடத்திச் செல்லும், அவற்றை கைப்பற்றலும் என்ற மாதிரியான காட்சிகளில் இயக்குனராக இவர் கையாண்ட நவீன உத்திகள் உண்மையில் அநேகரையும் ரசிக்கவைத்து சூர்யாவிற்கு நல்லதொரு வரவேற்பை பெற்றுக் கொடுத்த பங்காளியாகவும் இவர் திகழ்ந்தார்.

தொடர்ந்து 2010இல் நடிகர் ஜீவாவை வைத்து 'கோ' எனும் திரைப்படத்தை இயக்கினார். உண்மையில் இந்தத் திரைப்படமானது ஊடகத்துறையில் பணியாற்றுகின்ற பல இளம் ஊடகவியலாளர்களுக்கு வரப்பிரசாதமான படமாக அமைந்து நல்வரவேற்பை கொடுத்தது எனலாம். ஒரு இளம் பத்திரிகையாளனின் துடிப்பு மிகு சேவையையும், அரசியல் வாழ்வையும் மிகச்சிறப்பாக பல சுவாரஷ்யங்களை உள்ளிருத்தி பத்திரிகை ஊடகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து இத்திரைப்படத்தை இயக்கி நல் வரவேற்பை பெற்றார்.

தொடர்ச்சியாக மாற்றான், அனேகன் என பிரசித்தம் பெற்ற திரைப்படங்களை இயக்கி தனது முத்திரையை பதித்தார்.

2017 இல் கவண் என்ற திரைப்படத்தை இயக்கி அதனையும் 'கோ' திரைப்படப்பாணியில் ஊடகத்துறைசார்ந்து காட்சிகள் ஊடாக பிரச்சினைகளை முன்வைத்து அந்தப் படத்தை இயக்கி நல்வரவேற்பை பெற்றார். தொடர்ந்து இறுதியாக 2019இல் நடிகர் சூர்யாவை மூன்றாவது முறையாகவும் 'காப்பான்' என்ற திரைப் படத்தின் ஊடாக இயக்கினார். வழமைபோல விரைவான காட்சி அமைப்பு, கதையம்சம் என தன் சார் அனைத்து தனித்துவங்களையும் இந்தப்படத்திலும் தாராளமாக நிறைத்திருந்தார்.

கே.வி. ஆனந்தை பொறுத்தவரை ஒளிப்பதிவாளர், இயக்குனர் என்ற ஒரு தள நகர்விலும் மிகவும் வல்லமையான படைப்பாளி என்பதையும் தாண்டி தமிழ் திரைத்துறையின் அடுத்த கட்டபரிமாண வளர்ச்சிக்கு ஊன்று கோலாக இருக்கக்கூடிய பலரில் இவரும் ஒருவராக பிரதானமாக இருப்பார் என அவரது திறமைசார்ந்த எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது.

பெரிய பெரிய நிறுவனங்களின் தயாரிப்புக்கள், பெரிய நடிகர்களின் திரைப்பட ஒப்பந்தம் என அவரிடமிருந்து ரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்ட பல விடையங்கள் என எல்லாமே காத்திருந்த போதுதான் கே.வி. ஆனந்தின் திடீர் மறைவு அனைவரையும் நீங்கா கவலையில் ஆழ்த்தியிருக்கிறது.

ஒரு கலைஞனிற்கு மரணம் இல்லை என்பார்கள்.

அதுபோலத்தான் திரைவெளியில் பல் ஊடகங்கள் வாயிலாக இயங்கிக் கொண்டிருந்த கலைஞனாக திகழ்ந்த கே.வி. ஆனந்த் தனது படைப்புக்கள் வாயிலாக என்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பார் என்பதே நிதர்சனம்.







பவதாரணி ராஜசிங்கம்

## பத்திரிகை சுதந்திரத்தை நாம் எந்தளவு கடைப்பிடிக்கிறோம்.....

பத்திரிகைத்துறை பல காலமாக பலம்மிக்க, ஒரு தனி மனிதனின், ஒரு நாட்டின், ஏன் உலகளாவிய ரீதியில் கூட பல வரலாற்று திருப்பங்களுக்கு காரணமாக அமைந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

நாடளாவிய / உலகளாவிய ரீதியில் தனித்தன்மை மிக்கதாகவும் சுதந்திரம் மிக்கதாகவும் மக்களின் தகவல் அறியும் உரிமையை மதிப்பதாகவும் விளங்கும் அதி உன்னத பொறுப்பு வாய்ந்த ஒரு விடயமாக பத்திரிக்கை துறை விளங்குகிறது.

ஊடகம் என்பது ஒரு கலை,சேவையாகும். இவ் ஊடகத்துறையில் பத்திரிகையின் பங்களிப்பானது காலம் கடந்தும் வலுவான ஒன்றாக திகழ்கிறது.

நவீன மயப்படுத்தப்பட்ட இக்காலகட்டத்தில் இலத்திரனியல் ஊடகங்களும், சமூக வலைத்தளங்களும் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதை நாம் அவதானிக்க முடிகிறது. ஒரு பொறுப்பான பிரஜையாக சமூக வலைத்தளங்களில் பத்திரிகை துறையின் தர்மத்தை எந்த அளவுக்கு கடைப்பிடிக்கின்றது என்று வினவினால் அது கேள்விக்குறியாகவே இருப்பதை அவதானிக்கலாம்.

பத்திரிகைத்துறை ஆனது பயிற்றுவிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே கைவந்த கலையாகும். ஏனென்றால் சரியாக ஆராயப்படாத, உறுதிப்படுத்தப்படாத எந்த ஒரு செய்தியும் ஒரு மனிதனின், ஏன் ஒரு நாட்டினதும் தலைவிதியையே மாற்றியமைக்கக்கூடிய சக்தி படைத்தது.

துப்பாக்கி குண்டுகளை விடவும் பேனாமுனை பாரிய பலம் வாய்ந்தது என்பது வல்லுனர்களின் அனுபவ வார்த்தை என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நமது நாட்டில் பத்திரிகை துறை சார்ந்து பல வல்லுனர்கள் கடந்த காலங்களில் நிலவிய துர்ப்பாக்கிய சூழலில் கொல்லப்பட்டது வரலாறு. இவ்வாறான வரலாற்றுச் சான்றுகள் உலகம் முழுவதும் பரந்து கிடக்கிறது.

பத்திரிகை சேவை என்பதையும், பத்திரிக்கை துறை என்பதையும் நாம் பய பக்தியோடு போற்ற வேண்டும். அதன் தர்மத்தை மதிக்க வேண்டும். பத்திரிகை துறையின் சுதந்திரம் இன்று மிகச்சாதாரணமாக மீறப்பட்டு வருவதை சமூக வலைத்தளங்களில் நாம் கண்கூடாக காண முடிகிறது. உலக பத்திரிகை சுதந்திர தினத்தை அனுஷ்டிக்கும் நாம் பத்திரிகை தர்மத்தை, அதன் சுதந்திரத்தை மதிக்கவும் பாதுகாக்கவும் இந்த நாளில் உறுதி பூணுவோம். வெறுமனே வார்த்தைகளில் அல்லது செயற்பாடுகளில் நாம் அதை எந்த அளவு ஏற்றுக் கொள்கிறோம், எந்த அளவு கடைபிடிக்கிறோம் என்பதே நாம் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

## மதிநுட்பக் கலைஞனாய் வலம் வரும் S. பிரியங்கன்



வெற்றி துஷ்யந்தன்

ஈழத்து திரைத்துறையின் அண்மிய நகர்வு என்பது ஆரோக்கியமான பல விடயங்களை நம்மவர் செய்து கொண்டிருப்பதில் நமது இளம் நட்சத்திரங்களின் பங்கு மிகக் காத்திரமானது. கடந்த பத்து ஆண்டுகளாக வட பகுதியை பொறுத்தவரை இளையோர்கள் இந்த திரைத்துறையில் தம்மை முழுமையாக இணைத்து பல நல்ல படைப்புக்களின் முகிழ்விற்கு காரண கர்த்தாக்களாக இருக்கின்றனர்.முழுமையான தொழில் துறையாக அது இன்னமும் எங்கள் மத்தியில் பரிணாமம் அடையாவிடினும் ஓரளவுக்கேனும் எங்கள் படைப்பாளிகளை தீவிர ஈடுபாட்டுடன் இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றது. ஈழத்து திரைத் துறை. அப்படியான இந்த திரைத்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் கலைஞர்களில் பிரியங்கன் மிக முக்கியமானவர். நல்லதொரு படத்தொகுப்பாளராகவும், இயக்குனராகவும் இதர தொழில் நுட்பம் சார்ந்தும் தன்னை குறுகிய கால இடைவெளிக்குள் கட்டமைத்துக் கொண்டவர் இவராவார். எந்தவொரு குடும்பப் பின்னணியும் இன்றி இந்த திரைத்துறையின் மீதான மோகத்தால், திரைத்துறை நண்பர்களின் பங்களிப்பு, மூத்தவர்களின் அனுபவ அறிவுரைகள் ஊடாக இன்றுவரை தன்னை வளர்த்துக் கொள்கின்ற ஒருவராக தன்னை மாற்றி அதனூடாக தனது துறைசார் விடயங்களில் நேர்த்தியை பின்பற்றக்கூடிய ஒருவராக அவர் இன்று திகழ்கின்றார். யாழ்.நகரப் பகுதியை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை தனது கல்விக்கூடமாகவும் பெற்றுக் கொண்ட பிரியங்கன் உண்மையில் பழகுவதற்கும் இனிமையானவர்.



படத்தொகுப்பை பொறுத்தவரை தனது குருவாக இயக்குனர் வினோதன் அவர்களை நன்றி கலந்த பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளும் பிரியங்கன் திரைத்துறை சார்ந்து பல விடயங்களை அவரிடமே கற்றுக் கொண்டதாகவும் சொல்கின்றார்.

ஆரம்பத்தில் உதவி இயக்குனராக ஓணான் மற்றும் மாசறு குறும்படங்களில் பணியாற்றியுள்ள இவர் 2017 இல் வெளியான முழுநீளத் திரைப்படமான 'மனசுக்குள் ஒரு மழைச்சாரல்' திரைப்படத்தின் வாயிலாக கலை இயக்குனராகவும் பணியாற்றினார். உண்மையில் போருக்கு பின்னைய ஈழ சினிமாவில் இந்த திரைப்படம் மிக முக்கியமானதொரு படைப்பாக வெளியாகி அனேகரின் கவனத்தை ஈர்த்தது. உதயரூபனின் தயாரிப்பிலும் வினோதனின் இயக்கத்திலும் உருவான இந்தத் திரைப்பட காலகட்டம் தாயகத்தில் பல இளையோரை உருவாக்கியது. அவர்களுள் பிரியாங்கனும் முக்கியமானவர்.

இந்த திரைப்பட உருவாக்கப் பிணைப்பு பிரியங்கனை முழுமையான ஒரு இயக்குனராக்கியும் காட்டியது. உதயரூபனின் தயாரிப்பில் இவரின் இயக்கத்தில் உருவான 'அறுபடை' குறும்படம் அந்நாளில் நல்ல வரவேற்பை மாத்திரம் பெற்றதன்றி சிறந்த இயக்குனருக்கான இளமை விருதையும் இவருக்கு பெற்றுக் கொடுத்தது. இந்த இடத்தில் இந்த வாய்ப்பை தனக்களித்த உதயரூபனையும் நன்றிளோடு நினைவு கூர்ந்தார் இவர். வீடியோ பாடல்கள் மற்றும் ஒரு சில திரைப்படங்களிலும் நடிகராகவும் பங்கெடுத்திருக்கின்றார்.

இதன் தொடர்ச்சியாய் தன்னை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்திய பிரியங்கன் ஊடகப் பணி நோக்கி நகரத் தொடங்கினார். 2017 இல் ஆதவன் தொலைக்காட்சி வாயிலாகவும் அதன் பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளாக பகலவன் தொலைக்காட்சியில் படத்தொகுப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

படத்தொகுப்புப் பணியை நான் அருகிலிருந்து பார்த்ததன் விளைவாக சொல்கின்றேன் எதிர்பார்க்கின்ற விடயங்களை புரிந்து கொண்டு கலைத்துவ கண்ணோட்டத்துடன் பணியாற்றக்கூடிய அசாத்திய திறன் இவருக்கு வாய்த்திருக்கின்றது. தொழினுட்பம் சார்ந்தும், திரைத்துறை சார்ந்தும், ஒளிப்பதிவு சார்ந்தும் என எல்லாவற்றையும் அறிந்து தெரிந்து கொண்டு அதனூடாக பணியாற்றும் பிரியங்கனின் எல்லைகள் இன்னமும் விரிவடைய வேண்டும் என எதிர்பார்க்க தோன்றுகிறது.




2021 மே 5
புதன்கிழமை

# வடமாகாணத்தில் கொரோனா தொற்றுக்களை எதிர்கொள்வதற்கு சுகாதாரத் துறையினர் தயார்

## மேலதிக சிகிச்சை நிலையங்களும் நிறுவப்படும்

வட மா கா ணத்தில், கொரோனா நோய்த் தொற்று எதிர்வரும் காலங்களில் அ திகரிக்கும் பட்சத்தில், கோ ப்பாய் சிகிச்சை நிலையம்,கிளிநொச்சி சிகிச்சை நிலையங்களூடாக 600 நபர்களுக்கு முதற்கட்டமாக சிகிச்சை வழங்ககூடியதாக இருக்குமென வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பிலான நிலைமைகளைத் தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்று (04) யாழ் பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கருத்து தெரிவித்த போதே வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப்பணிப்பாளர் கலாநிதி ஆர்.கேதீஸ்வரன் இது பற்றிக் கூறினார்.

மேலும் அவர் தெரிவித்தாவது:வடமாகாணத்தில் நேற்று 404 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் 14 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

வடமாகாணத்தில் சுகாதார பணியாளர்களாக கடமையாற்றும் 6648 நபர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இவற்றில் நேற்று வரையான காலப்பகுதிக்குள் 1385 நபர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று, வடமாகாணத்திலும் பரவக்கூடிய நிலை எற்பட்டால், அதனை எதிர்கொள்வதற்கு வடமாகாண வைத்தியசாலைகள் தயார் நிலையிலுள்ளன.

கோப்பாய் சிகிச்சை நிலையம், கிளிநொச்சியில் சிகிச்சை நிலையங்களென,வட மாகாணத்தில் இரண்டு தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இவைகளில் 600 நபர்களுக்கு சிகிச்சை வழங்க முடியும். இதற்கு மேலதிகமாக, வட மாகாணத்தின் 05 மாவட்டங்களிலும் புதிய சிகிச்சை நிலையங்கள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொற்று இளவயதினரை வேகமாக தாக்குகின்றது. இதனால்,மாகாணத்திலுள்ள சுகாதார நிலையங்களில் புதிய விடுதிகள் அமைப்பதற்கான எற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.



## கொடிகாமம் சந்தைக்கு வந்தோரில் ஐவருக்கு தொற்று

(பருத்தித்துறை விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கொடிகாமம் சந்தைக்கு வந்து சென்றோரில், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் ஐவருக்கு கொரோனா தொற்றியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. கொடிகாமம் சந்தை வியாபாரிகள் 169 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சீஆர் பரிசோதனையிலே இந்த தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஏற்கனவே, சந்தையிலிருந்த சிலருக்கு தொற்று உறுதியானதால்,இந்த சந்தைத் தொகுதி மூடப்பட்டது. இந்நிலையில், சந்தை வியாபாரிகள் மற்றும் சந்தைக்கு வந்து சென்றவர்களென 169 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் உட்பட ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## சக ஊழியருக்கு கொரோனா: ஏனையோருக்கும் பிசீஆர்



(வவுனியா விசேட நிருபர்)

வவுனியாவில் நோயாளர் காவு வண்டி சாரதி ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து, அவருடன் தொடர்பைப் பேணிய சுகாதார துறையினருக்கு பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்று (04) இந்த பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

குறித்த,நோயாளர் காவு வண்டி சாரதி அண்மையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை தெரிய வந்தது.

இதையடுத்து, அலுவலகத்தில் கடமையாற்றியோர், தொடர்பை பேணியோர் என சுகாதார துறையினரிடம் பிசீஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.அந்த வகையில்

அவருடன் பணியாற்றிய சாரதிகள், உத்தியோகத்தர்கள், தாதியர்கள் என 13 பேரிடம் பிசீஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## தமிழ் கிராம அலுவலர் பிரிவுகளை வெலிஓயாவுக்குள் உள்வாங்கத் திட்டம்

### தமிழ் எம்பிக்கள் எதிர்க் குரலெழுப்புவது அவசியம்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில், தமிழ் கிராம அலுவலகர் பிரிவுகள் சிலவற்றை, மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாகத்துடன் இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக, வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு, கருநாட்டுக்கேணி, செம்மலை கிழக்கு, செம்மலை ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளை இணைப்பதற்கே இவ்வாறு முயற்சிக்கப்படுகிறது. இது தொடர்பான மகஜரையும் பிரதேச மக்கள் முன்னாள் மாகாண சபை உறுப்பினரிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்த மகஜரை, கட்சித் தலைமைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கையளிக்கவுள்ளதாகவும் ரவிகரன் தெரிவித்தார். இவ்வாறான முயற்சிகள் ஏற்கனவே, இடம்பெற்ற நிலையில் மக்களின் கடுமையான எதிர்ப்புக்களால் கைவிடப்பட்டது.மேலும், 13 எம்பிக்கள் கையொப்பமிட்டு 23.10.2020 அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் இது தொடர்பில் மகஜரும் சமர்ப்பித்ததால் இம்முயற்சிகள் கைவிடப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் இம்முயற்சிகள் இடம்பெறுவது கவலையளிப்பதாகவும் ரவிகரன் குறிப்பிட்டார். பூர்வீக இனமொன்றின் இருப்பை மலினப்படுத்தும் செயலாக இது இருக்கலாமென மக்கள் அச்சப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சர் சமல் ராஜபக்ஷவிற்குத் தெரிந்தோ அல்லது, தெரியாமலோ மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி, வெலிஓயாவுடன் இப்பகுதிகளை இணைக்க முயல்வதாகவும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் தெரிவித்தார்.

## அடிப்படை வசதிகளின்றி துணுக்காய் பிரதேச மக்கள் பெரும் அவதி

(முல்லைத்தீவு குறூப் நிருபர்)

முல்லைத்தீவு துணுக்காய் கல்விளான் கிராமத்திலுள்ள வீதிகள் பெரும் சேதமடைந்திருப்பதாக, துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் ந.தயந்தன் தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: கல்விளான் கிராமத்தில் 300 குடும்பங்கள் வாழ்கின்றன. இதில் 30 வரையான குடும்பத்தினர் வயல் காணிகள் இல்லாதுள்ளனர். காட்டு யானைகளின் தொல்லை, பயிர்கள் சேதமாதல் உள்ளிட்ட பிரச்சினைகளை இம்மக்கள் எதிர் கொள்கின்றனர்.

இதனால் யானை வேலிகள் அமைத்து தருமாறு இம்மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். எனினும், இந்த வேலி அமைக்கப்படாது காலங்கடத்தப்படுகிறது.இதற்கும் மேலதிகமாக,இப்பகுதியின் உள்வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளதால் மக்கள் பெரும் துயரங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது குடி நீரின்றியும் அவதிப்பட நேரிட்டுள்ளதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு கிலோ மீற்றர் தூரம் சென்றுதான் குடிநீரைப் பெற வேண்டியுள்ளதாகவும் இம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சாவகச்சேரி பொலிசாருக்கு கொரோனா

(சாவகச்சேரி விசேட நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் புதிதாக கடமைக்குச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இது, உறுதியாகியுள்ளது.

கடந்த (03) திங்கட்கிழமை இரவு கடமையிலிருந்த இவர், திடீரென காய்ச்சல் ஏற்பட்டதால்,சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டடார்.

பின்னர் இவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதியானது.

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 34 வயதான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே, இத் தொற்றுக்குள்ளானார். இவர், இடமாற்றம் கிடைத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமைக்கு இணைந்த சில தினங்களில் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்க அறிவித்தலையும் மீறி நடத்தப்பட்ட வகுப்புக்கள் முற்றுகை

(வவுனியா விசேட நிருபர்)

அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களையும் மீறி வவுனியாவில் நடத்தப்பட்ட குழு வகுப்புக்களை சுகாதார பிரிவினர் முற்றுகையிட்டனர். இந்த முற்றுகை நேற்று (04) இடம்பெற்றது.

கொவிட் அச்சுறுத்தலையடுத்து, பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள்,மேலதிக வகுப்புக்கள், தனியார் வகுப்புக்கள் என்பவற்றை மறு அறிவித்தல் வரை நடத்துவதற்கு அரசாங்கம் தடை விதித்திருந்தது. இந்நிலையில், குறித்த அறிவுறுத்தல்களை மீறியே, வவுனியாவில் சில குழு வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்ததால்,

அந்த வகுப்புக்களை சுகாதாரப் பிரிவினர் முற்றுகையிட்டனர்.

வவுனியா தோணிக்கல் பகுதியில் ஆறு மாணவர்களுடனும், குட்செட் வீதியில் 5 மாணவர்களுடனும் குழு வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு சென்ற சுகாதார பரிசோதகர்கள் அந்த வகுப்புக்களை இடைநிறுத்தினர். அங்கு கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் கல்வி கற்ற மாணவர்களுக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்ததுடன், கடும் எச்சரிக்கையும் விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் எட்டு இலட்சம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது மேலும் பலரைக் கைது செய்ய பொலிசார் விசாரணை

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் நேற்று மாலை ஐந்து மணியளவில் கைப்பற்றப்பட்ட எட்டு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் தொடர்பில், கிளிநொச்சி பொலிஸாரும், பொலிஸ் விசேட பிரிவினரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பொலிஸ் மா அதிபரின் கீழ் இயங்கும் கிளிநொச்சி விசேட பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் என். சோமேஸ்வரனுக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய

இந்த போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டன.

சாந்தபுரம் கிராமத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இவை, மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே நேற்று (04) மீட்கப்பட்டன. இதில், ஆயிரம் ரூபா நாணயத்தாள்கள் எட்டு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா இருந்தன.

சந்தேகத்தின் பேரில், மூன்று பிள்ளைகளின் தந்தையான ஒருவரையும் பொலிசார் கைது செய்தனர்.

## வவுனியா குளப்பகுதிகளிலிருந்து ஏழு மோட்டார் செல்கள், கைக்குண்டு மீட்பு

(ஓமந்தை விஷேட நிருபர்)



வவுனியா குஞ்சுக்குளம் மற்றும், வேலங்குளம் பகுதிகளில், வெடிக்காத நிலையிலிருந்த மோட்டார் செல்களை விசேட அதிரடி படையினர் நேற்று (04) மீட்டெடுத்தனர்.

குஞ்சுக்குளம், வேலங்குளம் பகுதிகளிலும் மற்றும் அப்பகுதி தனியார் காணியிலும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் இருப்பதை அவதானித்த பொதுமக்கள், இவ்விடயம் தொடர்பாக பொலிசாருக்கு தகவல் வழங்கினர். இதையடுத்து, குறித்த பகுதிக்கு விஜயம் செய்த பொலிசார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் அங்கு ஏழு மோட்டார் செல்கள் மற்றும் ஒரு கைக்குண்டையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிசார் நீதிமன்ற அனுமதியின் பின்னர், வெடிபொருட்களை அப்பகுதியிலிருந்து அகற்றவுள்ளதாக தெரிவித்தனர்.

## யாழ், பிரதேசத்தில் 313 கிலோ கஞ்சா ஒரே நாளில் மீட்பு: கடத்தல், பதுக்கல் நடவடிக்கைகளை முறியடித்து சாதனை

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணப் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில் 313 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. இவை, கடத்தி வரப்பட்ட நிலையிலும், கடலில் மிதந்த நிலையிலும் மற்றும் வீட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதுமே மீட்கப்பட்டன. இந்த வகையில், 95 கிலோ கஞ்சாவை, வேனில் கடத்த முயற்சித்த வேளையில் பருத்தித்துறையில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறை சுப்பர்மடம் சுடலைக்கு முன்பாக இந்தக் கைது இடம்பெற்றது. நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இந்நபர் கைது செய்யப்பட்டபோதும் இதில், இன்னொருவர் தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். 45 பொதிகளில் இருந்த 95 கிலோ கஞ்சாவும், வாகனமும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை இன்பசிட்டி பகுதியில் உள்ள வீட்டிலிருந்து 35 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. வீட்டில் இருந்த இளைஞரும் இதில்,கைதானார்.

மேலும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்து வந்த 183 கிலோ கிராம் கேரள கஞ்சாவையும் கடற்படையினர் மீட்டெடுத்தனர். சந்தேகத்திற்கிடமான பொதிகள் கடலில் மிதந்து வந்த வேளை, அதனை கடற்படையினர் சோதனை செய்து, இந்த 183 கிலோ கேரளா கஞ்சாவை மீட்டனர்.

இவ்வாறாக யாழில் கடந்த 24 மணி நேரத்தில் 313 கிலோ கஞ்சா மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பொகவந்தலாவை லெச்சுமி தோட்ட கீழ் பிரிவில் மண் சரிவு

## அச்சத்தில் மக்கள்





மலையகத்தில் பெரும்பாலான பகுதிகள் மண்சரிவு அபாயத்தை எதிர்கொண்டுள்ள பிரதேசங்களாகக் காணப்படுகின்றன இப் பிரதேசங்களில் மக்கள் இன்னும் அச்சத்துடன் வாழ்ந்துவருகின்றனர். மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டும் வேறு வழியின்றி அதே இடங்களில் வசிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சீரற்ற காலநிலை நிலவும் காலங்களில் தங்களின் இருப்பிடங்களை விட்டு தற்காலிக இடங்களில் தங்கவைக்கப்படுவதும் பின்னர் அதே இடத்தில் வந்து வசிப்பது மலையகத்தில் வழக்கமாகவுள்ளது. பல தோட்டங்கள் மண்சரிவு அனர்த்தத்தில் புதைந்து போன சோகத்தை இன்றும் ஜீரணக்கமுடியாதுள்ளது,

அந்தவகையில் பொகவந்தலாவை, லெச்சுமி தோட்ட கீழ்ப்பிரிவு மக்கள் தொடர்ந்து மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வாழ்ந்து வருவதுடன் நேற்று அப்பகுதியில் உள்ள குடியிருப்பின் முன்பகுதியில் மண் சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

பலத்த மழை பெய்துவரும் நிலையில் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

113 இலக்க லயன் அறைகள் கொண்ட குடியிருப்பு பகுதியில் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

சிறிய கற்பாறைகள் சரிந்துள்ளதுடன் மண் திட்டும் சரிந்துள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் லயன் அறைகள் அபாய நிலையில் இருப்பதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் சிறு பிள்ளைகளுடன் பெரும் சிரமங்களை எதிர்நாகேகுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்து தோட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஜீப் சேற்றில் ஓடும் ஓட்டப் போட்டியில் சுயார திலின முதலிடம்

**நுவரெலியா தினகரன் நிருபர்**



நுவரெலியா 4 ★ 4 கழகத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா கிறகறி வாவிக்கு அருகாமைல் நடைபெற்ற ஏப்ரல் வசந்த கால ஜீப் சேற்றில் ஓடும் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை சுயார திலினபெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை இந்திக்க சஞ்ஞேயும் மூன்றாம் இடத்தை ரங்க ஆங்கமவும் பெற்றுக்கொண்டனர்.

இந்த போட்டியில் இலங்கையில் பல இடங்களிலிருந்து 25 போட்டியாளர்கள் கலந்துக்கொண்டனர். 4★4 கழகத்தின் தலைவர் இசார வீரசிங்க தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுகொண்ட சுயார திலினவிற்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன.





இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட இந்திக்க சஞ்ஞேக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் சான்றிதலும், மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட ரங்க ஆங்கமவிற்கு 25 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன.

இந்த 4★4 ஜீப் ஓட்டப்போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதிகளாக நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரட்ன, முன்னாள் நுவரெலியா மாநகர முதல்வரும் தற்போதய மாநகரசபை உறுப்பினருமான. மஹிந்த தொடம்பேகமகே மற்றும் நுவரெலியா மோட்டர் ரேஸிங் கழகத்தின் தலைவர் உஜித்த சமரஜீவ உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டு வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

# நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக 104 பேருக்கு கொரோனா தொற்று

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 104 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்பு செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஹற்றன் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 23 பேருக்கும், வலப்பனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 23 பேருக்கும், நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 23 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், அம்பகமுவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும், பொகவந்தலாவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐவரும், டிக்கோயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஐவரும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கினிகத்தேனை, கந்தபளை, நோர்வூட், லிந்துலை மற்றும் ராகலை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி முதல் நேற்று வரை நுவரெலியா மாவட்டத்தில் ஆயிரத்து 684 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# கொவிட்-19 சிகிச்சை மத்திய நிலையங்கள்

**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை மாவட்டத்தில் கொவிட்19 நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் இம் மாவட்டத்தில் புதிதாக நான்கு சிகிச்சை மத்திய நிலையங்கள் நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகரசபை முதல்வர் எஸ். சந்தன பிரகாஷ் தெரிவித்தார்.

கொவிட்19 தாக்கம் இம்மாவட்டத்தில் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இனங் காணப்படும் தொற்றாளர்களை தங்க வைத்து சிகிச்சை அளிப்பதற்காக புதிதாக சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இம்மாவட்டத்தில் 2000 பேர் வரை தங்கியிருந்து சிகிச்சை அளிப்பதற்கு வசதி வாய்ப்பை இந்த மத்திய நிலையம் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படும் என்றார். இதன் முதற்கட்டமாக 400 பேர் தங்கி நின்று சிகிச்சை அளிப்பதற்காக மாத்தளை தொழில்நுட்ப கல்லூரி கொவிட் 19 சிகிச்சை மத்திய நிலையமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாத்தளை ஹோட்டல் பயிற்சிப் பாடசாலை மகாத்மா காந்தி சபை மண்டபம் உட்பட நாவுல அம்பன பிரதேசத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளே இவ்வாறு கொவிட் சிகிச்சை மத்திய நிலையங்களாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாத்தளை மாவட்டம் கொவிட்19 தடுப்பு கூட்டம் அண்மையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற போதே இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டது என்றார்.

## கொரோனா வைரஸ் பரவல் தீவிரம்

# புளியாவத்தை பகுதி காலவரையறை இன்றி முடக்கம்

**ஹற்றன் விசேட, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**
**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக புளியாவத்தை பகுதியில் நகர வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதுடன் இன்ஜஸ்ட்ரீ கிராம சேவகர் அலுவலகர் பிரிவு காலவறையின்றி நேற்றுமுன்தினம் மாலை முதல் சுயதனிப்படுத்தப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொது சுகாதார காரியாலயம் அறிவித்துள்ளது.

இப்பகுதியில் அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்பட்டதை தொடர்ந்து வைரஸ் பரவலை கட்டுபடுத்துவதற்காக இவ்வாறு காலவரையறை இன்றி மூடப்பட்டுள்ளது.



நோர்வூட் பிரதேசசபை, பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பகுதிக்குட்பட்ட இன்ஜஸ்ட்ரீ தோட்டத்தில்19 பேரும் போடைஸ் தோட்டத்தில் 07 புளியாவத்தை நகரில் 07 பேருமாக 31 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி புளியாவத்தை பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் 180 ரேக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 29 பேரும் என்டிஜன் பரிசோதனையில் 02 பேருமாக 31 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். குறித்த பிரதேசத்தில் அதிகளவிளான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் மாலை முதல் உடன் அமுலுக்கு வரும் வகையில் புளியாவத்தை நகரம் உட்பட இன்ஜஸ்ட்ரீ 319 எல் கிராம சேவகர் பிரிவு ,

இஞ்ஜஸ்ட்ரீ கீழ் பிரிவு, பிளிங்கிபோனி, அபகனி, ஹோன்சி, பீரட், பாத்போட், பிளிங்கிபோனி கடைத்தெரு மற்றும் புளியாவத்தை நகரப்பகுதிகள் காலவறையின்றி முற்றாக முடக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் 1758 குடும்பங்களை சேர்ந்த 6798 பேரும் வசித்து வருகின்றமை குறிப்படத்தக்கது.

இதே வேளை என்பீல்ட் 319 போடைஸ் தோட்டத்திற்கு பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பிரதேசங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பும் விதிக்கப்பட்டுள்ளது.

தொற்றாளர்களுடன் தொடர்பினை பேணியவர்களை அடையாளம் கண்டு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கையில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட காரியாலயம் தற்காலிமாக மூடல்

**(கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)**

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி காரியாலயம் மற்றும் நிர்வாகப் பிரிவு முற்றாக மூடப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்று காரணமாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலைப்பீட முகாமைத்துவ பிரிவில் பணியாற்றும் சேவையாளர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கம்பளை பிரதேசத்தை சேர்ந்த சேவையாளரின் கணவருக்கு தொற்று முதலில் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருக்கும் பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் அவர் முடிவுகள் அறிவிக்க முன்னர் தொடர்ந்தும் சேவைக்கு வருகைத்தந்துள்ளார். இவரின் பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக கலைப்பீட காரியாலயங்கள் மூடப்பட்டது. பின்னர் மேலும் ஒருவருக்கு அப்பீடத்தில் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ள கம்பளை, மாத்தளை மற்றும் கடுகண்ணாவை போக்குவரத்து பஸ்ஸில் கம்பளையில் இருந்து வரும் சேவையாளர்களுடன் இப்பெண் பயணித்துள்ளதால் இப்பஸ்ஸில் பயணிக்கும் சகலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழகம் மூடல்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சப்ரகமுவ பல்கலைக்கழகம் நேற்று முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் விடுதியில் தங்கியிருந்த மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்தை மூடிவிடத்தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்த இறுதி வருட மாணவர்கள் பரீட்சை எழுதும் மாணவர்கள் தங்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் முடியுமானவரை பொதுப் போக்குவரத்துக்களில் பயணிப்பதை தவிர்த்து தனிப்பட்ட வாகனங்கள் மூலம் தமது வீடுகளுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

# அதிபர் சேவையிலிருந்து ஓய்வு

**(ஹற்றன் விசேட நிருபர் )**



அரச சேவையில் சுமார் 30 வருட கால தமது சேவையினை பூர்த்தி செய்து விட்டு வனராஜா கீழ் பிரிவு பாடசாலையில் அதிபராக கடமையாற்றிய முத்தையா சந்திரகாந்த் நேற்றுமுதல் ஓய்வு பெறுகிறார்.

பொகவந்தலாவையினை பிறப்பிடமாகவும் நோர்வூட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் திரேசியா தமிழ் வித்தியாலயத்திலும், பொகவந்தலாவை சென்மேரிஸ் கல்லூரியிலும் தனது பணியினை ஆசிரியராக ஆரம்பித்தவர்.

அதனை தொடர்ந்து மணிக்கவத்தை தமிழ் வித்தியாலயத்திலும், வனராஜா கீழ் பிரிவு தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றியுள்ளதுடன். வனராஜா பொலிஸ் பிரஜா கமிட்டியின் தலைவராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும் இருந்து தனது அரச பணியுடன் சமூக சேவையினை புரிந்துள்ளார்.


இவர் பல நூறு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் சமூகத்தின் வளர்ச்சிக்காகவும் தம்மால் முடிந்தளவு முயற்சியினை எடுத்துள்ளார், இவரின் 30 வருட அரச சேவைக்காகவும் சமூக பணிக்காகவும் கல்விபுலத்தினை சேர்ந்தவர்கள் இவரின் ஓய்வு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வேண்டும் என தமது வாழ்த்தினை தெரிவித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் மஹிந்த ராஜபக்ஷ மாவத்தை



ஹட்டன் நகரசபைக்குட்பட்ட பொது பஸ் தரிப்பிடத்திற்கு அருகாமையில் ( மஞ்சு பார் ) காணப்படும் மஹிந்த ராஜபக்ஷ மாவத்தையானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது. இப்பாதையானது சரியான மேற்பார்வையின்றி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. பாதையின் குறிப்பிட்டதொரு பகுதியானது தனிப்பட்ட நபரொருவரின் மதில் காரணமாக ஏனைய பகுதிகளை விட சற்று ஒடுங்கியதாகவே காணப்படுகிறது. எதிர்ப்புறத்தில் பாரிய பள்ளமொன்றும் காணப்படுகிறது. இந்நிலை காரணமாக மூன்று முச்சக்கர வண்டிகள் பாரிய பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவங்களின் பின்னர் இரவு வேளைகளில் அல்லது அவசர நேரங்களில் எந்தவொரு முச்சக்கரவண்டி சாரதிகளும் அழைத்தால் வர மறுக்கின்றனர். இதனால் மாணவர்கள், வயோதிபர்கள், சிறுவர்கள் போன்ற ஏனைய மக்களும் பயன்படுத்தக் கூடியதொரு பொதுவான பாதையாகவே காணப்படுகிறது. இப்பிரச்சினைகள் குறித்து கிராமவாசிகள் இணைந்தும், தனிப்பட்ட ரீதியால் பல முறை ஹற்றன் நகர சபைக்கு நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் அறிவித்திருந்த போதிலும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென்பது வேதனைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது.

# கிழக்கின் குரல்



## திருமலை மாவட்டத்தில் 1,517 பேருக்கு கொரோனா தொற்று; 12 மரணங்கள் பதிவு

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கொஸ்தா

(ரொட்டவெவ குறூப் நிருபர்)



திருகோணமலை மாவட்டத்தில் 1,517 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், 12 மரணங்கள் பதிவாகியுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி. ஜீ.எம்.கொஸ்தா திங்கட்கிழமை (03) தெரிவித்தார்.

இதனடிப்படையில் கடந்த 2ஆம் திகதி வரை 1,517 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் 401 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும், 506 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இம்மாதம் முதலாம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் 34 பேருக்கும், இரண்டாம் திகதி 42 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதுவரைக்கும் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதியில் 641 பேர் இனம் காணப்பட்டுள்ளதாகவும், உப்புவெளி பிரதேசத்தில் 382 பேரும் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதியில் 156 பேரும் குச்சவெளி பிரதேசத்தில் 49 பேரும், குறிஞ்சாங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 38 பேரும் மூதூர் பிரதேசத்தில் 99 பேரும், சேருவில பிரதேசத்தில் 18 பேரும் ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் ஒருவரும், கந்தளாயில் 73 பேரும் தம்பலகாமத்தில் 25 பேரும் கோமரங்கடவல பிரதேசத்தில் 27 பேரும் பதவிசிறிபுர பகுதியில் 8 பேரும் இனங் காணப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

## களுவாஞ்சிகுடி பொதுச்சந்தை மூன்று நாட்களுக்கு பூட்டு



பாண்டிருப்பு தினகரன், மண்டூர் குறூப் நிருபர்கள்

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் பொதுச்சந்தைகள் அனைத்தும் மூன்று நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும் என களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க நேற்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் பொதுச்சந்தை இயங்கவில்லை. பிரதேசத்தில் பொதுமக்கள் அதிகமாக ஒன்று கூடும் இடங்கள் சுகாதாரப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், இங்கு சுகாதாரவிதி முறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

களுவாஞ்சிகுடி பிரதேசத்தை கொரோனா தொற்று இல்லாத பிரதேசதமாக வைத்திருப்பதற்கு பொதுமக்கள் சுகாதாரப்பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நீரில் மூழ்கி இளைஞன் மரணம்

திருமலை மாவட்ட விசேட, ரொட்டவெவ குறூப், தோப்பூர் குறூப் நிருபர்கள்

மூதூரில் 16 வயது இளைஞரொருவர் ஆற்றில் மூழ்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் 2 ஜின்னா நகர் பகுதியைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தர மாணவன் நஜீப் அதீப் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் அவரது நண்பர்களுடன் ஆலிம்சேனை எனப்படும் இடத்திலுள்ள ஆற்றில் திங்கட்கிழமை (03) குளிக்கச் சென்ற போது நீரில் மூழ்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அதனையடுத்து பொதுமக்களின் உதவியுடன் அவர் காப்பாற்றப்பட்டு மூதூர் வைத்தியசாலைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக மரண விசாரனை அதிகாரி எம். வை.எம். லாபிர் குறிப்பிட்டார்.

## பொது இடங்களில் மக்கள் ஒன்றுகூட தடை

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர்

(வெல்லாவெளி தினகரன் நிருபர்)

பொதுமக்கள் அநாவசியமான முறையில் பொது இடங்களில் நடமாடுதல், ஒன்றுகூடுதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்றின் மூன்றாது அலையிலிருந்து மக்களை பாதுகாத்து, கொவிட் 19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறுபட்ட நடவடிக்கைகள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலக கொவிட் 19 தடுப்புச் செயலணியின் கலந்துரையாடலானது பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் திங்கட்கிழமை (03) இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் உதவி பிரதேச செயலாளர், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீடற்ற குடும்பம் ஒன்றுக்கு அல் ஹித்மத்துல் உம்மா நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (2) இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்த போது. (படம்: கந்தளாய், மூதூர் தினகரன் நிருபர்கள்)

## திருமலையில் கொரோனாவை கட்டுப்படுத்த விழிப்புணர்வு

திருமலை மாவட்ட விசேட நிருபர்



திருகோணமலை மாவட்டத்தில் கொவிட் வைரஸைக் கட்டுப்படுத்த மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபருமான சமன் தர்ஷண பாடி கோரளா தலைமையில் பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, அரசாங்க அதிபர், அதிகாரிகள் சகிதம் திருகோணமலை பொதுச்சந்தையின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக கள விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது அரசாங்க அதிபர் பொதுச் சந்தையின் உறுப்பினர்களுடன் சுமுகமாக கலந்துரையாடியதுடன், சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களின்படி சந்தையின் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மேலும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு நடமாடும் சேவையின் மூலம் தேவையான உணவுப்பொருட்களை விநியோகிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அதற்கான அனுமதியை முறைப்படி தாம் வழங்க தயாராக உள்ளதாகவும் அவர் பொதுச்சந்தை பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

## உருமாறிய கொரோனாவால் பேராபத்து

காரைதீவு குறூப் நிருபர்

நாட்டில் முன்னொருபோதுமில்லாத வகையில் கொரோனா தாக்கம் தீவிரமாகி வருகிறது. எனவே பொதுமக்கள் சுகாதார நடைமுறை விதிகளை கடைப்பிடித்து பொறுப்புடன் செயற்படுமாறு அரசாங்கம் எச்சரித்து வருகிறது.

உருமாறிய வைரஸின் தாக்கத்தால் தினம் தினம் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு, பலியானவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

அருகிலுள்ள இந்தியாவில் தினமும் ஆயிரக்கணக்கானோர் பலியாகியும் இலட்சக் கணக்கானோர் தொற்றுக்குள்ளாகியும் வருகின்றனர். இறந்தவர்களின் பிரேதங்களை எரிக்க திண்டாடும் நிலையைக் காணக்கூடியதாயுள்ளது.

கொரோனா வைரஸ் உருமாறினாலும் அவற்றை எதிர்ப்பதற்கு நாம் தயார் நிலையில் இருப்பதாக சுகாதார அமைச்சின் உதவி பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் எஸ்.எம். ஆர்னல்ட் தெரிவித்தார்.

கொவிட்19 தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதனால் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் 2500 படுக்கைகளை தயார் செய்யும் நடவடிக்கைகளில் முப்படையினர் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்தார்.

இதேவேளை நாடு முழுவதையும் முற்றாக முடக்கும் எந்தவொரு தேவையும் தற்போதைக்கு இல்லையென்றும், தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் மாத்திரமே முழுமையாக முடக்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றார்.

## மூதூரில் இரண்டாம் கட்ட டோஸ் ஏற்றல்

தோப்பூர் குறூப் நிருபர்



கொரோனாவுக்கு எதிரான இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து நேற்று (4) அலுவலக ஊழியர்களுக்கு ஏற்றப்பட்டது.

இதன்போது மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலக அனைத்து ஊழியர்களும் இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏற்றிக் கொண்டதோடு, மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் அறூஸும் ஏற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 'பொது மக்களுக்கான விழிப்புணர்வை ஊடகவியலாளர்கள் ஏற்படுத்த வேண்டும்'



(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

கொரோனா தொற்று தொடர்பில் பொது மக்களிடம் விழிப்புணர்வை ஊடகவியலாளர்கள் கொண்டு செல்வதன் அவசியம் மற்றும் பிரதேசத்தின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலும், அட்டாளைச்சேனை பிரதேச ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில், உதவிப் பிரதேச செயலாளர் எம். ஏ.சி.அஹமட் நசீல், கணக்காளர் ஏ.எல்.எம்.றிபாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ.ஹூசைன்தீன், நிர்வாக உத்தியோகத்தர் ஆர். எம்.நழீல், பிரதம முகாமைத்துவ உதவியாளர் எம்.ஏ.சி.எம்.றக்கீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு பிரதேசத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கு ஊடகவியலாளர்களின் கருத்துக்களும், ஆலோசனைகளும், முன்வைக்கப்பட்டதுடன், கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் செயல் திட்டங்களை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான விழிப்புணர்வுத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

அத்தோடு அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உதவி செய்யக்கூடிய FOOD BANK செயல்திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது, இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஊடகவியலாளர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்றும் பிரதேச செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

இச்சந்திப்பில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய கிராமங்களிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களில் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இணைப்பாளர் கிருத்திகனிடம் ஆலய நிருவாகத்தினர் வேண்டுகோள்

வாச்சிக்குடா விஷேட நிருபர

தம்பிலுவில் ஸ்ரீ காயத்திரி அம்மன் ஆலயத்தை புனரமைக்க ஜனாதிபதி, பிரதமர் மற்றும் குறித்த அமைச்சினது உதவியினை பெற்றுத்தருமாறு நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பாளர் பியசேன கிருத்திகனிடம் ஆலய நிருவாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினையும் கையளித்தனர். குறித்த ஆலயத்தின் நிலைமை தொடர்பில் பார்வையிட சென்ற அமைச்சின் இணைப்பாளருக்கு ஆலய நிருவாகத்தினர் ஆலயத்தின் தற்போதைய நிலை தொடர்பில் விளக்கினர்.

கடந்த சில வருடங்களாக குறித்த ஆலயம் எவ்வித நிதியுதவிகளுமின்றி பராமரிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. அத்தோடு பல கட்டடங்கள் திருத்தம் செய்ய வேண்டியதுடன், ஆலய சுற்றுப்புற சூழலும் சுத்தம் செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையிலேயே குறித்த ஆலயத்தின் நிலை தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் குறித்த அமைச்சினது கவனத்திற்கு கொண்டு செல்லுமாறு ஆலய நிருவாகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை நேரில் சென்று கேட்டறிந்து கொண்ட நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்பாளர் ஆலய சுற்றுப்புற சூழலை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஆலய புனருத்தானம் தொடர்பிலான மகஜர்களை பிரதமரிடமும் அமைச்சரிடமும் கையளிக்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

## ரிஷாத்தை விடுவிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை காட்ட வேண்டும்

### முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்

மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனை விடுவிப்பதில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிர கரிசனை காட்ட வேண்டும் என முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவிலுள்ள அவரது இல்லத்தில் மக்கள் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ரிஷாத்தின் கைது இந்த நாட்டில் வாழ்கின்ற எமக்கு மட்டுமல்ல உலக முஸ்லிம் சமூகத்தினரையும் களங்கப்படுத்தியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வதாக இருந்தால் சபாநாயகர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் .

நடுநிசியில் கைதாவது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அரசின் உயர்மட்டத்தில் இருக்கும் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் இது விடயத்தில் கவனம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும். குற்றங்கள் ஏதும் இருப்பின் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்துங்கள்.

பல முறை ஜனாதிபதி ஆணைக்குழு அவரையும் அவரது சகோதரரையும் விசாரணை செய்து எந்தவித குற்றமுமற்றவர் என்ற போதும், அநியாயமாக இக் கைது இடம்பெற்றுள்ளது என்றார்.

## வவுணதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை திங்கட்கிழமை (3) பிற்பகல் மேற்கொள்ளப்பட்டது.

மண்முனை மேற்கு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது பொதுமக்களுடன் நேரடி தொடர்புடைய அலுவலக மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் இப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பொதுமக்களும் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியை பின்பற்றி நடப்பது தமக்கும் சமூகத்திற்கும் பாதுகாப்பை தரும் என இதன் போது சுகாதார திணைக்கள அதிகாரிகள் கருத்துத் தெரிவித்தனர்.



# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
## ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

**வர்த்தக அமைச்சு**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**

## உணவு பாதுகாப்பிற்கான BRC Global Standard for Food Safety Certification சான்றிதழ் பெறுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவான உணவு ஏற்றுமதியாளர்களுக்கு நிதி உதவித் திட்டம்

புதிதாக மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பின் கீழ் வழங்குகின்ற முன்னுரிமை சுங்க வரி நன்மைகள் காரணமாக ஐக்கிய இராச்சிய சந்தை இலங்கை உணவு உற்பத்திற்கான கவர்ச்சிகரமான சந்தையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் பிரித்தானிய இறக்குமதியாளர்கள் மூலம் BRC போன்ற உணவு பாதுகாப்பு சான்றிதழ்களுக்கு இணங்குவது அவசியமானது என கருதுவது இலங்கை உணவு ஏற்றுமதியாளர்களுக்கு ஐக்கிய இராச்சிய சந்தைக்கு நுழைவதில் தடங்கலாக உள்ளது.

ஐக்கிய இராச்சிய சந்தைக்கு நுழைவதற்காக இலங்கை உணவு உற்பத்தி ஏற்றுமதியாளர்களின் கொள்ளளவை கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு உணவு உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவான ஏற்றுமதியாளர்களுக்கு BRC Global Standard for Food Safety சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக நிதி உதவி வழங்கும் திட்டம் ஒன்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மூலம் செயற்படுத்தப்படும்.

**யாருக்காக**

தேங்காய் கரு சார்ந்த உற்பத்திகள், காய்கறிகள் மற்றும் பழங்கள், தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் பானங்கள் மற்றும் வாசனைச்சரக்கு மற்றும் செறிவூட்டப்பட்டவை சார்ந்த உற்பத்தி ஏற்றுமதியாளர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**எதற்காக**

ஓர் ஏற்றுமதியாளருக்கு 350,000.00 ரூபா உச்சபட்சத்தின் கீழ் BRC Global Standard for Food Safety Certification சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான ஆராய்ச்சி செலவு மற்றும் சான்றளிப்பதற்கான மொத்த செலவில் 50% செலவு ஈடு செய்தல் அடிப்படையில் பெற்றுக்கொடுக்கப்படும்.

இந்தத் திட்டம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செயற்படுத்தப்படும்.

**தேர்வுக்கான நடைமுறை**

தகுதியுடைய விண்ணப்பதாரர்களை தேர்வு செய்வது நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பப் படிவம் மற்றும் திட்டம் தொடர்பில் மேலதிக விபரங்களை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் www.srilankabusiness.com "announcement" பிரிவில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

குறித்த ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2021 மே 17 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் மேலதிக பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை, இல. 42, NDB-EDB கட்டிடம், நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு விவசாய ஏற்றுமதிப் பிரிவின் சானிக்கா வெரலுகொல்ல அவர்கள் 0112300732, தொலைநகல்: 0112304879, மின்னஞ்சல்: **shanikaw@edb.gov.lk உடன் தொடர்பு கொள்ளவும்.**

**தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை,**
**இலக்கம். 42, NDB-EDB கட்டிடம், நவம் மாவத்தை,**
**கொழும்பு-02.**
தொலைபேசி: 011-2300705-711, பெக்ஸ்: 011-2347872
www.srilankabusiness.com




இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பின்வருமாறு விபரிக்கப்படும் இரத்தினபுரியில் அமைந்துள்ள வீ.அ.அ. அலுவலக தொகுதியின் நிர்மாணத்திற்காக பயணிகள் மின்னுயர்த்திகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பில் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் (சபரகமுவ) பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

1. இரத்தினபுரியில் அமைந்துள்ள வீ.அ.அ. அலுவலகக் கட்டிடத் தொகுதியின் 4 மாடி கட்டிட நிர்மாணத்திற்காக (4 நிறுத்தங்களுடன் 700 கி.கி.) பயணிகள் மின்னுயர்த்திகளை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் மற்றும் பராமரித்தல் எனும் பணியை இது கொண்டுள்ளது. பூர்த்தி செய்வதற்கான காலம் 150 நாட்கள்.
2. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கோரல் இடம்பெறும்.
3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்,
   - குறைந்தபட்சம் கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் மின்னுயர்த்திகளுக்கான திட்டமிடல், பொறியியல், வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கான அனுபவத்தை பெற்ற புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனம் ஒன்றாக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும்.
   - மின்னுயர்த்திகளின் வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் மின்னுயர்த்தி உபகரண உற்பத்தியாளர் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
   - இலங்கையில் மின்னுயர்த்தி தயாரிப்பில் ஒரு திருப்திகரமான சேவையை வழங்கி இருத்தல் வேண்டும். கடந்த ஐந்து (5) ஆண்டுகளில் இதனை ஒத்த குறைந்தது 50 அல்லது அதற்கு மேற்பட்ட உற்பத்தியை மேற்கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் 2021.05.20ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை இரத்தினபுரி, பண்டாரநாயக்க மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. 2021.05.05ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இரத்தினபுரி, பண்டாரநாயக்க மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற்றுக்கொள்ளலாம்.
6. 2021.05.21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் மாகாண பணிப்பாளரின் அலுவலகம் (சபரகமுவ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பண்டாரநாயக்க மாவத்தை , இரத்தினபுரி என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதோடு மேலுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிலும் உள்ளிடலாம். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன் விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.
7. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு பின்னர் 65 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் 2021.07.26ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் 20,000.00 ரூபா பெறுமதியான விலைமனு பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இரத்தினபுரி, பண்டாரநாயக்க மாவத்தை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தில் 2021.05.17ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பணிப்பாளர் அலுவலகம் (சபரகமுவ),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**இரத்தினபுரி.**

நீர் வழங்கல் அமைச்சு

# தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

## விலைக்கோரல் அறிவித்தல்

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவை யான விலைமனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப் படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | கல்லேல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை விரிவாக்குதல் ஒப்பந்த இல. **NWSDB/NC/CP/A2-22/GOSL/2021/01** | 60,000/- +VAT ** | ரூபா 2,750,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C3 அல்லது C2 தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 201.5 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 02/06/2021 மு.ப. 10.00 மணி |
| 02 | கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள நீர் வழங்கல் திட்டங்களுக்கு வால்வு அறைகளை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. **RSC/N/DGM/NRW/CHAMBERS/ KILI-MULLAI/2021/003** | 4,000/- +VAT | ரூபா 46,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 4.60 மில்லியன் | பி.ஒ.நி. (வடக்கு), தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2225719 Fax:024-2225088 | 02/06/2021 பி.ப. 2.00 மணி |
| 03 | களனி பிராந்தியத்தின் உடமிட்டயிலுள்ள பவுசர் மையத்திற்கு படலை மற்றும் எல்லை வேலியை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. **RSC(W/N)/CIVIL/KEL(RH)/2020/64** | 4,000/- +VAT | ரூபா 66,600/- | கட்டிட நிர்மாணத் துறையில் C5 முதல் C9 வரையான தரத்தில் CIDA பதிவு | 4.44 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele:0112922129 Fax:0112922146 | 19/05/2021 மு.ப. 10.00 மணி |
| 04 | மெதிரிகிரிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் தற்போதுள்ள வடிகட்டி அலகிற்கு Zn/AI கூரையை நிர்மாணித்தல் ஒப்பந்த இல. **RH/NC/DGM/SER/MED/2021/056** | 2,000/- +VAT | ரூபா 15,900/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C8 முதல் C7 வரையான தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 1.16 மில்லியன் | பிஒநி (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 19/05/2021 மு.ப. 10.00 மணி |
| 05 | 2021-04-07ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. ஏறாவூர் மட்டக்களப்பு ஏறாவூர் டெக்ஸ்டைல் வலய கழிவு நீர் திட்டத்தில் மற்றும் உத்தேச டெக்ஸ்டைல் வலயத்தில் Beach Chamber மற்றும் Sea Outfall என்பவற்றை நிர்மாணித்தல். - ஒப்பந்த இல. **NWSDB/WR-P&D/BOI/WWTP/ERAVUR/2021/01 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-05-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | **M&E கேள்விகள்** | | | | | | |
| | 2021-04-07ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. மட்டகளப்பிலுள்ள சந்திவெளி பம்பி இல்லத்திற்கு நீர் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல. **RSC(E)/DGM/LBF/ PUMP/ODDAM/2018/17R -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-05-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| | 2021-04-07ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. பாரிய கண்டி நீர் வழங்கல் திட்டத்திலுள்ள யட்டிவாவல பூஸ்டர் பம்பி இல்லத்தில் நுகவெல – கலுகம்மான பூஸ்டர் பம்பி முறைமைக்கு இரண்டு எண்ணிக்கையான End Suction Vertical விநியோக பம்பித் தொகுதி, Motor Control Panel Equipment மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல் ஒப்பந்த இல. **RSC-C/M&E/S&I/M&E/ ENERGY/NUGA-KULU/2021/03 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2021-05-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும். | | | | | | |
| 06 | நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி பொதிகளுக்கான துருப்பிடிக்காத உருக்கு ஷீட்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல. **NWSDB/P&D/S/SS/GOSL/2021/01** | 100,000/- +VAT ** | ரூபா 8,850,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள்/ விநியோகஸ்தர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 02/06/2021 மு.ப. 10.00 மணி |
| 07 | மேற்கு வடக்கு பிராந்தியத்திற்கு 20,000 எண்ணிக்கையான 15 மி.மி. பூட்டக்கூடிய பித்தளை போல் வால்வுகளை (Brass Lockable Ball Valves) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் ஒப்பந்த இல. **RSC(W/N)/SS/Brass/GAM(RH-SPE)/2021/72** | 12,500/- +VAT ** | ரூபா 255,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் / விநியோகஸ்தர்கள் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை. Tele:0112922129 Fax:0112922146 | 19/05/2021 மு.ப. 10.00 மணி |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 08 | பிபொமு வடக்கு மத்திய அலுவலகத்திற்கு மோட்டார் காரொன்றை வாடகைக்கமர்த்துதல் ஒப்பந்த இல. **RSC/NC/DGM/HV/DGM/2021/076** | 4,000/- +VAT | ரூபா 28,125/- | ஆவணத்தின் பிரகாரம் | | பிஒநி (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele : 025-2235993 Fax: 025-2225609 | 19/05/2021 பி.ப. 2.00 மணி |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 09 | தேநீவவ சபைக்கு Call Center Solution வழங்குதல் ஒப்பந்த இல. **NWSDB/CALL CENTER/GOSL/2021/01** | 35,000/- +VAT ** | ரூபா 1,500,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை. Tele: 011-2605328 Fax: 011-2635885 | 09/06/2021 பி.ப. 2.00 மணி |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள www.drc.gov.lk இணையத்தளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

## பிரதேச சபை – ஹோமாகம

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### வேதரவில் ஹோமாகம பிரதேச சபைக்கான உப – அலுவலக கட்டிட நிர்மாணம் – II ஆம் படிநிலை

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் 21.9 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் வேதரவில் ''( II ஆம் படிநிலை) ஹோமாகம பிரதேச சபைக்காக உப-அலுவலக அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக'' தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஹோமாகம பிரதேச சபையின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.
   நிர்மாணக் காலப்பகுதியானது 273 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீட்டு பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவானதினால், பிராந்திய முன்னுரிமை மற்றும் *CIDA* தர முன்னுரிமை ஆகியன *04/2016 (iii)* மற்றும் *03/2020* ஆகிய அரச நிதி சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கட்டிட நிர்மாணத்துறையில் சி-6 அல்லது சி-5 ஆம் தரங்களுக்காக பதிவு செய்திருப்பதுடன் இப்பதிவானது விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் தினத்தன்றும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை ஹோமாகம, பிரதேச சபை செயலாளரிடமிருந்து பெற்று, அதே முகவரியில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொடர்பு இலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2855230. தொலைநகல்: 011-2857169.
5. 2021.05.06 ஆம் திகதியிலிருந்து 2021.05.31 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஆறாயிரம் ரூபாவை (6,000 ரூபா) செலுத்திய பின்னர், ஹோமாகம, பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
4. குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலதிக விபரங்களை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அதே முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4..00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
   தொடர்பு இலக்கங்கள்: தொலைபேசி: 037-2222437, தொலைமடல்: 037-2222197

5. மீளளிக்கப்படாத கட்டணமாக நான்காயிரம் ரூபாவை (ரூபா 4,000.00) 2021-05-10ஆம் திகதி முதல் 2021-05-24ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் குருநாகலை, வில்கொட வீதி, கட்டிடங்கள் திணைக்களம் (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. கேள்விகளை 2021-05-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தவிசாளர், பிராந்திய பெறுகைக் குழு (வலயம் 3), பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டிடங்கள் திணைக்களம், வில்கொட வீதி, குருநாகல் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அதே முகவரியில் வருகை தந்துள்ள கேள்விதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

7. கேள்விகள் பெற்றுக்கொள்ளும் இறுதி நாள் அல்லது நீடிக்கப்பட்ட காலத்திலிருந்து 77 நாட்களுக்கு கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அனைத்துக் கேள்விகளுடனும்
   * கேள்வி ஆவணத்தின் 09ம் பிரிவில் உள்ளடங்கும் படிவத்தின்படி
   * கட்டிடப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுதப்பட்ட
   * 180,000.00 ரூபா தொகைக்கு
   * 2021 செப்டெம்பர் 06ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்
   * கேள்வித் தரவின் 16.2ம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட கேள்விப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பொறி. திருமதி கே. லியனகே,**
**நிர்மாணப் பணிப்பாளர் (பிராந்தியம் 03),**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**2ம் மாடி, ‘‘செத்சிறிபாய”, பத்தரமுல்லை.**

it's what you want
www.adz.lk

Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE &
GET FREE AD ON WEBSITE

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### கோமர அரச பெருந்தோட்டத்தின் நாளாந்த கடமைகளை நிகழ்நிலை (online) மென்பொருள் மூலம் முகாமைத்துவம் செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரித்தான கோமர அரச பெருந்தோட்டத்தின் நாளாந்த கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் புதிய தொழில்நுட்பத்தின் கீழ் கணனி மென்பொருளின் ஊடாக முகாமைத்துவம் செய்வதற்கான தரவுகளை தயாரிப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கான கணனி மென்பொருள் முகாமைத்துவம் செய்யும் விதத்தை உள்ளடக்கிய விபர அறிக்கைகளை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் அல்லது பன்வில பிராந்திய அலுவலகத்தில் அந்த விபரப் படிவங்களை 2021-05-24ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அவ்வாறு கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் 2021-05-25ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அந்த விலைமனுக்கள் அன்றைய தினமே பி.ப. 1.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும்.

சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் சகிதம் பிணையாக வைப்புச் செய்ய வேண்டிய மீளளிக்கப்படும் ஒரு இலட்சம் (100,000.00) ரூபா தொகையை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கியில் முதலாம் நகர கிளையில் பேணப்படும் 046 1002 40000 933ஆம் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அல்லது காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

அந்த விலைமனுக்கள் 2021-05-25ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் கொழும்பு பிரதான அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கும் குழுவின் முன்னிலையில் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குக் கிடைக்காத விலைமனுக்கள் தொடர்பில் பெறுகைக் குழுவின் தலைவரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**கொழும்பு 12.**
**2021-05-03.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

### குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியின் வடிவமைத்தல், நவீனமயப்படுத்துதல், மாற்றியமைத்தல்

ஒப்பந்த இல.: **SDVT/PRO/01/05/2021**

01. 200 மில்லியன் ரூபா மதிப்பீட்டுச் செலவைக் கொண்டதும் கீழ் விபரிக்கப்பட்டதுமான குருநாகல் தொழில்நுட்பக் கல்லூரியின் வடிவமைத்தல், நவீனமயப்படுத்துதல், மாற்றியமைத்தல் என்பவற்றுக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

    கட்டிடங்களை நவீனமயப்படுத்துதல், முறையற்ற கட்டிடங்களைத் தகர்த்தல், நிலச் சீராக்கம், சிற்றுண்டிச்சாலை உட்பட வசதிகள் கட்டிடத்தை வடிவமைத்து நிர்மாணித்தல், தற்போதுள்ள வகுப்பறைக் கட்டிடங்களை புதிய தளபாடங்கள் மற்றும் தற்போதுள்ள தளபாடங்களைக் கொண்டு உள்ளகத்தை ஒழுங்கு செய்தல் மற்றும் பிரதான நுழைவாயிலை நவீனமயப்படுத்துதல்.

    ஒப்பந்தக் காலம்: 5 மாதங்கள் மற்றும் 365 நாட்கள் குறைபாட்டுப் பொறுப்புக் காலம்

2. தேசிய போட்டி ரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கோரல் நடத்தப்படும் - (விலைமனுதாரர் இரு பிரதிகளான பூர்வாங்க தகவல், வடிவமைப்பு/ தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவுகளை சமர்ப்பித்தல் வேண்டும். முன்மொழிவானது இரு வெவ்வேறு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இருத்தல் வேண்டும் என்பதோடு முதல் கடித உறையில் பூர்வாங்க தகவல், வடிவமைப்பு/ தொழில்நுட்ப முன்மொழிவையும் இரண்டாவது கடித உறையில் நிதி முன்மொழிவையும் கொண்டிருத்தல் வேண்டும்). தொழில்நுட்ப ரீதியில் தகுதி பெற்ற விலைமனுதாரர்களின் விலைமனு விலை நிதி விலைமனு திறக்கப்படும் நேரத்தில் தெரிவிக்கப்படும்.

3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கட்டிட நிர்மாணத்திற்காக C3 மற்றும் C2 தரத்துடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) தேவைகளை பூர்த்தி செய்தும் இருத்தல் வேண்டும்.

4. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதித் தேவைப்பாட்டுத் தகைமைகளில் அடங்குவன,
   - கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவனத்தின் சராசரி ஆண்டுப் புரள்வு பெறுமதி குறைந்தது 300 மில்லியன் இலங்கை ரூபா இருத்தல் வேண்டும்.
   - இதனை ஒத்த பண்பைக் கொண்ட திட்டம் ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்த அனுபவம். அந்தத் திட்டமானது கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் 150 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாத பெறுமதியை கொண்டிருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து (ஏனைய ஒப்பந்த கடப்பாடுகளை விலக்கிய பின்னரான) திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்சத் தொகை 25 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.

5. உதவிச் செயலாளர் (பெறுகை), திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5 என்ற முகவரியில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு அதே முகவரியில் 2021-05-05ஆம் திகதி தொடக்கம் 2021-06-07ஆம் திகதி வரையான நாட்களில் 0900 மணித்தியாலம் தொடக்கம் 1500 மணித்தியாலம் வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பத்தைந்தாயிரம் ரூபாவை (இ.ரூ. 35,000.00) செலுத்தி 2021-05-05ஆம் திகதி தொடக்கம் 2021-06-07ஆம் திகதி வரையான நாட்களில் 0900 மணித்தியாலம் தொடக்கம் 1500 மணித்தியாலம் வரை செயலாளர், திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

7. விலைமனுக்களை 2021-06-08ஆம் திகதி 1400 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னர் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு (MPC), திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5 என்ற முகவரிக்கு ஒப்படைக்கலாம் அல்லது இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5 என்ற முகவரியில் திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, தரைத்தளம், பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்பட மாட்டாது. பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் அவை திறக்கப்படும்.

8. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்டதுமான இரண்டு மில்லியன் இலங்கை ரூபா (இ.ரூ. 2,000,000.00) விலைமனு பிணையை கொண்டதாக இருத்தல் வேண்டும். இந்த விலைமனு பிணையானது 2021-10-05ஆம் திகதி வரை (விலைமனு திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும் என்பதோடு திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு, செயலாளரின் பெயரில் பெறப்பட்ட நிபந்தனையற்றதும் கோரும்போது பெறத்தக்கதுமான வடிவில் இருத்தல் வேண்டும்.

9. விலைக்கோரலுக்கு முந்திய கூட்டம் 2021-05-12ஆம் திகதி 1100 மணித்தியாலத்தில் குருநாகல் – தொழில்நுட்ப கல்லூரியில் இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு (MPC),**
**திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி,**
**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு,**
**இல. 354/2,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 05.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## மாவட்ட செயலகம் – களுத்துறை

# கேள்விக்கான அழைப்பு

**பயாகல அம்பே முதல் கடலுக்கு நீர் வழிந்து செல்லும் கால்வாய் அமைப்பை நிர்மாணித்தல் இறுதிக்கட்டம் - 2021**

2021 ஏப்ரல் 30ம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் 1.2 பந்தியில் ‘C04, C05 மற்றும் C06 அல்லது அதற்கு மேல்’ என்று குறிப்பிடப்படும் பகுதி ‘C04, C05 மற்றும் C06 தரங்களில் மட்டும்’ என திருத்தப்படல் வேண்டும் என அறிவித்துக் கொள்கிறேன்.

**தலைவர்**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்**
**களுத்துறை**

# பெறுகை அறிவித்தல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**பிராந்திய அலுவலக இடப்பரப்புகளான மேற்கு (நுகேகொட), தெற்கு (காலி), வட மத்தி (அனுராதபுரம்) மத்தி (கண்டி), ஊவா (பதுளை), கிழக்கு (மட்டக்களப்பு), வட மேற்கு (குருநாகல்), வடக்கு (யாழ்ப்பாணம்) மற்றும் சபரகமுவ (கேகாலை) ஆகியவற்றிற்கான சுகாதார துப்புரவேற்பாடு சேவை**

**B/33/2021**

மேலே குறிப்பிட்டுள்ள பணிக்காக புகழ்வாய்ந்த அமைப்புக்களிலிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் பெற்றுக் கொள்வார்.

நிகரான சேவைகளில் கடந்தகால அனுபவமுடைய விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை எனது அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாகிய 1,000 ரூபாவை (அதாவது ரூபா 925.93 + 8% பெசேவ) செலுத்திய பின்னர் கையேற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2021.05.21 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் வழங்கப்படும். பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் 2021.05.24 ஆம் திகதியன்று பிப. 2 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.

விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதியானவர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு முன்னராக எம்மை வந்தடையும் வகையில் எனது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2021.05.24 ஆம் திகதி வரையும் எனது அலுவலகத்தில் பரீட்சிக்கப்படலாம். தெளிவுறுத்தல்கள் ஏதும் இருப்பின், 011-5455132 என்ற தொலைபேசி மூலம் பொறியியல் மற்றும் இடப்பரப்பு முகாமையாளரிடமிருந்து அல்லது 5455331 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக (தொலைநகல்: 5455424) எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளாலாம்.

குறிப்பு: 2021.05.13 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு இ.பெ.கூ. தலைமையலுவலக இடப்பரப்பில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபெறுவது ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு கட்டாயமான தேவைப்பாடாகும். கொவிட்-19 தொற்று காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு zoom facility மூலம் பங்கு பெறலாம்.

கொவிட்-19 தொற்று காரணமாக www.ceypetco.gov.lk என்ற இபெகூ இணையத்தளத்திலிருந்து விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கி தலைமை அலுவலக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்தப்படலாம். விலைமனுவுடன் வங்கியின் பணம் வரவுத் துண்டின் மூலப்பிரதியை தயவு செய்து அனுப்பவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**

**சூரிய சக்தி, காற்று, நீர், மின்னுற்பத்தி செயற்றிட்டங்கள்**

அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

# பதவி வெற்றிட அறிவித்தல்

**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை**

பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நியமனங்கள் அவ்வாறான பதவிகளுக்கான சம்பள அளவுத் திட்டங்களை அரசாங்கம் அங்கீகரிக்குமிடத்து அவைகள் நிரந்தர பதவி எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளப்படும்.

## பணிப்பாளர் (நிதி)

**தகைமைகள் மற்றும் அனுபவம் (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கிடல் நிதிசார் முகாமைத்துவம்/ வர்த்தகம்/ வியாபார நிருவாகம்/வியாபார முகாமைத்துவம் ஆகியவற்றில் பெற்ற பட்டதாரிப் பட்டம்.

   **அத்துடன்**

   இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கிடல்/ நிதிசார் முகாமைத்துவம்/ வர்த்தகம்/ வியாபார நிருவாகம்/வியாபார முகாமைத்துவம் ஆகியவற்றின் உரித்தான துறையில் பெற்ற முதுமாணிப் பட்டம் அல்லது இணைந்த அங்கத்துவம் அல்லது தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் நிகரான தகைமைகள் (ACA/ACMA/ACCA)

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை/நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ‘நிருவாக மட்டத்தில்’ ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட அனுபவம்.

2. நிதி/ கணக்கிடல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம் (ACA/ACMA/ACCA)

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம், நியதிச்சட்டசபை/நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ‘நிருவாக மட்டத்தில்’ ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட அனுபவம்.

**சம்பள அளவுத்திட்டம்:** ஏச்எம் 1-1-2016 (80,295-15x2,270-114,345 ரூபா (அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தகுதியுள்ள படிகளும் வழங்கப்படும்)

## உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) - 07 பதவிகள்

**தகைமைகள் மற்றும் அனுபவம்.**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சக்தி தொடர்பான மின்னியல் அல்லது பொறிமுறை ஆகிய துறைகளில் பொறியியலில் பெற்ற பட்டதாரிப் பட்டம் அல்லது இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் இணைந்த அங்கத்துவம்.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்எம் 1-1-2016-[53,175-10x1,375-15x1,910-95,575 ரூபா] (அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தகுதியுள்ள படிகளும் வழங்கப்படும்)

**அனைத்து பதவி நிலைகளுக்குமான வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். (இந்த மேல் வயதெல்லையானது அரசாங்க/ கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகள்/ தனியார் துறை நிறுவன ஊழியர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது)

**விண்ணப்பிக்கும் முறைமை:**

சுயதரவு அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அனைத்து உரித்தான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளடங்கிய விண்ணப்பங்கள் 2021 மே 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பணிப்பாளர் நாயகம், இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை, இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரியை வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகள்/ பொது துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவைகள் பரிசீலனை செய்யப்பட விரும்பும் ஆர்வமுள்ளவர்கள் அவர்களின் உரித்தான நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்பப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல. 72,**
**ஆனந்த குமாரசுவாமி மாவத்தை,**
**கொழும்பு - 07.**

கமி නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

## கமத்தொழில் அமைச்சு

# விவசாயத்துறையை நவீனப்படுத்தும் திட்டம்

## திட்ட ஊழியர் ஆட்சேர்ப்பு – (கொழும்பு)

போட்டிரீதியான மற்றும் சந்தைப்படுத்தலுக்கான பொருட்களை உற்பத்தி செய்தல், சந்தை தேவைக்கான திறனை மேம்படுத்தல் மற்றும் வர்த்தக மயமாக்கலை அதிகரிக்கும் நோக்கிற்கு சிற்றுடைமை விவசாயிகளுக்கு உதவுவதற்கு நாட்டின் கூட்டு மூலோபாயத்துடன் (CPS) உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியோடு கமத்தொழில் அமைச்சு விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது. திட்ட அமுலாக்கல் காலத்தின் எஞ்சிய காலம் சுமார் 2 ஆண்டுகள் இருப்பதோடு திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 64.23 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

2019.03.05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின்படி கொழும்பில் அமைந்துள்ள திட்ட முகாமைத்துவ பிரிவின் (PMU) பின்வரும் பதவி நிலையை பூர்த்தி செய்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. அகநிலைக் கணக்காய்வாளர் (PS 4) – 01 பதவி

- **தேவையான தகைமை**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்டதான, தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

   அல்லது

   I. தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.

   அல்லது

   II. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில் முறை தகைமை.

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் குறைந்தது 07 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

2. தொடர்புடைய துறையில் அகில இலங்கை அரச சேவைகள் அதிகாரி ஒருவராக வகுப்பு III/II அல்லது அதற்கு மேல் அல்லது அதனை ஒத்த அந்தஸ்து.

   அத்துடன்

   வகுப்பு III/II பதவியில் குறைந்தது 07 ஆண்டுகள் அனுபவம்.

- விண்ணப்பத்தின் இறுதித் திகதிக்கு 64 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- கணக்காய்வில் உள்ள அனுபவத்திற்கு உச்ச முன்னுரிமை தரப்படும்.
- பெறுகையின் அறிவு/ அனுபவம் மேலேயுள்ள பதவி நிலைக்கு உயர் மட்ட உரித்தாகுமென்பதுடன் மேல் மட்ட முன்னுரிமையும் வழங்கப்படும்.

**தேர்வு முறை:** தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**சம்பள அளவு:** 2019.03.05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் அடிப்படையிலான சம்பளம்.

**பணி நிலை**

அரச சேவை அதிகாரிகள் இரண்டாம் நிலை அடிப்படையில் பணியமர்த்தப்படுவதோடு அரச சேவைக்கு வெளியில் உள்ள ஆட்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். அனைத்து நியமனங்களும் செயல்திறன் அடிப்படையில் பணி நீடிப்புக்கு உட்பட்டதாக ஆரம்பத்தில் ஓர் ஆண்டு காலத்திற்காக இடம்பெறும்.

**விண்ணப்பங்கள்:**

அனைத்து விண்ணப்பதாரர்களும் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் விபரத்துடன் சுயவிபரக் கோவையை சேர்த்த தமது விண்ணங்களை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2021 மே 19 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச/ அரச சார்பு சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

(2020.10.09 ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தின்படி ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை)

- விண்ணப்பத்தை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திட்டத்தின் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

**திட்ட பணிப்பாளர்**
**விவசாயத்துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**(கமத்தொழில் அமைச்சு)**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி**
**பத்தரமுல்லை**




## இலங்கை அரசாங்கம்

**நீர் வழங்கல் அமைச்சு**

## நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்

**Credit No.: Cr.5685-lk**

# விலைமனு அறிவித்தல்

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிலிருந்து நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழே வழங்கியுள்ள ஒப்பந்தங்களின் பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது
2. கீழே விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக தகுதியும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகின்றார்.

| ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | தேவைப்படுத்தப்படும் விலைமனுப்பிணை (ரூபா) | தகுதித் தேவைப்படுத்தல்கள் | ஆவணங்கள் வழங்குமிடம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய நபர் | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| **செயற்றிட்ட பெறுகைக் குழு (உயர் மட்டம்)** | | | | | |
| **வேலைகளுக்கான கேள்விகள்** | | | | | |
| பதுளை மாவட்டத்தில் மஹாலந்த கிராமிய நீர் வழங்கல் திட்ட புனரமைத்தல்.<br>ஒப்பந்த இல.: MWS/WaSSIP/Badulla/Haldumulla/RE/Mahalanda/2019/02 | 20,000 ரூபா | 1,996,000 ரூபா | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் CIDA (ICTAD) உடன் சி-3 அல்லது சி-2 மற்றும் இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளருடனான ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16 ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரமும். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்.<br>இல. 230,ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி தூண், நுகேகொட.<br>தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/011-2890941 | 2021 ஜுன் 02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| **வழங்கலுக்கான கேள்விகள்** | | | | | |
| முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓய பிரதேச செயலாளர் பிரிவில் தற்போதுள்ள கிராமிய நீர் வழங்கல் திட்டத்திற்கு பம்பிகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்.<br>ஒப்பந்த இல.: MWS/WaSSIP/Mullaitivu/NCB/Supply & Installation of Pumps – Welioya/2020/19 | 3,500 ரூபா | 185,500 ரூபா | நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் துறையில் CIDA (ICTAD) சி-6 மற்றும் கீழ்ப்பட்ட அல்லது மின்னியல் மற்றும் பொறிமுறை சேவையில் ஈஎம்-3 மற்றும் மேற்பட்டது மற்றும் இலங்கை அரசாங்கத்தின் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளருடனான ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழும் பின்னரான வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2018.10.16 ஆம் திகதியிடப்பட்ட சிலோன் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரமும். | செயற்றிட்ட முகாமைத்துவ பிரிவு,<br>நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டம்.<br>இல. 230,ஈ.டபிள்யு. பெரேரா மாவத்தை,<br>ஜுபிலி தூண், நுகேகொட.<br>தொலைபேசி/தொலைநகல்: 011-2890943/011-2890941 | 2021 மே 25 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு. |

3. விண்ணப்பதாரரின் தலைப்புக் கடிதத்தில் ஆவணங்களுக்கான எழுத்து மூலமான விண்ணப்பக் கடிதமொன்றை செயற்றிட்ட பணிப்பாளருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும்.
4. மூடும் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு மேம்படுத்தல் செயற்றிட்டத்திடமிருந்து பெற்று சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்களை வழங்குமிடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. விலைமனுக்கள் மேலேயுள்ள முகவரியில் ஒன்றில் நேரடியாகவே ஒப்படைக்கப்படலாம் அல்லது அதே முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது தூதஞ்சல் சேவையில் அனுப்பப்படலாம்.
7. அனைத்து விலைமனுக்களும் அதே முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடியதும் விரைவாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**நீர் வழங்கல் மற்றும் சுகாதார துப்புரவேற்பாட்டை மேம்படுத்தும் செயற்றிட்டம்.**

**நீர் வழங்கல் தொடர்பான அவசர அழைப்புகளுக்காக 1939 எனும் இலவச இலக்கம் 24 மணி நேரமும் உங்களுக்காக செயற்படும்..**
**சமூக நீர் செயற்றிட்ட சிக்கல்களுக்கு 1914 என்ற எண்ணை அழைக்கவும்.**

# பெறுகை அறிவித்தல் – தற்காலிக நிறுத்தம்

**மத்திய மாகாண சபை - பிரதான மற்றும் கல்வி அமைச்சு**

## தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB)

மானிய நிதிவளம் - மாகாண நிலையான அபிவிருத்தி வழங்கல் நாட்டில் காணப்படும் கொவிட் தொற்றுநிலைமை காரணமாக, மத்திய மாகாணத்தின் பாடசாலை கட்டிடங்கள் நிர்மாணித்தல் மற்றும் பழுது பார்த்தல் சம்பந்தமாக 33 கைத்தொழிலுக்கான கேள்விகோரல், 2021.04.09ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்படும் 4ஆம் பந்தியில் கேள்வி விநியோகிக்கும் கால எல்லை மற்றும் 6ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் கால எல்லை தற்காலிகமாக நிறுத்தப்படும் அத்துடன் திருத்தப்பட்ட கால எல்லை பத்திரிகை அறிவித்தலின் மூலமே பின்னர் அறிவிக்கப்படும்.

**அமைச்சு செயலாளர் மற்றும் பெறுகைக்குழுவின் தலைவர்**
**பிரதான மற்றும் கல்வி அமைச்சு**
**தொலைபேசி/பெக்ஸ் இல - 081-4481322/081-2424938, 081-2424838**

**மாகாண சபைக் கட்டிடத்தொகுதி**
**பல்லேகல**
**குண்டசாலை.**

**2021.05.04ஆம் திகதி**

---

திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

DTET SRI LANKA

## பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்பு சேவையை நடத்திச் செல்வதற்கான கேள்விகோரல் – 2021

தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் கொழும்பு இலங்கை தொழில்நுட்பக்கல்வி ஆகிய இடங்களில் 2021.06.01ஆம் திகதி முதல் ஒரு வருடத்திற்குள் சுத்திகரிப்புச் சேவையை நடத்திச் செல்வதற்காக கீழ்க்காணும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்களிடமிருந்து மட்டும் கொழும்பு -10, தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2021.05.19 பி.ப.2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படுகின்றன.

| கேள்வி இல | வேலை விபரம் | கேள்விப்பிணை (ரு) |
|---|---|---|
| DTET/14/07/04/2021 | சுத்திகரிப்பு சேவையை நடத்திச் செல்லல் - 2021 | 110,000.00 |

01. கேள்விப்பிணையை மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வர்த்தக வங்கியின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

02. மீளளிக்கப்படும் ரூ.3500/- கட்டணத்தை 2021.05.05 முதல் 2021.05.18 வரையான காலத்திற்குள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 பி.ப.2.00இற்கு இடையில் எந்த நேரத்திலும் இத்திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை தொழில்நுட்ப உதவிச்சேவை பிரிவிற்கு சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன், திணைக்களத்திற்கு வருகைதந்து குறித்த வளாகத்தை பரீட்சித்துப் பார்த்து ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய தெளிவுபடுத்தலைப் பெறலாம். கேள்வி ஆவணங்களைப் பரீட்சிப்பதற்கு திணைக்களத்தின் இணையத்தளத்தை பார்வையிடுங்கள்.

04. கிட்டிய கடந்த 03 வருடங்களில் வருடாந்த வர்த்தக புரள்வு சாதாரணமாக ரூ.16 மில்லியனாக இருத்தல் வேண்டும்.

05. கேள்விப்பத்திரங்களை ஏற்றல் - இறுதித்தினம் மற்றும் நேரம் - 2021.05.19 பி.ப.2.00 ஆகும்.

06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் - 2021.05.11 மு.ப.10.00 இற்கு தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

07. எந்த வேளையிலும் உள்ள ஒரு கேள்வியை அல்லது பல கேள்விகளை அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உண்டு.

**பணிப்பாளர் நாயகம்,**
தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்,
இல-557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.
இணையத்தளம் - www.dtet.gov.lk

**தொலைபேசி**
பிரதம கணக்காளர் - 0112342087
தொழில்நுட்ப உதவிச்சேவை - 0112327008

---

## கேள்விக்கான அழைப்பு

**விவசாயத் திணைக்களம்**

### விதைகளை சான்றுபடுத்தும் சேவை

கன்னொருவ விதைகள் சான்றுபடுத்தும் சேவையினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நிர்மாண வேலைகளுக்காக அறிவித்தலில் காட்டப்படுள்ளதன் பிரகாரம் ஆகக் குறைந்த தரம் அல்லது அதற்கு மேற்பட்ட இக்டாட் (ICTAD) அல்லது (CIDA) பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2021-05-05ஆம் திகதி முதல் 2021-05-25ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் கன்னொருவ விதைகள் சான்றுபடுத்தும் சேவை நிறுவனப் பிரிவில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்து அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2021-06-01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபாலின் மூலம் அனுப்பியோ கேள்விகளை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.35 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த வேலைகள் தொடர்பில் மேலும் தகவல்கள் தேவைப்படின் விவசாய கன்னொருவ விதைகள் சான்றுபடுத்தும் சேவை நிறுவனப் பிரிவிற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விசாரித்தறிந்துகொள்ளலாம்.


கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

| | வேலையின் தன்மை | ஆகக் குறைந்த பதிவு (இக்டாட்) (சீடா) | கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப் படாதது | மீளளிக்கப்படுவது | |
| | | | | பணமாகச் செலுத்துவ தானால் | வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்ப தானால் |
| 01. | விதைகள் சான்றுபடுத்தும் சேவையின் பிரதான அலுவலகத்தில் ஆண்கள் மலசலகூடத்தின் திருத்தவேலைகள் (ரூபா 924,759.40) | C8 & C9 | 1,500.00 | 9,000.00 | 18,000.00 |
| 02. | விதைகள் சான்றுபடுத்தும் சேவையின் பத்தலகொட விதைகள் சான்றுபடுத்தும் பிராந்திய அலுவலகத்திற்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் (ரூபா 9,996,483.47) | C6 & C7 | 3,500.00 | 90,000.00 | 180,000.00 |
| 03. | கன்னொருவ மத்திய விதைகள் ஆராய்ச்சியகத்தின் மேல் மாடி மலசலகூட முறைமையின் திருத்தவேலைகள் (ரூபா 1,202,470.00) | C8 & C9 | 1,500.00 | 12,000.00 | 24,000.00 |
| 04. | பட்டஅத்த பின் நிர்வாக அலகில் வலை வேலியை அமைத்தல் (ரூபா 2,528,247.00) | C7 & C8 | 3,500.00 | 25,000.00 | 50,000.00 |
| 05. | பட்டஅத்த விதைகள் சான்றுபடுத்தும் பிராந்திய அலுவலகக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (ரூபா 4,391,456.09) | C7 & C8 | 3,500.00 | 43,000.00 | 43,000.00 |

**மேலதிகப் பணிப்பாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**விதைகள் சான்றுபடுத்தும் சேவை,**
**கன்னொருவ.**
**தொலைபேசி இல. 081-2388217/081-2388421**
**தொலைநகல் இல. 081-2388217**


---


## சிறு விளம்பரம்





**மோட்டார் வாகனங்கள்**



122

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP AAQ-6139 பஜாஜ் 2014, WP ABA-3466 பஜாஜ் 2015 முச்சக்கர வண்டி அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 0711210810 . 033305

**Repeat Your ad For Better Offers**


---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

நீர் வழங்கல் அமைச்சு

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

Contract No.: RMWWDP/Ph2-St1/SN/AFD/2020/01

இரத்மலான/ மொறட்டுவ கழிவுநீர் அகற்றல் செயற்றிட்டத்தின் 2 ஆம் கட்ட 1 ஆம் படிமுறை இரத்மலான/ மொறட்டுவ பிரதேசங்களுக்கான சாக்கடை நீர் சேகரித்தல் வலையமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான விலைமனு

**விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியை நீடிப்பதற்கான அறிவித்தல்**

மேலே குறிப்பிட்டுள்ள விலைக்கோரலுக்கான விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2021 மே 05 ஆம் திகதியிலிருந்து 2021 மே 17 ஆம் திகதியன்று (திங்கட்கிழமை) மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளதென தயவு செய்து இத்தால் அறிந்து கொள்ளவும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை.**

---

**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு**

## JICA மூலம் நிதியளிக்கப்பட்ட வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (RIDEP) – Loan No. SL – P116

**திட்ட அமுலாக்கல் பிரிவு – ஊவா மாகாணம்**

**கேள்விமனு இலக்கம்: PL/5/W/RIDEP/2021/2**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் செலவை நோக்கியதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடம் (JICA) இருந்து இலங்கை சனநாயக சோசலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது. ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தின் லுனுகல பிரதேச சபை பகுதியில் இலுகபதான வீதி (பத்தினிகும்புர வீதி) மற்றும் கீனகொட – உடகம வீதியின் (கிரிவனகோட – உடகம வீதி) மேம்பாடுகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதியுடைய பணக் கொடுப்பனவுகளுக்கு இந்த கடன் நடைமுறையின் பகுதி பயன்படுத்தப்படும் - ஒப்பந்த இல. SL-P116/UP/RR/2020/03

2. ஜப்பானிய ODA கடன்களின் கீழான நடைமுறைகளுக்கு பொருந்துகின்ற வழிகாட்டல்களுக்கு அமைவான நடைமுறை ஊடாக விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு கடன் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டவாறு தகுதியுடைய மூல நாடுகளைச் சேர்ந்த அனைத்து விலைமனுதாரர்களுக்கும் அது திறந்திருக்கும்.

3. திட்ட அமுலாக்கலின் கட்டம் 1 இன் பகுதிக்காக ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தின் லுனுகல பிரதேச சபையில் அமைந்துள்ள இலுகபதான (பத்தினிகும்புர வீதி) (லுனுகல – மதுசில வீதிக்கு அப்பால்) வீதி மற்றும் கீனகொட உடகம (கிரிவானகொட – உடகம) வீதி ஆகிய பெயர்களைக் கொண்ட மக்கள் பயன்படுத்தும் வீதிகளின் 4.98 கி.மீ. பகுதியின் நிர்மாணம் மற்றும் மேம்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு ஆவணத்தில் கூறப்பட்ட சில தகுதிகளோடு மேலுள்ள வீதி அபிவிருத்தி பணிகளுக்காக தகுதியுடை விலைமனுதாரர்களிடம் இருந்து தொழில் வழங்குநர் சார்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, அமைச்சுப் பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. மண் வேலைகள், புதிய வீதி Sub-base மற்றும் புதிய கொங்கிறீற் நடைபாதை ஆகிய வேலைகளும் இதில் உள்ளடங்கும். இரு பக்கங்களிலும் 1.0 மீ. அகலமான Soft Shoulder உடன் 3 மீ. அகலமான கொங்கிறீற் வீதி நிர்மாணத்திற்கு முன்மொழியப்பட்டுள்ளது. சில பகுதிகள் 1.0 மீ. L சுவர்கள் மற்றும் சில பகுதிகள் hard shoulders கொண்டது. தேவையான இடங்களுக்கு மதகுகள் மற்றும் வடிகால் நிர்மாணங்கள் (“வேலைகள்”).

**குறிப்பு (I)**
ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக கருத்தில் கொள்வதற்கு, விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சில தகுதியான அளவுகோல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வரிசை இல. | பொதி இல./ உருப்படி இல. | மீளளிக்கப் படாத வைப்பு | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை | CIDA பதிவு | நிதி நிலை | நிதி வளங்கள் | நிர்மாண அனுபவம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | SL P116/ UP/ RR/ 2020/03 | 35,000.00 இ.ரூ. | 2021.09.27 அன்று வரை செல்லு படியாக இருத்தல் | 2021.10.25 வரை செல்லு படியான, 3.5 மில்லியன் இ.ரூபா | நெடுஞ்சாலை நிர்மாணத்தில் C2 மற்றும் C3 தரம் மற்றும் இலங்கை கம்பனி பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ் மற்றும் PCA3 வடிவம் | கடந்த 03 ஆண்டுகளின் குறைந்தபட்ச சராசரி ஆண்டு நிர்மாண புரள்வு 360 மில்லியன் இ. ரூபா | திரவச் சொத்துகள் அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 81 மில்லியன் இ. ரூபா | கடந்த 07 ஆண்டுகளில் இதனை ஒத்த பண்புடைய குறைந்தது 1 நிர்மாணத்தை (குறைந்தது 120 மில்லியன் பெறுமதியான) வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். |

**அட்டவணை (1)**

**குறிப்பு; (II)** JV இற்கான CIDA பதிவு தேவைக்கு, தகைமை மற்றும் தகுதி அளவுகோல்களின் கூறு இல. 2.1.4 இணை பார்க்கவும்.

4. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் தொ.: 011-2667748 தொலைநகல்: 011-2667768, இல. 157ஏ, கின்சி வீதி, கொழும்பு 08 இல் வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (RIDEP) திட்ட முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

5. மேலுள்ள அட்டவணை (1) இல் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி மேலுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும். தொ.பே. 011-2667768, திட்ட முகாமைத்துவ பிரிவு, வளர்ந்துவரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் (RIDEP), இல. 157ஏ, கின்சி வீதி, கொழும்பு 08 என்ற முகவரியில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை 2021.05.05 அன்று தொடக்கம் 2021.05.28 அன்று வரை விலைமனுக்கள் வழங்கப்படும்.

6. விலைமனுதாரர்களுக்கான வழிகாட்டல்கள் மற்றும் சிறிய பணிகளின் பெறுகைக்கான ஜப்பானிய ODA கடனின் கீழ் நிலையான விலைமனு ஆவணங்களின் ஏற்பாடுகளில் ஒப்பந்த பொது நிபந்தனைகள்.

7. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 37/2, பண்டாரநாயக்க மாவத்தை, பதுளையில், திட்ட அமுலாக்கல் பிரிவுக்கான அலுவலகத்தில் 2021.05.17 ஆம் திகதி மு.ப. 10.00க்கு இடம்பெறும். அதே திகதியில் விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்குப் பின் தொழில் வழங்குநர் மூலம் உடன் தள விஜயத்திற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதோடு இலுகபதான (பத்தினிகும்புர) வீதி மற்றும் கீனகொட – உடகம (கிரிவானகொட – உடகம) வீதி தள விஜயத்திற்கான இடங்களாகும்.

8. முத்திரை பொறிக்கப்பட்ட அசல் மற்றும் நகல் விலைமனுக்கள் வெவ்வேறு கடித உறைகளில் இடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் “SL-P116/UP/RR/2020/03 பொதி இலக்கங்களுக்கான விலைமனுக்கள்” என்று குறிப்பிட்டு 2021.05.31 ஆம் திகதி பி.ப. 02.00 அல்லது அதற்கு முன்னர் நிதிப் பிரிவு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது மேலுள்ள இடத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடலாம் என்பதோடு விலைமனுக்களானது மேலுள்ள அட்டவணை (1) இல் உள்ளவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை வடிவமானது இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்டதுமான நிபந்தனையற்ற உத்தரவாதத்தை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

9. விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02 இல் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சின் நிதிப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் இராஜாங்க அமைச்சு,**
**இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு – 02**
**தொலைபேசி: 011-2399735;**
**தொலைநகல்: 011-2329725**
**மின்னஞ்சல்: secretary@pclg.gov.lk**

**திகதி: 05.05.2021**

# வீரர்களுக்கு கொரோனா பாதிப்பு

## ஐபிஎல் போட்டிகள் காலவரையறையின்றி ஒத்திவைப்பு




அணிகளின் வீரர்களுக்கு அடுத்தடுத்து கொரோனா தொற்று உறுதியானதால் ஐபிஎல் போட்டிகள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.




ஐபிஎல் கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஐபிஎல் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கொ ல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோத இருந்தது.

இந் நி லை யி ல் கொல்கத்தா அணி வீரர்கள் வருண் சக்கரவர்த்தி, சந்தீப் வாரியர், ஹைதராபாத் அணி விர்த்திமான் சஹா, டெல்லி அணியின் அமித் மிஷ்ராவுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் எல்.பாலாஜி மற்றும் ஒரு உதவியாளருக்கும் கொரோனா தொற்று உறுதியாகி உள்ளது.

இதையடுத்து நடப்பு ஐபிஎல் 2020 தொடர் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பிசிசிஐ துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார். மே 30ம் திகதி வரை போட்டிகள் நடைபெற விருந்த நிலையில் கொரோனா காரணமாக ஐபிஎல் போட்டிகள் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் போட்டிகளுக்கான புதிய தேதிகள் விரைவில் அறிவிக்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

## சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து திசர பெரேரா ஓய்வு



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சகலதுறை வீரர் திசர பெரேரா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதற்கான கடிதத்தை இலங்கை கிரிக்கெட் சபையிடம் திசர பெரேரா நேற்று (3) சமர்ப்பித்துள்ளார். எனினும், இதுதொடர்பான தீர்மானத்தை இலங்கை கிரிக்கெட் சபை இதுவரை அறிவிக்கவில்லை.

திடீர் ஓய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ள திசர பெரேரா, சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதற்கான காரணத்தை இதுவரை குறிப்பிடவில்லை.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சகலதுறை வீரராக திகழ்ந்த திசர பெரேரா, இலங்கை அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரராகவும் பார்க்கப்பட்டிருந்தார்.

திசர பெரேரா இறுதியாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி 20 தொடர்களில் விளையாடியிருந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை அணியின் முக்கிய வெற்றிகளில் ஒன்றாக, 2014ம் ஆண்டு ரி 20 உலகக் கிண்ணத் தொடர் அமைந்திருந்தது. இந்த தொடரில் சிறப்பாக பிரகாசித்திருந்த இவர், இறுதிப்போட்டியில் சிக்ஸருடன் இலங்கை அணிக்கு கிண்ணத்தை வென்றுக்கொடுத்திருந்தார்.

அதேநேரம், இலங்கை அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் இவர் விளையாடியிருந்தாலும், 166 ஒருநாள் போட்டிகள் மற்றும் 84 ரி 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில், ஒருநாள் போட்டிகளில் 2338 ஓட்டங்கள் மற்றும் 175 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள இவர், ரி 20 போட்டிகளில் 1204 ஓட்டங்கள் மற்றும் 51 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வசந்த காலத்தை முன்னிட்டு ஓட்டப் போட்டி




**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியா 4 ★ 4 கழகத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா கிரகரி வாவிக்கு அருகாமைல் நடைபெற்ற ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு 4★4 ஜீப் சேற்றில் ஓடும் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை சுயார திலின பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை இந்திக்க சஞ்ஜேயும் மூன்றாம் இடத்தை ரங்க அஹங்கமவும் பெற்றுக்கொண்டனர்.

இந்த போட்டியில் இலங்கையில் பல இடங்களிலிருந்து 25 போட்டியாளர்கள் கலந்துக்கொண்டனர். 4★4 கழகத்தின் தலைவர் இசார வீரசிங்க தலைமையிலான குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றுகொண்ட சுயார திலினவிற்கு ஒரு இலட்சம் ரூபா பணப்பரிசும் வெற்றிக் கேடயமும் சான்றிதழும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்ட இந்திக்க சஞ்ஜேவுக்கு 50 ஆயிரம்

ரூபா பணப்பரிசும் வெற்றிக்கேடயமும் சான்றிதலும், மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்ட ரங்க அஹங்கமவிற்கு 25 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கேடயமும்

சான்றிதழும் வழங்கப்பட்டன.






இந்த 4★4 ஜீப் ஓட்டப்போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம அதிதிகளாக நுவரெலியா மாநகர முதல்வர் சந்தன லால் கருணாரட்ன, முன்னாள் நுவரெலியா மாநகர முதல்வரும் தற்போதைய மாநகரசபை உறுப்பினருமான. மஹிந்த தொடம்பே கமகே மற்றும் நுவரெலியா மோட்டார் ரேஸிங் கழகத்தின் தலைவர் உதித்த சமரஜீவ உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துக்கொண்டு வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

## தொழில்சார் சுப்பர் லீக் 2021 உதைபந்தாட்ட போட்டி

# கொழும்பு எப்.சி அணி வெற்றி

**வட கொழும்பு தினகரன், திருகோணமலை குறூப் நிருபர்கள்)**

தொழில்சார் சுப்பர் லீக் 2021 உதைபந்தாட்ட போட்டியின் மூன்றாம் கட்டப் போட்டியின் 15 ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் இச்சுப்பர்லீக் 2021 போட்டிகள் கடந்தமாதம் 19 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பமாகின.



இலங்கையின் பிரபல முன்னணி உதைபந்தாட்ட கழகங்களைச் சேர்ந்த பத்து அணிகள் இச்சுற்றில் மோதின. மூன்று சுற்றுகளாக இடம்பெற்ற இப்போட்டியின் ஒரு சுற்றின் போது பத்து அணிகள் இடையே ஐந்து போட்டிகள் இடம்பெற்றன. நேற்று முன்தினம் (2) இடம்பெற்ற 15 ஆவதும் இறுதிப் போட்டியுமான ஆட்டத்தில் கொழும்பு எப்.சி. அணி எதிர் கொட்டாஞ்சேனை றினோன் அணி மோதின.

இரவு 7.30 க்கு மின்னொளியில் இடம்பெற்ற இப் போட்டியானது இரு அணிகள் மத்தியில் பெரும் பலப்பரீட்சையாக காணப்பட்டது.போட்டியின் 34 ஆவது நிமிடத்தில் கொழும்பு எப்.சி.அணியின் வீரர் எம்.ஜர்வன் ஜோகர் (இல 10) முதலாவது கோலை பெற அவ் அணியின் மற்றுமொரு வீரரும் அணித் தலைவருமான எஸ்.ஜே.எப். மோபஸ் யாபோ ( இல 02) 50 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை தன் அணிக்கு பெற்றுக் கொடுத்தார்.

மிகப்பலம் கொண்ட வீரர்கள் அடங்கிய றினோன் அணியின் வீரர் எம்.பைசர் மொகமட் அமான் ( இல 34) 43 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை தன் அணிக்காக பெற்றார்.02 – 01 என்ற கோல்கள் அடிப்படையில் கொழும்பு எப்.சி. அணியினர் றினோன் அணியினரை மிக இலகுவாக வெற்றி கொண்டனர்.

இப்போட்டியின் போது கொழும்பு எப்.சி.அணியின் எம்.சி.சாமர ( இல 04) 90 ஆவது நிமிடம், அணியின் தலைவர் எம்.ஜே.எம். மோமஸ் யா போ ( இல 02) 14 ஆவது நிமிடங்களில் மத்தியஸ்தர் ஏ.மோகமட் ஜப்ரானால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

றினோன் அணியின் வீரர்களான எம்.சி.எம் றிஸ்னி ( இல 4)52 ஆவது நிமிடத்திலும் எம்.சி.எம்.றிபான்ஸ் ( இல 7) 88 ஆவது நிமிடத்திலும் மத்தியஸ்தர் ஏ.மொகமட் ஜப்ரனால் மஞ்சள் அட்டை எச்சரிக்கை அடையாளமாக காட்டப்பட்டது.இதே அணியின் ஓ. பிரான்சிஸ் அக்பிடி ( இல 99) போட்டியின் 78 ஆவது நிமிடத்திலும் எஸ். ஜூட் ( இல17) 82 ஆவது நிமிடத்திலும் சிவப்பு அட்டை மத்தியஸ்தரால் காட்டப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை 4.30க்கு இடம்பெறவிருந்த அப்கண்ட்றி லயன்ஸ், டி பெண்டரஸ் அணிகள் மத்தியிலான இச்சுற்றில் 14 ஆவது போட்டி ஒத்தி வைக்கப்பட்டமை சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

## இந்தியாவுக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் ரூ.37 இலட்சம் கொரோனா நிதி உதவி




கொரோனா 2வது அலையின் தாக்கம் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் நிலையில் தடுப்பூசி, ஒக்சிஜன் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இந்தியா திணறி வருகிறது.

கொரோனா 2வது அலையின் தாக்கம் இந்தியாவில் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. தினசரி பாதிப்பு நாள்தோறும் உயர்ந்த வண்ணமாய் உள்ளது. பலி எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது.

தடுப்பூசி, ஒக்சிஜன் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இந்தியா திணறுகிறது. பல்வேறு நாடுகள் இந்தியாவுக்கு கொரோனா உதவிகளை அளித்து வருகிறது.

இந்தநிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் , அந்த நாட்டு யுனிசெப் அமைப்பும் இணைந்து இந்தியாவுக்கு கொரோனா உதவித் தொகையாக ரூ.37 இலட்சம் வழங்குவதாக அறிவித்துள்ளது.

## களுதாவளை கெனடி விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு

**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**

களுதாவளை கெனடி விளையாட்டுக்கழக அணியினர் 101ஓட்டங்களை குவித்து 40,000 பணப்பரிசையும், வெற்றிக்கிண்ணத்தையும் தட்டிக் கொண்டு இவ்வாண்டுக்கான சம்பியன் அணியாக மட்டக்களப்பில் தெரிவானது.

களுதாவளை கெனடி விளையாட்டுக்கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101ஓட்டங்களை குவித்து 40,000 பணப்பரிசையும், வெற்றிக்கிண்ணத்தையும் தட்டிக் கொண்டு இவ்வாண்டுக்கான சம்பியன் அணியாக மட்டக்களப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கல்லடி கிளாடியேற்றஸ் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கல்லடி சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் கடந்த இரண்டு வாரங்களாக நடைபெற்று முடிந்தது. இச்சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த சுமார் 64 விளையாட்டுக் கழக அணிகள் பங்குபற்றியன.

இச்சுற்றுப்போட்டியானது 20 ஓவர் மட்டுப்படுத்தப்பட்டு கிரிக்கெட் போட்டியாக நடைபெற்றது.

இவ்வாறு நடைபெற்ற சுற்றுப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு களுதாவளை கெனடி விளையாட்டு கழகமும்,கல்லடி கிளாடியேற்றஸ் விளையாட்டுக்கழகமும் தெரிவு செய்யப்படது.இறுதி சுற்றுப்போட்டி நிகழ்வானது ஞாயிற்றுக்கிழமை(25)பிற்பகல் 2.00 மணியளவில் கல்லடி சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் கிளாடியேற்றஸ் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் அன்டன் நிறோசன் தலைமையில் நடைபெற்றது.




இறுதி சுற்றுப்போட்டியில் கல்லடி சிவானந்தியன் விளையாட்டுக்கழக தலைவர்,செயலாளர்,கிளாடியேற்றஸ் விளையாட்டுக்கழக செயலாளர், பொருளாளர்,ஆலோசகர்கள்,மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டார்கள்.

நாணயச் சுழற்சியில் களுதாவளை கெனடி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று துடுப்பெடுத்து விளையாடியது.இப்போட்டியில் களுதாவளை கெனடி விளையாட்டுக்கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 101ஓட்டங்களை குவித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்துதாடிய கல்லடி கிளாடியேற்றஸ் விளையாட்டுக்கழக அணியினர் 17 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களை தட்டிக்கொண்டது. இச்சுற்றுப்போட்டியின் பெறுபேறுகளுக்கு அமைவாக 101 ஓட்டங்களை குவித்த களுதாவளை கெனடி விளையாட்டுக்கழக அணியினர் முதலாம் இடத்தை தட்டிக்கொண்டு சம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்டு 40,000 ரூபாய் பணப் பரிசிலையும், வெற்றி கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டது.இச்சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தினை கல்லடி கிளாடியேற்றஸ் விளையாட்டுக்கழக அணியினரும் தெரிவு செய்யப்பட்டு 20,000 பணப்பரிசையும்,வெற்றி கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது.மூன்றாவது இடத்தை தட்டிக்கொண்ட விளையாட்டு அணியினருக்கும் 15,000 ரூபா பணப்பரிசும்,கிண்ணமும் வழங்கப்பட்டது.இப்போட்டிகளில் ஆட்டநாயகனாகவும்,தொடர் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்ட பூ.டினேஷூக்கு வெற்றிக்கேடயமும்,பணப்பரிசும் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 5ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.